# சமாதான நோக்கு

மலர் 5 இதழ் 2
ஜூலை ஓகஸ்ட் 2006
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்



## வெளியேறும் உபாயம் தேடும் சர்வதேச சமூகம்

## சமஷ்டிச் சிறப்பிதழ்

இந்திய சமஷ்டி,
நாகலாந்து,
ஆசே, சூடான்,
பொஸ்னியா,
கற்றலோனிய
அனுபவங்கள்






# ஒற்றையா? ஐக்கியமா?

சிரால் லக்திலக/ ரோஹான் எதிரிசிங்க/ பேராசிரியர் ஜெயதேவ உயங்கொட/ பேராசிரியர் சுமனசிறி லியனகே/ பேராசிரியர் டேமியன் கிங்ஸ்பரி/ பேராசிரியர் டெகொலஸ்லோ டொம்ஜான்/ கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து/ கலாநிதி எஸ்.ஐ.கீதபொன்கலன்/ சந்துஜனா ஹடெகொடுவ/ பவானி [illegible] அக்தார் மஜீத்/ ரூபக் சத்தோபாத்யாய்/ ஷோன் ஹோலிஹான்/ மிராக் ரஹீம்/ ஜோன் பராலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதான நோக்கு

மலர் 5 இதழ் 2 ஜுலை-ஓகஸ்ட் 2006

தொலைபேசி 94-011-2565304/06 தொலைநகல் 94-011-4714460 மின்னஞ்சல் cpa@sri.lanka.net

## தேவை புதிய கொள்கைமாற்றம்

கிட்டத்தட்ட ஒரு நான்காண்டு காலம் மனித உயிர்கள் அதிகளவில் காவுகொள்ளப்படுவதையேனும் கட்டுப்படுத்தியிருந்த போர்நிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கை சிக்கலான நிலையை எட்டியிருக்கிறது. இலக்கு வைக்கப்பட்ட படுகொலைகள், சிறிய பழிவாங்கும் நடவடிக்கைகள், மட்டுப்படுத்தப்பட்ட இராணு நடவடிக்கைகள் மற்றும் பொதுமக்கள் மீதான தாக்குதல் என, இலேசான நிலையிலிருந்து மென்தீவிரத் தன்மையை நோக்கி வளரும் ஒரு போராக நிலைமை மாறிவருகிறது.

பேராசிரியர் சுமணசிறி லியனகே குறிப்பிடுவதுபோல, வருடமொன்றுக்கு 1000 பேர் கொல்லப்படும் நிலைமை ஏற்பட்டுவிட்டால் அந்த நாடு முரண்பாட்டு வரைபடத்துக்குள் உட்படும் என்றால், இலங்கை இப்போது அந்த நிலையை எட்டிவிட்டது என்றுதான் சொல்லவேண்டும். அப்படிப் பார்த்தால், 'போரின் அழுக்கான பக்கம் மிகவும் முனைப்புடன் மீண்டும் மேல்நிலைக்கு' வந்துவிட்டது என்று பேராசிரியர் ஜயதேவ உயங்கொட குறிப்பிடுவது மிகச்சரியே.

விட்டுக்கொடுப்புக்களின் ஊடாக சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான மற்றுமொரு வரலாற்றுச் சந்தர்ப்பத்தையும் இலங்கை இழந்துவிட்டது என்று கருதும் சர்வதேச சமூகம், இந்தச் சிக்கலிலிருந்து 'கௌரவமாக வெளியேறும் உபாயம்' தேடத் தொடங்கியிருப்பதாக பேராசிரியர் ஜயதேவ உயங்கொட குறிப்பிடுகிறார். சமாதான முயற்சிகள் இப்போது மீள்-சர்வதேசமயப்படுவதாகத் தென்பட்டாலும், இனிமேலும் இந்தச் சிக்கலில் ஒரு புதிய பாத்திரத்தை வகிக்க சர்வதேச சமூகம் முன்வருமா என்ற சந்தேகத்தையும் அவர் எழுப்புகிறார்.

இந்த நிலையில், 'ஒற்றை'யா, 'ஐக்கிய'மா என்று குழம்பிக்கொண்டிருக்கும் இலங்கை அரசியல் தலைமை, 'அழுத்தம் தரும் பிரச்சினைகளைப் பற்றிப் பேசுவதற்கு அவசியமான புதுமையான கொள்கை மாற்றங்களைச் செய்யத் தயாராக இருக்கவேண்டியது அவசியமாகிறது.

இம்முறை சமாதான நோக்கு இதழ், சமகால அரசியலின் இந்த நிலைமைகள் தொடர்பாகவும், இன முரண்பாட்டுக்குக் காரணமாக அமைந்த கலவரங்கள், இன்றும் தொடரும் வன்முறைகள், இத்தகைய வன்முறைகளிலிருந்து பொதுமக்களைப் பாதுகாப்பதற்கான வழிவகைகள் என்பன குறித்தும் பலரது கருத்துக்களை வழங்குவதுடன், இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சிக்கு உதவக்கூடிய சர்வதேச உதாரணங்களை விளக்குவதாக சமஷ்டிச் சிறப்பிதழ் ஒன்றையும் தருகிறது.

ஆசிரியர் குழு: பாக்கியசோதி சரவணமுத்து, சுனந்த தேசப்பிரிய
தொகுப்பாசிரியர்: கோ.றுஷாங்கன்
கணினி வடிவமைப்பு : EC Ways (Pvt)Ltd. தொலைபேசி : 94-011-5673483
அச்சுப்பதிப்பு : Ekwality Graphics(Pvt) Ltd. தொலைபேசி : 94-011-2389848

" சமாதான நோக்கு" மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் முரண்பாடு மற்றும் சமாதான ஆய்வுப் பிரிவின் வெளியீடு மா.கொ.நி. பொதுமக்கள் கொள்கை விவாதத்திற்கு சிவில் சமூகத்தின் பங்களிப்பும், அதனைப் பலப்படுத்துதலும் அவசியமெனக் கருதுகிறது. முரண்பாடு மற்றும் சமாதான ஆய்வு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மா.கொ.நி. ஆட்சிமுறை மற்றும் மோதல் தவிர்ப்புக் குறித்தான பிரச்சனைகளில் அவதானம் செலுத்துகின்றது. "சமாதான நோக்கு" வெளியீடு இன நெருக்கடியைத் தீர்க்கப் பங்களிப்புச் செய்யும் விடயங்கள் குறித்தும், பொதுமக்கள் மத்தியில் ஒரு கூட்டான செயற்பாட்டை ஏற்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டும் செயற்படுகிறது.

தொடர்புகளுக்கு: சமாதான நோக்கு
24/2, 28ஆவது ஒழுங்கை,
ஃப்ளவர் வீதி, கொழும்பு 7
தொ.பே.: 011 2565304-6, தொலைநகல்: 011 4714460
மின்னஞ்சல்: cpa@sri.lanka.net



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே............


இலங்கையின் அமைதிப் பேச்சுவார்த்தை: குலையும் நம்பிக்கைகள் 03

முரண்பாட்டின் உட்கூறுகள் 05

- தோல்வியில் முடிந்த சமாதானச் செயல்முறை 06
- "கௌரவமாக வெளியேறும் உபாயம்" தேடும் சர்வதேச சமூகம் 08
- சர்வதேச சமூகத்துக்கான புதிய பாத்திரம் 10

சமாதானம், மனிதத்துவம் தொடர்பான ஒரு முன்னெடுப்பாதல் வேண்டும் 12

பொதுமக்கள் கலந்துரையாடலொன்றை ஆரம்பிப்போம் 14

பெரும்பான்மை ஜனநாயகவாதமும் சிறும்பான்மையினரின் உரிமைகளும் 16

கறுப்பு ஜூலை திரும்புமா? 18

தேவாலயத் தாக்குதலில் இலங்கைக் கடற்படையின் பங்கு 22

உண்மையைத் தேடி கெபற்றிகொலாவவுக்கு.. 26

இருதரப்பு யுத்தத்தினிடையே பொதுமக்களின் பாதுகாப்பு 29

உயர் பாதுகாப்பு வலயங்களின் அடிப்படை 32

இந்திய சமஷ்டி முறை செயற்படும் தன்மை 37

இந்திய அதிகாரப்பரவலாக்கல் முறை இலங்கைக்குப் பொருந்துமா? 44

நாகலாந்து: இந்திய சமஷ்டிக்கு மற்றுமொரு சோதனைக்களம் 48

இந்தோனேசியாவுடன் கூட்டாட்சியற்ற ஆசே மாநிலம்- ஒரு ஆய்வு 50

சூடானின் சமஷ்டிக் கொள்கை: 53

சூடான், இந்தோனேசிய சமாதான முயற்சிகள்:
இலங்கைக்கான படிப்பினைகள் 56


பொஸ்னியா, ஹெர்ஸகொவினா:
இரு வாக்குகளால் தோற்கடிக்கப்பட்ட அரசியலமைப்பு மாற்றம் 59

கற்றலோனியாவுக்கு எவ்வளவு அதிகாரம்? 62




























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் அமைதிப் பேச்சுவார்த்தை

# குலையும் நம்பிக்கைகள்



> தொடர்ந்து நடக்கும் வன்முறைச் சம்பவங்கள், இரு தசாப்தங்களாக நமது நாட்டை அரித்துக்கொண்டிருந்த கொள்ளை நோயை மீண்டும் பெருப்பித்துவிட்டது

இலங்கையின் சமாதான முன்னெடுப்புக்களுக்கான காலப்பகுதியில், கடந்த நவம்பர் 2005ல் இடம்பெற்ற தேர்தலிலிருந்துதான் நாட்டில் அமைதியின்மை தொடர்கிறது.

தொடர்ந்து நடக்கும் வன்முறைச் சம்பவங்கள், இரு தசாப்தங்களாக நமது நாட்டை அரித்துக்கொண்டிருந்த இந்தக் கொள்ளை நோயை மீண்டும் பெருப்பித்துவிட்டது போல் தெரிகிறது. பலவீனமான இந்தப் போர்நிறுத்தம் இன்னும் ஒரு மாதத்திற்காவது தாக்குப்பிடிக்கும் என்ற நம்பிக்கை தளர்ந்து வருகிறது. திடமான ஒரு போர் நிறுத்தத்திற்கும் பேச்சுவார்த்தைகளுக்கும் சவாலாகப் பல தடைகள் உள்ளன.

அந்தவிதமான தடைகளில் ஒன்றுதான் கடந்த ஏப்ரலில் ஜெனரல் சரத் பொன்சேகா மீதான தற்கொலைத் தாக்குதல் முயற்சி. விடுதலைப் புலிகளின் தாக்குதல் எனக் கருதப்படும் இது, மட்டக்களப்பில் இரு விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களின் கொலையை அடுத்து நடந்தது.

மிகக் குறைந்த வாக்கு வித்தியாசத்தில் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற மகிந்த ராஜபக்ச, ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமயவின் கூட்டணியுடன் பதவிக்கு வந்தார். தனது சொந்தக் கட்சி (ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி)யின் ஆதரவு, அதன் தலைவியாயிருந்த சந்திரிகா குமாரதுங்கவிடமிருந்து முழுமனதான ஆதரவு என்பன கிடைக்குமா என்ற சந்தேகம் ஜனாதிபதிக்கு அப்போது இருந்தது.

இதனடிப்படையில், ஜே.வி.பி, ஜா.ஹெ.உ. வினரின் ஆதரவிலேயே பெரிதும் தங்கியிருந்த மஹிந்த ராஜபக்சவுக்கு அந்தக் கட்சிகள் இரு நிபந்தனைகளை விதித்தன. ஒன்று, அவர் ஏற்கனவே தமது தேர்தல் விஞ்ஞாபனத்திலே குறிப்பிட்டது போல, அரசியல் யாப்புக்கு ஒவ்வாதது என்று அவர்கள் கருதும் ரணில்-பிரபாகரன் இடையிலான போர்நிறுத்த ஒப்பந்தம் முடிவுக்குக் கொண்டுவரப்படவேண்டும் என்பது. மற்றது, எந்த சமாதான முன்னெடுப்புக்களும் நாட்டின் அரசியலமைப்புக்கு உட்பட்டு, நாட்டின் இறைமையைக் காக்கும் வகையில் அமையவேண்டும் என்பதுடன், இனப்பிரச்சனையில் நோர்வேயின் பங்கை நிறுத்தவேண்டும் என்பது.

தேர்தலையடுத்து வெளிவந்த ஜனாதிபதியின் அறிக்கைகள், அதற்கு முன்னர் அவர் சமாதான முன்னெடுப்புத் தொடர்பாகத் தெரிவித்த கருத்தான, 2002 ஒஸ்லோ பேச்சுவார்த்தைகளில் முடிவெடுக்கப்பட்ட சமஷ்டி அமைப்பைப் பரிசீலனை செய்வதாகச் சொன்னவற்றிலிருந்து முரண்படுகின்றன.

ராஜபக்சவின் தேர்தல் பிரசாரத்தில், அவர் ரணில் விக்கிரமசிங்கவின் 2002/2003 சமாதான முன்னெடுப்புக்களை, அது ஒரு விடுதலைப் புலிகளினால் முன்னெடுக்கப்பட்ட


ஹொஹான் எதிரிசிங்க
சட்டப்பிரிவு: மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்
தமிழில்: வ. விசுவலிங்கம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாசனம் என்று கடுமையாக விமர்சனம் செய்தார். இலங்கையின் பெரும்பான்மையினரான சிங்களவர்களும் முஸ்லிம்களும்



ராஜபக்சவின் இந்த சமஷ்டிக் கொள்கையின் எதிர்ப்பை ஆதரித்தனர். எதிர்பாராத வகையில் வடக்கு, கிழக்கில் வாக்களிப்பதற்கு புலிகளின் வெளிப்படையான அனுமதி தமிழ் மக்களுக்குக் கிடைக்காமல் போனதால், அவர்களின் ஆதரவு ரணிலுக்குக் கிடைக்காமல் போக, வெற்றியடையும் வாய்ப்பின்றியிருந்த ராஜபக்சவுக்கு யோகமடித்தது.

தேர்தல் முடிந்த இரு வாரங்களில் வடக்கு, கிழக்கில் மீண்டும் வன்முறை வெடித்தது. இராணுவம் மற்றும் இதர தமிழ்க் குழுக்கள் மீதான புலிகளின் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன. இராணுவத்தினரும் பதில் தாக்குதல்களை பொது மக்கள் பகுதியில் மேற்கொண்டனர். இந்த நிலையில் போர் திரும்பும் அபாயம் கருதி வடக்கு, கிழக்கிலிருந்து தமிழர்கள் நீண்ட காலத்திற்குப் பின்னர் மீண்டும் தமிழ் நாட்டுக்கு அகதிகளாகச் செல்லத் தொடங்கினர்.

ஜனவரி மூன்றாம் வாரமளவில் அரசியல் நிலைமைகளில் ஒரு கனத்த முன்னேற்றமேற்பட்டது. முதலில், நோர்வேயின் அமைச்சர் எரிக் சொல்ஹைம் வருகை தந்தார். அதைத் தொடர்ந்து இந்தியா, ஜப்பான் முதலிய நாடுகளும் இலங்கைக்கு தமது பிரதிநிதிகளை அனுப்பிவைத்தன. ஐரோப்பிய ஒன்றியம், இரு தரப்புப் பேச்சுவார்த்தைகளுக்கு அழுத்தம் கொடுத்தது. முடிவில், ஜெனீவாவில் பேச்சுவார்த்தை நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது. எனினும், பேச்சுவார்த்தைகளுக்கான பிரதான தலைப்பு யுத்தநிறுத்தம் பற்றித்தான் இருக்கவேண்டுமெனவும், விரிவான,

**வடக்கு கிழக்கில் வாக்களிப்பதற்கு புலிகளின் வெளிப்படையான அனுமதி தமிழ் மக்களுக்குக் கிடைக்காமல் போனதால், அவர்களின் ஆதரவு ரணிலுக்குக் கிடைக்காமல் போக, வெற்றியடையும் வாய்ப்பின்றியிருந்த ராஜபக்சவுக்கு யோகமடித்தது.**

ஆழமான, நீண்டகால அரசியல் தீர்வு பற்றி இருக்காதெனவும் கூறப்பட்டது.

பெப்ருவரி 22ம் 23ம் திகதிகளில் நடந்த யுத்தநிறுத்தம் பற்றிய பேச்சுக்களிலேயே இரு தரப்பாருக்குமான கருத்துக்களில் பெரிய இடைவெளி காணப்பட்டது.

போர்நிறுத்த உடன்படிக்கையில் மாற்றம் செய்யவேண்டுமென்றது அரசதரப்பு. மறுத்தனர் புலிகள்.

இப்பேச்சுவார்த்தைகளில் இன்னொரு இக்கட்டான நிலைப்பாடு, விடுதலைப் புலிகளிடமிருந்து பிரிந்து, கிழக்கில் புலிகளின் பலம் குறைவதற்குக் காரணமாக இருந்த கேணல் கருணா பற்றியது. அரசாங்கத்தின் ஆதிக்கத்திலுள்ள பகுதிகளில் திரியும் ஆயுதக் குழுக்களின் ஆயுதங்கள் களையப்படவேண்டும் என்ற முன்னைய உடன்பாடு, அந்த உடன்படிக்கை நடந்த நேரத்தின் போதிருந்த குழுக்களுக்கு மட்டுமே பொருந்துமெனவும், இதனால், அந்த உடன்படிக்கைக்குப் பின்னர் புலிகளிடமிருந்து பிரிந்த கருணா குழுவுக்கு அது பொருந்தாது என்றது அரசு. "பொருந்தும்" என்று விடுதலைப் புலிகள் வாதித்தனர்.

இலங்கை அரசின் அதிகாரத்திற்குட்பட்ட பகுதிகளில் வேறு ஆயுதக்குழுக்கள் ஆயுதங்களோடு திரியக்கூடாது என நோர்வேயின் பிரதிநிதிகள் அறிக்கை வெளியிட்டனர். இதனால் பிரச்சனைகள் தீரவில்லை. கருணா மற்றும் இதர குழுக்கள் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில், முக்கியமாக கிழக்கில் இன்னும் ஆயுதங்களோடுதான் திரிகின்றனர்.

தெளிவாக்கப்படாத இந்த ஜெனிவா அறிக்கை, கருணா குழுவின் ஆயுதக்களைவு பற்றி இரு தரப்பினருக்கிடையே முடிவு ஏற்படவில்லை எனக் குறிப்பிடுகிறது. இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தை ஏப்ரலில் நடைபெறவிருந்து, இப்போது அது காலவரையறையின்றிப் பின்போடப்பட்டுள்ளது. இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான அதிகரிக்கும் வன்முறைகளால் ஏப்ரலிலிருந்து 300* பேர்வரை பலியாயுள்ளனர். நாளுக்கு நாள் வன்முறை அதிகரிக்கும் இலங்கையின் தற்போதைய தேவை ஒரு நீண்ட, தடையில்லாத யுத்த நிறுத்தமே.

---

300 என்ற இலக்கம் பிந்திய தகவல்களின் அடிப்படையில் தொகுப்பாசிரியரினால் கொடுக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரண்பாட்டின் உட்கூறுகள்

## ஒரு இணக்கப்பாட்டை எட்டமுடியாமைக்கான தோல்வியின் பின்னாலுள்ள சிங்கள, தமிழ் தேசிய கொள்கைகளினுடைய ஒவ்வாத தன்மைகள்



**போரின் அழுக்கான பக்கம் மிகவும் முனைப்புடன் மீண்டும் மேல்நிலைக்கு வந்துள்ளதைக் காணமுடிகிறது.**

இலங்கையும், இலங்கையின் சமாதானச் செயற்பாடுகளும் ஒரு தீவிரமான சிக்கலுக்குள்ளாகியிருக்கிறது. அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான அதிகரித்துவரும் வன்முறைகள் நாட்டை பெரும் நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது. இந்த நெருக்கடி ஆழமாகிக் கொண்டிருப்பதோடு, பிரகடனப்படுத்தப்படாத யுத்தமும் தீவிரமாகிக் கொண்டிருக்கிறது. இதன் மிக அண்மைய பலியே இலங்கை இராணுவத்தின் 3வது உயர் நிலை அதிகாரியாகும். இந்த முரண்பாட்டில் முக்கிய பங்கெடுக்கும் இரண்டு பிரதான பங்காளர்களோ, சர்வதேச சமூகமோ, இலங்கையின் அருகில் உள்ள சக்திமிக்க அயலவரோ பெரும் கலவரத்தை நோக்கிச் செல்லும் இந்த நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாத நிலையிலுள்ளனர்.

தற்போதைய இந்த அதிகரித்துச் செல்லும் வன்முறைத் தளத்தில் 3 விடயங்கள் காணப்படுகின்றன. முதலாவது, பொதுமக்கள் தாக்குதலுக்கான இலக்காக்கப்படுதல். இதன்போது இரு சாராரும் தமது பொறுப்பை மறுதலிப்பதுடன், ஒருவர் இன்னொருவர் மீது குற்றஞ்சாட்டுகின்றனர்.

இரண்டாவதாக, பொதுமக்களுக்கு எதிராகவோ, அன்றி முரண்பாட்டுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராகவோ பழிவாங்கும் நோக்குடனான வன்முறைகள் தூண்டப்படுவது. மூன்றாவதாக, இரு பிரிவினரும் உயர் பெறுமதிவாய்ந்த இராணுவ தளபாடங்கள் மீது அல்லது ஆட்கள் மீது குறிவைக்கின்றனர்.

இது 2003இல் இலங்கை இராணுவ உளவுப் பிரிவுக்கும், விடுதலைப் புலிகளின் உளவுப்பிரிவுக்குமிடையான நிழல் யுத்தம் போலத் தோன்றி, இப்போது மூத்த நிலைப் போராளிகளையும், இராணுவ அதிகாரிகளையும் குறிவைப்பதாகிவிட்டது.

கடந்த சில மாதங்களாக பொதுமக்கள் இலக்குவைக்கப்படும் விதத்தைப் பார்க்கும்போது, முரண்பாட்டின் வெளிப்பாடான போரின் அழுக்கான பக்கம் மிகவும்



பேராசிரியர் ஜெயதேவ உயங்கொட
கொழும்பு பல்கலைக்கழகம்
தமிழில்: க. ஜீவசுதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோல்வியில் முடிந்த சமாதானச் செயல்முறை

முனைப்புடன் மீண்டும் மேல்நிலைக்கு வந்துள்ளதைக் காணமுடிகிறது. இந்தப் பின்னணியில் பார்க்கும்போது இன முரண்பாட்டைத் தீர்ப்பது என்பதைவிட, பழிக்குப்பழிவாங்கும் இந்த நச்சுச்சுழலை இல்லாதொழிப்பதே இன்று எம்முன் உள்ள சவாலாக இருக்கிறது.

உண்மையில் இலங்கையில் போர் ஆரம்பித்துவிட்டதா? சாதாரண பிரஜைகளை மட்டுமன்றி, சிவில் யுத்தங்களை அவதானிக்கும் நிபுணர்களைக் கூடக் குழப்புகின்ற ஒரு கேள்வியாக இது இருக்கிறது. யுத்தம் இப்போது பல பரிமாணங்களைக் கொண்டிருப்பதால் இந்த நிலை ஏற்பட்டிருக்கின்றது எனலாம். 2002ஆம் ஆண்டில் செய்துகொள்ளப்பட்ட போர்நிறுத்த உடன்படிக்கையைத் தொடர்ந்தும் கடைப்பிடிப்பதாக இருதரப்பும் சொல்லிவரும் நிலையிலேயே இந்த நிலைமை தோன்றியிருக்கிறது. மட்டுப்படுத்தப்பட்ட இராணு நடவடிக்கைகள், சிறிய பழிவாங்கும் நடவடிக்கைகள், இலக்குவைக்கப்பட்ட படுகொலைகள் மற்றும் சிவில் சமூகத்தின் மீதான தாக்குதல் என, இலேசான நிலையிலிருந்து மென்தீவிரத் தன்மையை நோக்கி வளரும் பண்பைக் கொண்டதாக இது காணப்படுகிறது. 1996 – 2000 காலப்பகுதிகளில் இருந்தது போன்ற பாரிய இராணு முன்னெடுப்புக்களை மேற்கொள்வதென்பது, இரண்டு பக்கங்களிலும் தற்போது அவசரமானதொரு நிகழ்ச்சித்திட்டமாக இருக்கவில்லை. ஆனால், சுற்றிச்சுழலும் இந்த வன்முறைகளின் தர்க்கம், விரைவாகவோ, அல்லது, காலம் தாழ்த்தியோ போரின் சிக்கலான தன்மையை மாற்றியமைக்கலாம். எனினும், ஒரு உறுதியான அரசியல் பேச்சுக்களில் ஈடுபடுவதென்பது, விடுதலைப் புலிகளுக்கோ, அரசாங்கத்துக்கோ இப்போதைய நிலையில் சாத்தியமாக இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.



*2002 இல் முன்னெடுக்கப்பட்ட சமாதான முயற்சிகள் ஏன் தோல்வி கண்டன? இந்த அரசியல் விவாதத்தில் இக்கேள்விக்கு பல விடைகள் கிடைக்கின்றன. இந்தத் தோல்வி எங்கிருந்து ஆரம்பித்தது என்பதற்கு அப்பால், இதன் காரணிகள் தொடர்பான பயன்மிக்க தகவல்களும் கிடைக்கின்றன.*

போராட்டக் குழுவினர் எப்போதுமே பேச்சுவார்த்தை மூலம் பெறப்படும் தீர்வுகளில் ஆர்வமின்றியிருப்பதுடன், சமாதான நடவடிக்கை மூலமும் பேச்சுவார்த்தை மூலமும் ஒருபக்கச் சார்பான நன்மைகளைப் பெற முயல்கின்றனர் என, சிங்கள தேசியவாதிகள் மற்றும் விடுதலைப் புலிகளை விமர்சிக்கும் விமர்சகர்கள் கருதுகின்றனர். விடுதலைப் புலிகள் இந்த வாதத்தை அரசாங்கத்தின் மீது திருப்பி அரசாங்கம் அரசியல் ரீதியான தீர்வில் நாட்டம் கொள்ளவில்லையெனக் குற்றஞ்சாட்டுகின்றனர். பக்கச்சார்பற்ற நோக்கில் இலங்கையின் முரண்பாட்டைப் பார்ப்பவர்கள், விட்டுக்கொடுப்புக்களினூடாக சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான மற்றுமொரு சந்தர்ப்பமும் இழக்கப்பட்டுவிட்டதாகக் கருதுகின்றனர்.

இன முரண்பாட்டைத் தீர்ப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட எல்லாச் சமாதான முயற்சிகளிலும், விட்டுக்கொடுப்புக்களை மேற்கொள்வது என்பதுதான் அடையமுடியாத ஒன்றாக இருந்துவந்துள்ளது. சமரசத்துக்கான இயலளவு எனும் நோக்கிலிருந்து கணிப்பிடும்போது 2002ஆம் ஆண்டின் சமாதான நடவடிக்கை உண்மையாகவே நம்பிக்கைதரும் ஒரு ஆரம்பமாக இருந்தது. நோர்வேயின் அனுசரணையுடன் ஏற்படுத்தப்பட்ட போர்நிறுத்த உடன்படிக்கையானது, பெரும் சமரசமாகவும், இராணுவம் புலிகள் என்ற இரண்டு பகுதிகளிற்கிடையிலான இராணுவக் கள நிலவரங்களை உறைய வைப்பதாகவும்(செயலற்று) இருந்தது. ஆனால், இந்தச் சமரசமானது இதில் கையெழுத்திட்ட இரண்டு சாரார் தவிர ஏனைய அரசியல் சக்திகளுக்கு வெறுப்பூட்டுவதாய் அமைந்தது. அரசியல் உடன்பாடு இல்லாத நிலையில் உடன்படிக்கை என்பது நீடித்து நிற்க முடியாததாகும். உயிர்த்துடிப்புள்ள அரசியல் ரீதியான சமரசத்தை செய்யும் விருப்பம்(Desire) இல்லாதுவிடின் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான உடன்பாட்டை உருவாக்க முடியாது.

**பக்கச்சார்பற்ற நோக்கில் இலங்கையின் முரண்பாட்டைப் பார்ப்பவர்கள், விட்டுக்கொடுப்புக்களினூடாக சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான மற்றுமொரு சந்தர்ப்பமும் இழக்கப்பட்டுவிட்டதாகக் கருதுகின்றனர்.**

இதில் சுவாரஸ்யம் என்னவெனில், பேச்சுவார்த்தை என்பது இரண்டு முக்கிய விடயங்களூடாக நெருக்கடிக்குள் மூழ்குகிறது. இந்த விடயங்கள் தொடர்பாக கட்சிகள் ஒன்றிணைந்து வரலாற்று ரீதியான அரசியல் சமர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்துக்காகப் பணிபுரியவேண்டும். முதலாவது விடயம் 2002 டிசம்பர் இற்குப்பின் உடனடியாக ஒஸ்லோ வில் இருதரப்பினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட "ஐக்கிய இலங்கைக் குள்" சமஷ்டிக்கான வாய்ப்பைத் தேடுதல் என்பதாகும். 2003ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் வடக்கு, கிழக்கு மாகாணத்திற்கான ஒரு இடைக்கால நிர்வாகத்தை அமைப்ப தற்காக இரண்டு தரப்பினராலும் கொடுக்கப்பட்ட திட்ட முன்மொழிவு கள் என்பது இரண்டாவது விடயமா கும். சுனாமியின் மூலம் கிடைக்கப் பெற்ற சந்தர்ப்பம் கூட அரசியல் சக்திகளினால் ஒரு நீண்டு நிலைத்து நிற்ககூடிய அரசியல் ரீதியான ஒத்துழைப்பை ஏற்படுத்தக்கூடிய நோக்கில் பயன்படுத்தப்படவில்லை. 20 வருட சிவில் யுத்தம் மற்றும் பாரிய மனித அழிவு ஏற்பட்ட பின்னரும் கூட, இன முரண்பாட்டுத் தீர்வுக்கான காலம் கனியவில்லை என்பதையே இவை எடுத்துக்காட்டுகின்றன.

தமிழ், சிங்கள தேசியவாதிகளின் திட்டங்களின் ஒத்துவராத தன்மை களே, ஒரு சமரசத்தை அடையமுடி யாமைக்கான தோல்வியின் உண்மை யான காரணியாகும். ஒரு இனமுரண் பாடு இங்கே இருக்கிறது என்பதை ஏற்கமுடியாது என்று சிங்கள மேலா திக்கத் தேசியவாதிகள் வாதிடுகின்ற னர். இன முரண்பாடு முழுவதையும் ஒரு பயங்கரவாதப் பிரச்சினையாக அல்லது சிறுபான்மையினரின் சதித் திட்டமாக பார்ப்பதுடன், இதற்கு ஒரு இராணுவ ரீதியான தீர்வே தேவை என இவர்கள் கூறுகின்றனர். அரசியல் சிந்தனைகளை வடிவமைப் பதிலும், இந்தச் சிங்களத் தேசியக் கருத்தியலாளர்கள் செல்வாக்குச் செலுத்துகின்றனர். ஒரு மட்டுப்படுத் தப்பட்ட அளவிலான அரசியல் அதி காரப் பகிர்வு என்பது இராணுவ நிர் வாக ரீதியில் நாட்டை ஒன்றிணைத்த பின்பு சாத்தியப்படும் என்பதே இவர்களுடைய கருத்தாக இருக்கி றது. சமஷ்டி அம்சங்களை நீக்கிய இந்திய மாதிரி யுத்தத்திற்குப் பின் னான இலங்கைக்குப் பொருத்தமு டையது எனச் சிலர் வாதிடுகின்றனர்.

சிங்கள தேசியத்தின் இந்தக் குறு கிய பார்வை என்பது, விடுதலைப் புலிகள் போன்ற பிரிவினையை முதன்மைப்படுத்தும் பிரிவினரின் பார்வையுடன் ஒத்துப்போகிறது. விடு தலைப் புலிகளின் சமரச முன்வரைபு என்பது கிட்டத்தட்ட ஒரு கூட்டாட்சி வாதத்தை (Confederalism) ஒத்த தாக உள்ளது. இது உண்மையில் பிராந்திய சுயாட்சி என்பதன் முன் னேற்றமான ஒரு வடிவமாகும். விடு தலைப் புலிகளால் 2003 ஒக்ரோபரில் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால நிர் வாக சபைக்கான முன்மொழிவு என்ப தும் ஒரு கூட்டாட்சிவாதமே (Confederalism). இது அதிகாரத் தைப் பகிர்வது என்பதைவிட, சுயாட்சி என்பதிலேயே அதிக கவனத் தைச் செலுத்துகிறது.

2002இல் ஆரம்பிக்கப்பட்ட பேச்சு வார்த்தை என்பது இவ்விரண்டு பண் பு ரீதியில் வேறுபட்ட இனத்துவ தேசியவாத கற்ப னைகளிற்கிடையே ஒரு இணக்கப்பாட் டைக் கொண்டுவர வில்லை. இதில் விசேட விடயம் என்னவெனில் பேச் சுக்கள் ஒரு சிக்க லான நிலையை எட்டியபோது, இவ் இரண்டு முரண் பட்ட சிந்தனைக ளிற்கிடையேயான வேறுபாடு மீண் டும் கூர்மைய டைந்தது. அண் மைய எதிர் காலத் தில் மீண்டும் ஒரு புள்ளியில் சந்திக்க முடியாத அள வுக்கு, இப்போது அதன் பாதைகள் ஒன்றிலிருந்து ஒன்று அதிகதூரம் விலகிவிட்டன. இராணுவ வலுச்சம நிலையில் ஏற்படக்கூடிய ஒரு தீவிர மான மாற்றம், புதியதொரு அரசியல் உடன்பாட்டுக்கான புதிய சூழ்



**இராணுவ வலுச்சமநிலையில் ஏற்படக்கூடிய ஒரு தீவிரமான மாற்றம், புதியதொரு அரசியல் உடன்பாட்டுக்கான புதிய சூழ்நிலையை உருவாக்கும் என இரண்டு தரப்பினரும் நம்புகின்றனர்.**

நிலையை உருவாக்கும் என இரண்டு தரப்பினரும் நம்புகின்றனர். வெளிப்படையாகச் சொல்லப்படாத, பிரச்சினைக்குரிய இந்த வாதத்தை இப்போது இரண்டு தரப்பினருமே தமக்குள் வைத்திருக்கின்றனர்.

நின்றுபோன அமைதிச் செயற்பாடு களை மீள ஆரம்பிப்பதற்கு அண்மை யில் எடுக்கப்பட்ட முயற்சிகள் தோல் வியடைந்துள்ள ஒரு பின்னணியில், மீண்டும் வன்முறைகள் அதிகரித்தி ருக்கின்றன. இந்தவகையான முத லாவது முயற்சியானது ஜனாதிபதி ராஜபக்ஷவின் அரசால் இந்த வருடம் பெப்ரவரி மாதம் ஜெனிவாவில் மேற் கொள்ளப்பட்டது. கடந்த 3 வருடங்க ளாக நேரடிப் பேச்சுவார்த்தைகள் நிறுத்தப்பட்டிருந்த நிலையில், நோர்வே சமாதான அனுசரணையா ளர்களின் உதவியுடன் இது தொடங் கப்பட்டது. அதிகரித்த போர்நிறுத்த உடன்படிக்கை மீறல்கள், முழு அளவிலான போர் மீளத் தொடங்கி விடும் என்ற அச்சம் ஆகியவற்றின் பின்னணியில்தான் இந்தப் பேச்சு வார்த்தை நடாத்தப்பட்டது.

போர்நிறுத்த ஒப்பந்தத்தை முழு அளவில் நடைமுறைப்படுத்துவதற் கான தமது பொறுப்பை மீளப் புதுப்பிப்பதற்கும், எதிர்காலத்தில் வன்முறைகள் ஏற்படாமல் தடுத்து நிறுத்துவதற்கு உடனடியாக நடவ டிக்கை எடுப்பதற்கும் ஜெனீவாவில் இரண்டு தரப்பினரும் இணங்கிக் கொண்டனர். ஆனால், இது ஆவண வடிவில் மட்டும் அளிக்கப்பட்ட வாக் குறுதியாகவே தொடர்ந்தது. ஜெனீவா உடன்படிக்கை செய்துகொள்ளப் பட்டு இரண்டு வாரங்களுக்குள் ளேயே பாரியளவிலான கொலைகள் மீளத்தொடங்கின. அதிகரித்துச் செல் லும் வன்முறைகளுக்கு இருதரப்பின ருமே ஒருவர்மீது ஒருவர் குற்றம் சுமத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கௌரவமாக வெளியேறும் உபாயம்" தேடும் சர்வதேச சமூகம்

## சமாதான முயற்சிகள் மீள்–சர்வதேசமயப்படுத்தப்படுகிறதா?

வன்முறைகள் அதிகரித்து ஒரு முழு அளவிலான போர் மூளும் அபாயம் தோன்றியிருந்த நிலையில், மே 29இல் விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஓர் பயங்கரவாத இயக்கமாக ஐரோப்பிய ஒன்றியம்



அறிவித்தது. இது பற்றி ஐரேப்பிய ஒன்றியம் கருத்துத் தெரிவித்தபோது, "இதுபற்றி எவரும் ஆச்சரியப்படக்கூடாது" என்றும், ஏனெனில் LTTE இனர் முன்னர் தம்மால் விடுக்கப்பட்ட எல்லா எச்சரிக்கைகளையும் மிகவும் திட்டமிட்டு அசட்டை செய்திருந்தனர் என்றும் கூறியது. "சமாதான முயற்சிகளுக்கான அர்ப்பணிப்பையும், பொறுப்புணர்வையும் வெளிகாட்டி, சமாதானத் தீர்வுக்கும், முரண்பாட்டுக்கான அரசியல் தீர்வுக்கும் அச்சுறுத்தல் விடுக்கக்கூடிய நடவடிக்கைகளைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்" என்று சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு விடுக்கப்பட்ட வேண்டுகோளை விடுதலைப் புலிகள் அசட்டை செய்தமையையே அது இவ்வாறு குறிப்பிட்டது எனலாம்.

இதற்குச் சில நாட்களின் பின்னர் இடம்பெற்ற, ஐரோப்பிய ஒன்றியம், நோர்வே, ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் கலந்துகொண்ட இணைத்தலைமை நாடுகளின் மாநாட்டில், நெருக்கடி நிலை தோன்றிமைக்காக விடுதலைப் புலிகளையும், அரசாங்கத்தையும் குற்றஞ்சாட்டி, "வீழ்ச்சியடைந்துகொண்டு செல்லும் நிலைமையைச் சரிசெய்து, நாட்டை மீண்டும் சமாதானப் பாதையில் இட்டுச்செல்லுங்கள்" என வலியுறுத்தப்பட்டது. பயங்கரவாதம், வன்முறை என்பவற்றைக் கைவிட்டு, பேச்சுவார்த்தைக்குத் திரும்பி, "ஐக்கிய இலங்கைக்குள் அரசியல் தீர்வைக் காண்பதற்கான அரசியல் ரீதியான சமரசங்களைச் செய்ய விருப்பத்துடன் இருக்கவேண்டும்" என இணைத்தலைமை நாடுகளின் அறிக்கை விடுதலைப் புலிகளிடம் வேண்டுகோள் விடுத்தது. அதேநேரம், தமிழர்களின் சட்டபூர்வமான அபிலாஷைகளை கவனத்தில் கொள்ளும்படியும், ஆயுதக் குழுக்களின் தீவிரவாத நடவடிக்கைகளைத் தடுத்துநிறுத்தி, நாடு முழுவதும் உள்ள தமிழ் மக்களை பாதுகாக்குமாறும் இணைத்தலைமை நாடுகளின் அறிக்கை அரசாங்கத்தைக் கோரியது.

"அனைத்து இலங்கையர்களினதும் உரிமைகளை உத்தரவாதப்படுத்தக்கூடிய புதிய ஆட்சிமுறையொன்றை உருவாக்குவதற்கான காத்திரமான அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தத் தயாராக இருப்பதை வெளிகாட்டுக" என இணைத்தலைமை நாடுகள் இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தியமை இங்கு முக்கியமான ஒரு விடயமாகும். "காத்திரமான அரசியல் மாற்றங்கள்" என்ற சொற்பதமானது, சமஷ்டி அரசியல் சீர்திருத்தங்கள் என்பதையே இங்கு குறித்து நிற்கிறது. தமிழ்ப் பிரிவினைவாதம் மற்றும் சிங்கள ஒருமைவாதம் என்பவற்றுக்கான மாற்றுத் தீர்வு சமஷ்டியே என்பதில் இன்று ஒரு சர்வதேச இணக்கப்பாடு ஏற்பட்டிருக்கிறது.

இரண்டு சாராருடனும் "கடுமையாக" நடந்துகொள்வதன்மூலம், அவர்களை பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டு வருவதற்கான நெருக்கடியை ஏற்படுத்தலாம் என இணைத்தலைமை நாடுகள் கருதியிருந்தால், அது ஒரு குறுகியகாலம் மட்டுமே நீடித்த நம்பிக்கையாகவே இருந்தது. தீவிரமான சர்வதேச அழுத்தத்திற்கு பதில் தரும் விதமாக விடுதலைப் புலிகள் அரசாங்கத்தை ஒஸ்லோவில் ஜூன் 8இல் சந்திப்பதற்கு இணக்கம் தெரிவித்தனர். இருதரப்புப்

**தமிழ்ப் பிரிவினைவாதம் மற்றும் சிங்கள ஒருமைவாதம் என்பவற்றுக்கான மாற்றுத் தீர்வு சமஷ்டியே என்பதில் இன்று ஒரு சர்வதேச இணக்கப்பாடு ஏற்பட்டிருக்கிறது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிநிதிகளின் குழுக்களும் ஒஸ்லோவுக்குச் சென்றன. ஜூன் 8ஆம் திகதி எதிர்பாராத சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. விடுதலைப் புலிகளின் அரசியல் குழு அரச பிரதிநிதிகளைச் சந்திக்க மறுத்தது. "இலங்கை அரசு மிகவும் இளநிலையிலுள்ள பிரதிநிதிகளையே அனுப்பியுள்ளது. எனவே இவர்களை நாம் சந்திக்க இயலாது" என இதற்கு விடுதலைப் புலிகள் விளக்கம் கொடுத்தனர்.

இந்த எதிர்பாராத சம்பவத்திற்கு பதில் கொடுக்கும் வகையில் அரசாங்கம் தனது பிரதிநிதிகள் குழுவை மீள அழைத்துக் கொண்டது. போர் ஓய்வு உடன்படிக்கை தொடர்பான தமது பொறுப்பை மீளுறுதிப்படுத்தும் படியும், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் பாதுகாப்பை உறுதிசெய்யுமாறும் இரண்டு தரப்பினரையும் நோர்வே அனுசரணையாளர்கள் கடிதம் மூலம் கேட்டுக்கொண்டமை மிகவும் தர்மசங்கடமான ஒரு விடயமாக அமைந்திருந்தது. இலங்கை அமைதி முயற்சிகளை மீளவும் பழைய நிலைக்கு வளைத்து எடுப்பதில் தாம் மிகச்சிறிய பங்கையே வகிக்கமுடியும் என்றோ, அன்றி, தம்மால் இந்த விடயத்தில் எதுவும் செய்ய முடியாது என்றோ இப்போது சர்வதேச சமூகம் உணர்ந்துகொண்டுள்ளது. இதனால்தான்போலும், "கௌரவமான ஒரு வெளியேறும் தந்திரோபாயம்" பற்றி சர்வதேச செயற்பாட்டாளர்கள் சிந்திக்கத் தலைப்பட்டுள்ளனர்.

அரசாங்கத்துடன் மீண்டும் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கான தன்முனைப்பின் காரணமாகவே தாம் நோர்வேக்கு வருவதாக உறுதியளித்திருந்த விடுதலைப் புலிகள், அரச பிரதிநிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தாமல் ஏன் பின்னடித்தார்கள்?

விடுதலைப் புலிகளால் கொடுக்கப்பட்ட காரணங்களுக்கு அப்பால், 2002இல் ஆரம்பித்த அமைதிப் பேச்சுவார்த்தையை முடிவுறுத்துவதற்கான தமது முக்கிய அரசியல் தீர்மானத்தை விடுதலைப் புலிகள் ஒஸ்லோவில் நடைமுறைப்படுத்தினர். உண்மையில் போர்நிறுத்த உடன்படிக்கை கடந்த மூன்று வருடங்களாகவே கடுமையான நெருக்கடிக்குள் இருந்தாலும், குறிப்பாக ஆட்சிமாற்றத்துக்குப் பிந்திய கடந்த 6 மாத காலப்பகுதியில் இந்த நெருக்கடி நிலை மேலும் அதிகரித்திருக்கிறது. தமது சொந்தப் பிரத்தியேக காரணங்களிற்காக விடுதலைப் புலிகளும், அரசாங்கமும் சமாதான முயற்சிகள் தொடர்பான ஆழ்ந்த திருப்தியின்மையை வெளியிட்டிருக்கின்றனர். தாம் ஆட்சிக்கு வந்தால் தற்போதைய போர்நிறுத்த உடன்பாட்டில் மாற்றங்களைச் செய்வதுடன், புதிய போர்நிறுத்த உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவோம் என்று தேர்தல் தொகுதிகள்தோறும் சிங்கள தேசியவாத அடிப்படையில் வாக்குறுதியளித்தே கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னர் தற்போதை அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பேற்றது. அவர்களுடைய கருத்துப்படி, ஐக்கிய தேசிய முன்னணியால்(UNF) 2002இல் முன்னெடுக்கப்பட்ட அமைதி முயற்சிகள் தேவைக்கு அதிகமாக புலிகளுக்கு அங்கீகாரத்தையும், சலுகைகளையும் கொடுத்துள்ளதுடன், நாட்டின் இறைமையையும், தேசிய பாதுகாப்பையும் ஆபத்தான நிலையில் கொண்டு வந்து விட்டுள்ளது. தமக்கு நன்மை பயக்கும் எந்த விதமான அரசியல் வெளிப்பாடுகளையும் சமாதான முயற்சிகள் தரவில்லை என்பதே, அதுபற்றிய புலிகளின் எதிர்மறையான கணிப்பீடாக இருந்தது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் விடுதலைப் புலிகள் மீதான தடையானது, 2002இல் ஆரம்பிக்கப்பட்ட அமைதி முயற்சிகளை, எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ உத்தியோகபூர்வமாகப் பிரகடனப்படுத்தாது, அரசியல் ரீதியாக முடிவுக்கு கொண்டுவருவதற்கான ஒரு வாய்ப்பை விடுதலைப் புலிகளுக்கு வழங்கியிருக்கிறது. விடுதலைப் புலிகளின் அரசியல்த்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஜூன் 10 ஆம் திகதி ஒஸ்லோவில் வெளியிட்ட அறிக்கை, ஒருதலைப்பட்சமான பாதையில் பயணிக்கும் விடுதலைப் புலிகளின் எண்ணத்தின் மற்றுமொரு அடியெடுத்து வைப்பாக இருந்தது. விடுதலைப் புலிகளின் இந்த ஒருதலைப்பட்சமான முடிவானது, ஐரோப்பிய ஒன்றியத்தின் அவர்களின் மீதான தடைக்கான பதிலாகவும் இருந்தது. இது அமைதி முயற்சிகளில் இருந்து ஐரோப்பிய ஒன்றியத்தை தள்ளிவைப்பதாகவும் இருந்தது. முரண்பாடுகளையும், அமைதி முயற்சிகளையும் மீள்-சர்வதேசமயப்படுத்தும் வியூகம் ஒன்றை விடுதலைப் புலிகள் பரீட்சித்துப் பார்ப்பதை இது தெளிவாக்குகிறது. இந்தியாவுடனான உறவை சுமுகமாக்குதல் என்பது இந்த மீள் சர்வதேசமயப்படுத்தல் என்பதன் ஒரு முதன்மையான அங்கமாக உள்ளது.

**ஐரோப்பிய ஒன்றியத்தின் விடுதலைப் புலிகள் மீதான தடையானது, 2002இல் ஆரம்பிக்கப்பட்ட அமைதி முயற்சிகளை அரசியல் ரீதியாக முடிவுக்குக் கொண்டுவருவதற்கான ஒரு வாய்ப்பை விடுதலைப் புலிகளுக்கு வழங்கியிருக்கிறது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச சமூகத்துக்கான புதிய பாத்திரம்

## ஐ.நா.தலையீடு அல்லது சர்வதேச விசாரணை ஆணைக்குழுவுக்கான தேவை

கிட்டத்தட்ட அதன் கடைசி நிலையை எட்டியுள்ள 2002 சமாதான முயற்சிகளின் தற்போதைய சிக்கல் நிலையின் பின்னணியில், விடுதலைப் புலிகள், இலங்கை அரசாங்கம், சர்வதேச சமூகம் ஆகியன, மூன்று விதமான குழப்பநிலைகளுக்கு முகம் கொடுக்கின்றன.

விடுதலைப் புலிகளை அரசியல் ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் பலவீனப்படுத்தியபடி, போர் ஒன்று மூள்வதைத் தவிர்ப்பதே இலங்கை அரசாங்கம் எதிர்நோக்கும் குழப்ப நிலை ஆகும். சமாதானப் பேச்சு வார்த்தையை சம்பிரதாயபூர்வமாக முடிவுக்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டவர்களாக சர்வதேச சமூகத்தால் தாம் பார்க்கப்படக்கூடாது என்று இலங்கை அரசாங்கம் எண்ணுகிறது. இதற்கிடையில், விடுதலைப் புலி களை இராணுவ ரீதியாகத் தோற்கடிப்பதற்கான சரியான சந்தர்ப்பம் இதுதான் என அரசாங்கத்திற்குள்ளேயே சில குழுக்கள் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கின்றன. நாடாளுமன்றத்தில் 39 ஆசனங்களைக் கொண்டிருக்கும், ஆளும் கூட்டணியின் பிரதான பங்காளியான, சிங்கள கடும்போக்கு வாத மக்கள் விடுதலை முன்னணியானது(JVP), "புலிப் பயங்கரவாதத்தை" ஒரேயடியாகத் தோற்கடிப்பதற்கு முன்வருமாறு அறைகூவல் விடுத்து, "போதுமெனப் போதும்" (enough is enough) என்ற பெயரில் பிரசார இயக்கம் ஒன்றை ஆரம்பித்துள்ளது. போர் மிகவும் அவசியமானதொன்றென்றும், அது வெல்லக்கூடிய ஒன்றே எனவும், JVP யும், இராணுவத்தில் ஒரு பிரிவினரும் சுட்டிக்காட்டியுள்ளன. ஆனால், ஒரு பெரியளவிலான யுத்தம் தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மிகவும் அவதானமாக இருப்பதாகத் தெரிகி றது. ஒரு பெரியளவிலான யுத்தம், நாட்டின்



**ஆகாய மற்றும் கடற்பரப்பு மீதான உரிமையுடன், இறைமையைப் பகிரும் பிராந்திய உப அரசு என்ற தமது சிந்தனையை இராணுவ ரீதியாக வலுப்படுத்துவதே விடுதலைப் புலிகளின் தந்திரோபாயத்தின் மையப்பொருளாக இருக்கிறது**

பொருளாதார மற்றும் உட்கட்டுமானங்களில் பெருத்த அழிவை ஏற்படுத்தும் தாக்குதல்களை ஆரம்பிக்க விடுதலைப் புலிகளுக்கு ஒரு வாய்ப்பைத் தருவதாக அமைந்துவிடும் என அரசியல்வாதிகள் நம்புகின்றனர். விடுதலைப் புலிகளின் வலிந்து தாக்கும் இயலளவைப் பலவீனப்படுத்த உதவக்கூடிய, மென்தீவிர யுத்தத்தைப் பராமரிப்பதுதான் இப்போதைக்கு அரசாங்கம் விரும்புகின்ற தெரிவாக இருக்கிறது.

விடுதலைப் புலிகளின் கணிப்பீடுகளும் மிகவும் சுவாரஸ்யமாக உள்ளன. உத்தியோகபூர்வமாகப் பிரகடனப்படுத்தாவிட்டாலும், 2002ஆம் ஆண்டின் போர் ஓய்வுக்கு வழியனுப்பும் செயற்பாட்டை அவர்கள் செய்துள்ளனர். அடுத்தது என்ன என்பதுதான் இப்போது விடுதலைப் புலிகள் எதிர்நோக்கும் சங்கட நிலையாகும். தாம் ஒருபக்கச் சார்பாக யுத்தத்தின் அடுத்த கட்டத்தை ஆரம்பித்துவிட்டதாகக் குற்றஞ்சுமத்தப்படுவதை அவர்களும் விரும்பவில்லை. ஆனால், அதேசமயம், அரசாங்கத் தின் மென்தீவிரத்தன்மையான யுத் தம், விடுதலைப் புலிகளை இரா ணுவ ரீதியில் காயப்படுத்தியுள்ளது. 2004 இல் விடுதலைப் புலிகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்குத் தளபதியான கருணா விலகிச் சென்று அரசதரப்புடன் இணைந்தமையானது, கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளின் இராணுவ பலத்தையும், கட்டுப்பாட்டையும் கணிசமானளவு பலவீனப்படுத்தியிருக்கிறது. கருணா குழுவினர் மற்றும் ஏனைய ஆயுதக் குழுக்களின் உதவியுடன் விடுதலைப் புலிகளின் முக்கிய தளபதிகள், முக்கிய ஆதரவாளர்கள் அண்மைக்காலங்களில் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான பொதுமக்கள் புலி எதிர்ப்பு ஆயுதக் குழுக்களால் கடத்தப்பட்டும், கொலைசெய்யப்பட்டும் வரும் இந்த நிலைமையானது, தமிழ் மக்களின் பாதுகாவலர்கள் என்ற விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டில் தீவிர சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. அரசாங்கமும் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு எதிராக விமானத் தாக்குதல்கள், கனரக பீரங்கித் தாக்குதல் மற்றும் ஷெல் தாக்குதல் என பழிவாங்கல் தாக்குதல் கொள்கையை ஆரம்பித்துள்ளது.


விடுதலைப் புலிகளின் பார்வையிலும் பாரிய யுத்தம் தேவை என்று அவர்கள் கருவதுவதாகத் தெரிகிறது. ஆனால், விடுதலைப் புலிகளின் அண்மைக்கால உத்தியோகபூர்வ அறிக்கைகளில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருப்பதுபோல, ஆகாய மற்றும் கடற்பரப்பு மீதான உரிமையுடன், இறைமையைப் பகிரும் பிராந்திய உப அரசு என்ற தமது சிந்தனையை இராணுவ ரீதியாக வலுப்படுத்துவதே அவர்களது தந்திரோபாயத்தின் பிரதான விடயமாக இருக்கிறது. போர் புரிவது என்பது அரசை/நாட்டை உருவாக்கும் ஒரு செயற்பாடு என்பதாகக் கருதப்படின், முரண்பாட்டின் இனிவரும் கட்டம் ஒரு அரசை/நாட்டை உருவாக்கும் செயற்பாட்டை வலுப்படுத்தும் விடயமாகவே விடுதலைப் புலிகளினால் பார்க்கப்படும். இந்த ஆபத்தான எதிர்வுகூறலுக்கு எவராவது இடையூறு செய்தால், ஒரு பெரியளவிலான யுத்தத்தை தர்க்கபூர்வமாகத் தடுக்கலாம்.

சர்வதேச சமூகம் பற்றிய விடுதலைப் புலிகளின் தற்போதைய புதிய மனப்பாங்கை இங்கு ஆய்வுசெய்வது பயனுடையதாக இருக்கும். ஐரோப்பிய ஒன்றியத்தின் தடையின் பின் சர்வதேச சமூகத்தின் பாத்திரத்தை மீள்வரைய்றை செய்வதற்கான சாத்தியப்பாடுகளைக் கண்டறிவது குறித்து அவர்கள் சிந்திக்கத் தலைப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. சமாதான முயற்சிகளின் அனுசரணையாளர்கள் என்ற வகையில் நோர்வேயின் மட்டுப்பாடுகள் குறித்து விடுதலைப் புலிகளும் தெளிவாக உணர்ந்துள்ளனர். புலிகளுடைய பார்வையில், அரசாங்கம் பேச்சுவார்த்தையின்போது அளித்த வாக்குறுதிகள் அமுல்ப்படுத்தப்படுவதை நோர்வேயால் உறுதிப்படுத்த முடியாது என்றே கருதப்படுகிறது. வலிமையான அனுசரணைப் பணிக்கு, இதைவிட வலுவான ஒரு சக்தியே பொருத்தம் என்று அவர்கள் கருதக்கூடும். ஆனால், சர்வதேச சமூகம், விடுதலைப் புலிகள் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் செயற்பாடுகளில் வெறுப்பும் ஏமாற்றமும் அடைந்திருக்கும் நிலையில், இது போன்றதொரு பொறுப்பை எவரும் தாமாக முன்வந்து ஏற்கும் நிலை இல்லை என்றே கூறலாம்.

இந்த நிலையில், சமாதான முயற்சிகளின் சர்வதேச பாதுகாவலர்களுக்கு அதிக தெரிவுகள் இல்லாதிருப்பதாகத் தெரிகிறது. விடுதலைப் புலிகளைத் தடைசெய்ததன் மூலமும், டோக்கியோ மாநாட்டு அறிக்கையின் மூலமும், இலங்கை தொடர்பான தமது பொறுப்பை சர்வதேச சமூகம் மீள உறுதிப்படுத்தியுள்ளது. ஆனால் உள்ளூர் பங்காளர்கள் சமாதானத்துக்காக இணைந்து பணியாற்றும் மனநிலையில் இல்லாத சந்தர்ப்பத்தில், சர்வதேச செயற்பாட்டாளர்களால் என்ன செய்யமுடியும் என்பதில் மட்டுப்பாடுகள் உள்ளன. ஆர்வமற்றிருப்பினும், ஐக்கிய நாடுகள் சபையே அடுத்ததாக இலங்கைப் பிரச்சினையில் தலையிடும் நிலையில் இருக்கலாம்.

எனினும், போர் மூண்டுவரும் நிலைமையானது, ஒரு புதிய பாத்திரத்தை வகிக்கும் இடைவெளியை சர்வதேச சமூகத்துக்குத் திறந்துவிட்டிருக்கிறது. வன்முறைச் செயற்பாடுகள் தொடர்பாக விசாரணை செய்வதற்கான சர்வதேச ஆணைக்குழு ஒன்றை உருவாக்கும் வாய்ப்பை இது ஏற்படுத்தியுள்ளது. அண்மையில் கெப்பிட்டிக்கொலாவையில் நடைபெற்ற பஸ் பயணிகள் மீதான படுகொலை உட்பட, சிங்கள, தமிழ் பொது மக்களுக்கு எதிராக கோரமான வன்முறைகள் நடைபெற்றுள்ளபோதிலும், இதுதொடர்பாக விரிவான விசாரணை நடத்தவோ, குற்றவாளிகளை இனங்காண்பதற்கோ வேண்டிய அதிகாரமோ, இயலளவோ போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு இல்லை. இவ்வாறான போர் குற்றங்கள் தொடர்பாக விடுதலைப் புலிகளும், அரசாங்கமும் ஒருவர் மீது இன்னொருவர் குற்றம்சாட்டுதலும், பதில் குற்றம் சாட்டுவதும் நிகழ்ந்து கொண்டிருக்க, வடக்கு, கிழக்கில் வேறு ஆயுதக் குழுக்களும் பொது மக்களுக்கு எதிராக இவ்வாறான குற்றச்செயல்களைத் தடையின்றி செய்து கொண்டிருக்கின்றன. விசாரணை நடத்தக்கூடியதும், பணிப்புரைகள் வழங்கக்கூடியதுமான அதிகாரத்தையுடைய ஒரு சர்வதேச ஆணைக்குழுவை உருவாக்குவதைப்பற்றி சிந்திப்பதற்குரிய நேரம் இப்போது கனிந்திருக்கிறது. இது ஒரு சிறிய குழுவாக இருந்தாலும், கட்டுக்கடங்காத முரண்பாடுகளை மனிதப் பண்புள்ளதாக்குவது தொடர்பாக எடுத்துவைக்கப்படும் ஒரு அடியாக அது இருக்கும்.


இறுதியாக, நாட்டின் இன அரசியல் ஆயுத முரண்பாடுகளை முடிவுறுத்தல் தொடர்பாக மூன்று அடிப்படையான பாடங்களை இலங்கை நெருக்கடி எமக்குக் கற்றுத்தருகிறது. தோல்வியில் முடிந்த ஒவ்வொரு அமைதி முயற்சியும், முரண்பாட்டை புதிய சொல்லில் மீள்வரையறை செய்கிறது. நீடித்த யுத்தமொன்றை முடிவுக்கு



கொண்டுவர நீடித்த அமைதி முயற்சி தேவைப்படுகிறது. நாட்டில் காணப்படும் பல்வேறான இன, தேசிய வாதிகளின் திட்டங்களுடனான பேச்சுவார்த்தையின் பக்கபலமான ஆதரவின் மூலமே, விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்துக்குமிடையிலான அரசியல் பேச்சுவார்த்தையின் மூலம் ஒரு தீர்வை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமாதானம், மனிதத்துவம் தொடர்பான ஒரு முன்னெடுப்பாதல் வேண்டும்

சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதில் அரசாங்கம் முகம் கொடுத்துள்ள சவால்கள் எவை என்பன பற்றிக் கலந்துரையாடுவது இப்போது காலப்பொருத்தமான ஒரு விடயமாக உள்ளது.

முரண்பாட்டுக்குள்ளாகியுள்ள இரண்டு தரப்புக்களுக்குமிடையே நாம் காணும் ஒரு பொதுவான தன்மை, அவை இரண்டுமே சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்லவேண்டும் என்ற நோக்கத்தில் ஒத்த எண்ணத்தைக் கொண்டிருக்கின்றன என்பதுதான். அவ்வாறில்லாவிடின், அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான தமது பரந்த செயற்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான உபாயமாக சமாதான முயற்சிகளை இவர்கள் பயன்படுத்துகின்றனர்.

தீர்வொன்றைப் பெற்றுக் கொள்கையில் சமஷ்டி முறைமைக்குச் செல்ல வேண்டுமெனக் கூறுபவர்கள் கூட "பெடரல்" என்ற சொல்லுக்கு அஞ்சுவதானது கவலைக்குரிய ஒரு விடயம். ஆனால், எம்மால் சில காலம் முன்னெடுத்துச் செல்லப்பட்ட நிலைப்பாடுகளை ஒரு அடியாவது நாம் பின்னோக்கி வைத்தல் ஆகாது.

துரதிர்ஷ்டவசமாக தற்பொழுது பின்னோக்கிச் செல்லும் நிலைப்பாட்டையே இங்கு காணக்கூடியதாயுள்ளது. அதனைத் தடுத்து நிறுத்துவதற்கு சிவில் அமைப்புக்களுக்குப் பாரிய பொறுப்புள்ளது.

தற்போதுள்ள ஜனாதிபதியினதும் அரசாங்கத்தினதும் அடிப்படை நோக்கம் சமாதானத்தை ஏற்படுத்துவது என்பதைவிட, அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்வதாகவே இருக்கிறது என்பதைத் தெளிவாகக் காணமுடிகிறது. ஜனாதிபதி இங்கு பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளார். மக்கள் கூட்டமைப்பின் கொள்கைகளின் அடிப்படையிலேயே அவர் இந்தப் பதவிக்கு வந்துள்ளார். அவருக்கு தமது அரசியல் நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதில் பல நெருக்கடிகள் தோன்றியுள்ளன. கூட்டமைப்பினை எவ்வாறு முன்னெடுத்துச் செல்வது என்பது அவர் எதிர்நோக்கும் பிரதான சவாலாகும்.

ஜே.வி.பி., ஹெல உறுமய ஆகியவற்றின் ஒத்துழைப்பினைப் பெற்றுக்கொள்ளாது, ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஜனாதிபதி இணைந்திருந்தால் மேலும் சக்திமிக்க அடிப்படையொன்றினை ஏற்படுத்தியிருக்கமுடியுமென சிலர் கருத்துத் தெரிவிக்கின்றனர். அதில் ஏதோவொரு உண்மையும் இருக்கவே செய்கிறது. ஏனெனில்,



பேராசிரியர் சுமனசிறி லியனகே
பேராதனைப் பல்கலைக்கழக அரசறிவியல்துறை விரிவுரையாளர்
தமிழில்: நயனகணேசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விரு கட்சிகளும் அதிகாரப்பகிர்வை மேற்கொள்வது தொடர்பில் ஒரேவிதமான நிலைப்பாடுகளைக் கொண்டுள்ளன. ஆனால், ஐக்கியத் தேசியக் கட்சியுடன் ஏற்படுத்திக்கொள்ளும் அத்தகைய உடன்படிக்கையொன்று விரைவில் உடைந்துபோவதற்குரிய வாய்ப்புக்களே அதிகம் உண்டு.

தேவையெனில் நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத்தேர்தலொன்றை நடாத்துவதற்கு ஜனாதிபதிக்கு முடியும். ஆனால், அவ்வாறு நடைபெற்றால் வெளியிலிருந்து ஆர்ப்பாட்டங்களிலீடுபடுவதற்கு மக்கள் விடுதலை முன்னணி தயாராகியிருந்தது என்பதனை ஜனாதிபதி அறிந்திருந்தார். அதனால், தற்போது இருக்கும் கூட்டமைப்பை அப்படியே கொண்டிழுப்பதற்கு அவர் நினைத்துள்ளார் போலத் தெரிகிறது.

ஜனாதிபதி முகம் பொடுக்கும் அடுத்த பிரச்சினை பொருளாதார நெருக்கடியாகும். இந்தியா, பங்களாதேஷ் போன்ற அண்டை நாடுகள் வேகமான பொருளாதார அபிவிருத்தியை நெருங்கிக் கொண்டிருக்கின்றன. இந்நிலைமைகளில், இந்தியா, இலங்கையுடன் நெருங்கிய பொருளாதாரத் தொடர்புகளைப் பேணுவதற்கு இடமுண்டு. ஆனால், இதற்கு இலங்கையில் சமாதானம் ஏற்படுத்தப்படவேண்டியது அவசியமாக இருக்கிறது.

ஜனாதிபதியின் நிகழ்ச்சித் திட்டத்தில் சமாதானத்திற்கு அதிக முக்கியத்துவம் வாய்ந்த இடம் ஒதுக்கப்படவில்லை. ஆனால், பொருளாதார நெருக்கடி குறித்து அவர் கவனம் செலுத்தா விட்டாலும், சமாதானத்தினை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டிய நிலைமை காணப்படுகிறது.

2001 -2002 காலப்பகுதிகளில் அரசாங்கத்தைப்போன்றே விடுதலைப் புலிகள் அமைப்பிற்கும் சர்வதேச ரீதியில் பாரிய அழுத்தங்கள் கொடுக்கப்பட்டன. அமெரிக்காவின் பயங்கரவாதத்துக்கு எதிரான போர் பேச்சுவார்த்தைக்கான இணக்கத்தை ஏற்படுத்துவதில் பாரிய தாக்கத்தைச் செலுத்தியது. இதைவிட, புரிந்துணர்வு உடன் படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு அரசாங்கத்தை நிர்ப்பந்தித்த மற்றைய காரணி பொருளாதார நெருக்கடியாகும். இதற்குத் தீர்வு காண்பதற்கு சமாதானச் செயற்பாட்டுக்கு கைக்கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் பிரதான தரப்புக்கு ஏற்பட்டது.

ஆனால், தற்போதைய நிலைமையில் அரசாங்கத்தின் அதிகார நிகழ்ச்சித் திட்டத்திற்குள் சமாதானம் துணை அம்சமாக மட்டுமே உள்ளது. விடுதலைப் புலிகள் தொடர்பிலும் இதே நிலைப்பாடே காணப்படுகிறது. முழு யுத்தத்தினையும் ஒரு மரமாக எடுத்துக்கொண்டால், அது மரமல்ல, அனைத்து கிளைகளுக்கும் சென்றுள்ள ஒரு றைசோமே என்ற ஒட்டுண்ணித் தாவர இனமான கொடியாகும் என்பது தெளிவாகத் தெரிகிறது.

விடுதலைப் புலிகள் அமைப்பை ஒரு துணை அரசாங்கமாக எடுத்துக்கொண்டால் வெளியிலிருந்தே அப்பிரச்சினையை நோக்க வேண்டும். இப்பிரச்சினையை அரசாங்கம், விடுதலைப் புலிகள் அமைப்பு மற்றும் மக்கள் என அனைவருமே மூன்று விதமாகக் காண்கின்றனர். ஆனால், சமாதானத்தினை அது நல்லதை ஏற்படுத்தும் ஒன்று என்ற அடிப்படையிலேயே பார்க்க வேண்டும். இதனை மனிதத்துவம் தொடர்பான புதிய பிரச்சினையாக்கிக் கொள்ளல் வேண்டும். அதற்கு அச்சமின்றிய முன்னெடுப்புத் தேவை.

சமாதானச் செயற்பாடுகளை முன்கொண்டு செல்வதில் விடுதலைப் புலிகள் அமைப்பு மற்றும் அரசாங்கம் என்பன பெற்றுக்கொடுக்கும் சந்தர்ப்பங்களின் மூலம் சமாதானத்தை சிறந்த மற்றும் பெறுமதிமிக்கதாக எவ்வாறு முன்கொண்டு செல்வது என்பது அவதானத்திற்குரியதாகும்.

ஆனாலும், தற்போது அடிப்படைவாத நிலைமையே நிலவுகிறது. கடந்த சில மாதங்களில் அதிகரித்த இந்நிலைமைக்கேற்ப ஒரு மாதத்திற்கு நூற்றுக்கு அதிகமானோர் உயிரிழக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இத்தொகை வருடமொன்றுக்கு 1200 ஆகும். தற்பொழுது இலங்கை முரண்பாட்டு வரைபடத்திற்குட்பட்ட நாடாகும். வருடமொன்றுக்கு 1000 ற்கும் அதிகமான மரணங்கள் இடம்பெறும் நாடுகள் அவ்வாறே நோக்கப்படும்.

இது யுத்தத்தை நோக்கிச் செல்கின்ற ஒரு நிலைமையே ஆகும். இரு தரப்பினரும் படிப்படியாக யுத்தத்தினை நோக்கி செல்வதனைக் காணக் கூடியதாயுள்ளது. நாட்டில் தற்போது நிலவும் மோதலுக்கு தீர்வு காணக்கூடிய வழிவகைகளை கீழ் குறிப்பிடப்படும் விதத்தில் வரிசைப்படுத்த இயலும்.

01. ஜனநாயகத் தீர்வொன்று. அது அதிகாரம் பகிரப்பட்ட, பெரும்பான்மை ஜனநாயகத்தின் ஏகாதிபத்தியத்தைத் தடுக்கும், ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு ஜனநாயக முறைமைக்கு கட்டுப்படுதல் வேண்டும்.

02. இனவாத அடிப்படையிலான தீர்வொன்று.

ஒன்று அல்லது இரண்டு மூன்று அரசுகளாகப் பிரிந்து போதல். இதற்காக யுத்தம் செய்யவேண்டிய அவசியமில்லை.

இலங்கையில் மோதல்கள் அதிகரித்த சந்தர்ப்பங்களில் மோதல் அதிகளவில் இடம்பெறும் பிரதேச மக்கள் இந்தியாவில் குடியேறுவதனை பழக்கப்படுத்திக் கொண்டுள்ளனர். இதிலிருந்து நாம் விளங்கிக்கொள்வது என்னவெனில், இந்தியாவுடன் இணைந்துகொள்வதே இனப்பிரச்சினைக்கான ஒரே தீர்வு என்பதேயாகும். இப்பிரச்சினைக்கான தீர்வினை யாராவது ஒருவரின் மூலமாகவாவது முன்வைப்பதற்கு இடமுண்டு என்பதனையே இது புலப்படுத்துகிறது.

இவ்வாறான பல தீர்வுகள் இருக்கலாம். நாம் பிரச்சினையினை அதிகாரத் திட்டத்திற்கு அப்பாலே பார்த்தல் வேண்டும். அதன்போது பயமின்றித் தலையீடு செய்தல் முக்கியமானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது மக்கள் கலந்துரையாடலொன்றை ஆரம்பிப்போம்



யுத்தமொன்று வெளிப்படையாகப் பிரகடனப்படுத்தப்படாவிட்டாலும், குறைந்த பட்சம் நாட்டில் யுத்தச் சூழ் நிலையொன்று உள்ளது. ஆயுததாரிகள் மட்டுமன்றி சிவிலியன்களும் தொடர்ச்சியாகப் படுகொலைசெய்யப்பட்டு வருகின்றனர். கடந்த சில மாதங்களில் இந்நிலைமை அதிகரித்துள்ளது.

ஓர் இடத்தில் நிலைகொள்ளும் இந்நெருக்கடி தீர்க்கப்படவேண்டுமாயின் அனைத்துத் தரப்புக்களும் இணைந்து பேச்சுவார்த்தை மூலம் அரசியல் ரீதியில் தீர்வொன்றை பெற்றுக்கொள்ளல் வேண்டும். அரசியல் ரீதியிலான தீர்வு சமஷ்டி அடிப்படையிலான தீர்வாக அமையவேண்டுமென்றே நாம் நம்புகின்றோம்.

யுத்த அடிப்படையில் நெருக்கடிக்கு தீர்வுகாண முடியாது. நியாயமான முறையில் அதிகாரப்பரவல் சமஷ்டி மாதிரி தொடர்பாகவே நாம் அவதானம் செலுத்துகின்றோம்.

2002 ஆம் ஆண்டு ஒஸ்லோ பிரகடனத்திற்கேற்ப அரசியல் ரீதியிலான தீர்வுக்குச் செல்லமுடியுமென இரு தரப்புக்களிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. தொன்றுதொட்டு தமிழ் மக்கள் வாழ்ந்த சூழலுக்குள் அவர்களுடைய மொழி ரீதியான மற்றும் கலாசார ரீதியான தனித்துவங்களைப் பாதுகாக்கும் வகையில், வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் சுயாட்சியை உறுதி செய்யும் வகையில் சமஷ்டி முறைமையொன்றுக்குள் ஐக்கிய இலங்கையைக் கட்டியெழுப்பும் அந்தத் தீர்வு, அனைவரும் ஏற்றுக்கொள்ளும் ஒன்றாக அமைதல் வேண்டுமென்பதே இரு தரப்பினரும் ஏற்றுக்கொண்ட விடயமாகும்.

எமது நாட்டிற்குள் நிலையான அரசியல் தீர்வுக்கு வரமுடியுமா என்பது மிகப்பெரிய சவாலாகும். நடைமுறையில் நிலவும் சூழ்நிலைக்கு ஏற்ப மனித உரிமைகள் மீறப்படுதல் மற்றும் வன்முறைகளை நிறுத்துதல் தொடர்பாகவும் சிந்திக்கவேண்டியுள்ளது.

நிலவும் சூழலுக்கமைய விடுதலைப் புலிகள் அமைப்பு ஐரோப்பிய ஒன்றியத்தின் தடைக்குட்பட்டுள்ளது. சர்வதேச ரீதியில் ஏற்பட்டுள்ள நிலைமைகளுக்கு ஏற்ப விடுதலைப் புலிகள் அமைப்புடன் பேச்சுவார்த்தைக்கு செல்ல முடியுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

ஆனால், இங்கு முக்கிய விடயம் யாதெனில், அரசாங்கம் ஒற்றையாட்சி என்ற கோட்பாட்டிலிருந்து மீளவேண்டுமென்பதுடன், விடுதலைப் புலிகள் அமைப்பும் தனி இராச்சியம் என்ற கோட்பாட்டிலிருந்து விலகவேண்டும்.

விடுதலைப் புலிகள் அமைப்பு தடைசெய்யப்பட்டதிற்கு சமமாக இலங்கை அரசாங்கமும் சர்வதேச கண்காணிப்புக்குட்படும் என்பதனை நினைவூட்டல் வேண்டும். மனித உரிமைகள் தொடர்பாக இலங்கை அரசாங்கத்திற்கு விசேட பொறுப்புள்ளது.

அரசியல் ரீதியான தீர்வில் மட்டுமே இனநெருக்கடியை தீர்க்கமுடியுமென்பதை இரு தரப்பினரும் புரிந்து கொண்டுள்ளமை இங்கு அடிப்படைப் பிரவேசமாகும். அது தொடர்பாக பொதுமக்கள் விவாதமொன்றை ஏற்படுத்த வேண்டும். சமஷ்டிக் கோட்பாடு மற்றும் மனித உரிமைகள் தொடர்பான விடயங்கள் அவ்விவாதத்திற்குள் உள்ளடங்க வேண்டும்.

இற்றைக்கு இருபது வருடங்களுக்கு முன்னர் 13வது அரசியல் யாப்பு சீர்திருத்தத்தின் கீழ் மாகாணசபை முறை தாபிக்கப்பட்ட போது நாட்டில் பல விமர்சனங்கள் எழுந்தன. ஆனாலும் தற்போதைய சூழ்நிலையில் விமர்சகர்களும் மாகாணசபை முறையினை ஏற்றுக் கொண்டுள்ளனர். மாகாணசபையினூடாக எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் அவ்வாறே ஈடுசெய்யப்படவில்லையென்பதை நாம் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால், அதிகாரப்பரவலாக்கல் தொடர்பில், அது முதலாவது நடைமுறைப் பிரயோகம் என்பது இந்நாட்டின் வரலாற்றில் இணைந்துள்ளது.

கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர்

தமிழில்: நயனகணேசன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கையின்மை ஆழமாதல்





கலாநிதி எஸ். ஐ. கீதபொன்கலன்
கொழும்பு பல்கலைக்கழக அரசியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர்
தமிழில்: நயனகணேசன்

இலங்கையின் தேசிய அரசு தொடர்பான நெருக்கடி தற்போதுள்ள மிகவும் முக்கியமான பிரச்சினையாகும். தமிழ் மக்கள் 1977 ஆம் அண்டு முதன் முதலில் தனி இராச்சியம் கோரியிருந்தனர். அது சமஷ்டி கட்டமைப்பூடாகவே பிரகடனப்படுத்தப் பட்டது. நம்பிக்கை பாதிப்படைந்த காரணத்தினால் ஒற்றையாட்சிக் கட்டமைப்பினுள் பிரச்சினையை தீர்த்துக் கொள்ள முடியாத நிலை தோன்றியுள்ளது.

2002ஆம் ஆண்டில் ஒஸ்லோவில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் இணங்கிக்கொண்ட சமஷ்டித் தீர்வு தொடர்பாக தமிழ் மக்கள் மகிழ்ச்சியடைந்தனர். சமஷ்டி முறைமையென்பது தமிழ் மக்களின் அபிலாஷைகள் ஈடுசெய்ய உதவக்கூடியதொன்றா கும். இருபது வருட காலப் போராட்டத்தினூடாக தமிழீழத்தை அடைந்து கொள்ள முடியவில்லை. யுத்தம் காரணமாக தமிழ் மக்கள் பெரும் பாதிப்புக்களுக்கு முகம் கொடுக்கின்றனர். இந்தியா தனி நாட்டை ஆதரிக்கும் என எதிர்பார்க்க முடியாது. எனினும் விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு சமஷ்டி அமைப்பின் மீது நம்பிக்கை அற்றுப்போய்விட்டது. அவர்களுக்கு சமஷ்டி முறைக்கும் அப்பாலான தீர்வே தேவைப்படுகின்றது. இது இடைக்கால தன்னாட்சி முன்மொழிவில் தெளிவாக பிரகடனப்படுத்தப் பட்டிருந்தது.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் பேச்சுவார்த்தை நடைபெற்றபோது விடுதலைப் புலிகள் நெகிழ்ச்சித்தன்மையினை வெளிப்படுத்தியிருந்தனர். ஜனாதிபதி தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்றதனூடாக சமஷ்டி முறையிலிருந்து அரசாங்கம் விலகுவதாகவே தமிழ் மக்கள் அதனைப் பார்த்தனர். இது தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கையின்மையை ஆழமாக்கியது. அதன் பின்னர் முரண்பாட்டின் இரு தரப்புக் களுக்குமிடையில் இடைவெளி அதிகரித்தது.

இன்று பல்வேறு தரப்பினர் இலங்கைக்குஇந்திய சமஷ்டி முறைமையினை பரிந்துரைக்கின்றனர். ஆனால் அது இலங்கைக்குப் பொருந்தும் என்று கூறமுடியாது. அங்கு மத்தியில் பலம் அதிகம். அதனால் இதுபற்றி புதிதாகச் சிந்தித்தல் வேண்டும்.

தமிழ் மக்களுக்கு தென்னிலங்கைத் தலைவர்கள் மீது நம்பிக்கையில்லை. இன்றுள்ள நிலையில் பேச்சுவார்த்தையை முன்கொண்டு செல்ல முடியுமென சிந்திக்க முடியாது. பேச்சுவார்த்தை ரீதியான தீர்வுக்குள்ள வாய்ப்புக்களும் குறைவு. பிறிதொரு இராச்சியம் என்பது இலகுவான திட்டமொன்றல்ல என்பதனை விடுதலைப் புலிகளும் அறிவர். அவ்வாறான தொன்றை இந்தியாவும் விரும்பாது. விடுதலைப் புலிகள் அமைப்பு யுத்த ரீதியில் பலம் வாய்ந்ததொன்றல்ல என தெற்கின் மக்கள் சிந்திக்கின்ற னர். எனவே மாற்றமொன்று ஏற்பட வேண்டுமாயின் யுத்தரீதியில் அவர்கள் பலம் வாய்ந்தவர்களென நிரூபிக்க வேண்டியிருக்கும்.


இலங்கையில் எந்தவொரு அரசாங்கமும் தமிழ் மக்களுக்கு நியாயத்தினை வழங்காதென்பதுடன் மஹிந்த ராஜபக்ஷவிற்கு குறுகிய காலத்தினை பெற்றுக்கொடுப்பதற்கு தயாரென பிரபாகரன் மாவீரர் தின உரையில் தெரிவித்திருந்தார். அந்த கால அவகாசம் நெருங்கி வருவதாகவே தெரிகிறது. விடுதலைப் புலிகளும் அரசாங்கமும் இப்பிரச்சி னையை யுத்த ரீதியில் வெற்றி கொள்ள முடியுமென நினைக்கின்றனர்.

அரசாங்கம் பேச்சுவார்த்தைக்குத் தயாரெனக் காட்டும் உபாய முறைகளுக்கு முக்கியத்துவமளிக்கிறது. ஆனால் விடுதலைப் புலிகள் காரணமாகவே பேச்சவார்த்தை முறிவடைகிறதாக அரசாங்கம் தெரிவிக்கின்றது. ஆனாலும், யுத்தத்தினால் இப்பிரச்சினையைத் தீர்க்க முடியாதென்ப தனை இரு தரப்பினரும் புரிந்து கொள்ளல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும்பான்மை ஜனநாயகவாதமும் சிறும்பான்மையினரின் உரிமைகளும்



**காய்ச்சலுடன் கோபித்துக் கொண்டு காய்ச்சலைக் குணப்படுத்த முடியாது.**

தேசியப் பிரச்சினைக்கு சமஷ்டித் தீர்வொன்றைக் கொண்டுவருகையில் நிலவும் சவால்கள் மற்றும் கடினங்கள் எமது அவதானத்திற்குட்படுதல் வேண்டும். நிலைமை பாரதூரமானதென சிங்களத் தரப்பினர் அவ்வளவிற்குப் பேசுவதில்லை. மனிதர்கள் உயிரிழப்பது சாதாரணமானதொரு அம்சமாக இருப்பினும் அகாலமான முறையில் உயிரிழத்தல் பாரிய தொரு விளைவாகும். மனிதப் படுகொலைகளைப் போன்றே, விடுதலைப் புலிகள் அமைப்பையும் நோயின் அறிகுறி என நாம் புரிந்து கொள்ள முடியும். அது வெற்றிகொள்ளப்பட்ட வழிக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதுடன், நாம் அந்தக் காய்ச்சலுக்கு நூல் கட்டுவதை மட்டுமே மேற்கொண்டுள்ளோம்.

காய்ச்சலுடன் கோபித்துக் கொண்டு காய்ச்சலைக் குணப் படுத்த முடியாது. சிங்கள சமூகம் விடுதலைப் புலிகளை வெறுக்கின்றது. இவ்வெறுப்பு காரணமாகவே தீர்வு தேடுதல் பின்நோக்கித் தள்ளப்பட்டுள்ளது. அதனால் விடுதலைப் புலிகள் சிறந்தவர்கள் என அர்த்தப்படவில்லை. ஆனாலும், அவர்களுடன் பேச்சுவார்த்தை ரீதி யிலான தீர்வு தேடுவதற்கு ஏன் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர்?.

நிலைமை இதுவெனில் எவ்வாறு இதிலிருந்து மேலெழுவது? யுத்தத் தில் விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பது ஒரு யோசனை. இரண்டாவது யோசனை பேச்சுவார்த்தை நடத்துதல். பொருளியல் தத்துவத்துக்கு ஏற்ப அமையச்செலவுக் கோட்பாட்டை இங்கு உதாரணத்துக்கு எடுத்துக்கொண்டால், இந்த இரண்டு தெரிவில் எது அதிக இலாபகரமா னது என மதிப்பீடு செய்து பார்க்க லாம். இங்குதான் சிவில் சமூகம் முக்கியமானதாகின்றது. சமாதானத்திற்குச் செல்லுதல் என்பதனை சிங்கள சமூகம் இனங்கண்டு கொள்ள வேண்டியுள்ளது. பேச்சுவார்த்தை ரீதியில் தீர்வைப் பெற்றுக் கொள்ளவேண்டும் என்பதனை சிங்கள சமூகத்திற்கு தெளிவுபடுத்த வேண்டியுள்ளது. யுத்தத்தினால் இலாபம் எதுவும் இல்லை எனவும், அது அழிவுக்கே வழிவகுக்கும் என்பதையும் சிங்கள சமூகத்திற்குத் தெளிவுபடுத்தல் வேண்டும். இங்குதான் சிவில் சமூகம் முக்கிய இடம் வகிக்கின்றது.

1980 முதல் தற்போது வரை நினைத்துப் பார்க்கையில் மிகவும் சிறந்த தெரிவாக அமைவது பேச்சுவார்த்தை ரீதியிலான தீர்வொன்றை தேடுதலே என்பது தெளிவு. இந்தக் கருத்தின் அடிப்படையில் இருந்து சமஷ்டி முறைமை தொடர்பாகக் கலந்துரையாடுதல் முக்கியமானதாகும். இதற்கான சர்வதேச அனுபவங்களைப் பெற்றுக்கொள்வதும் முக்கியமானதாகும்.

சமஷ்டிக் கட்டமைப்பிற்குள் இனத்துவ சமூகமொன்றில் ஏற்படும் சவால்களை நிர்வகிக்க முடியுமா என்பது பற்றி ஆராய்தல் இங்கு அவசியமாகிறது. இலங்கை பன்மைத் துவ சமூகமொன்றென நாம் யதார்த் தமாக ஏற்றுக்கொள்ளல் வேண்டும். சிங்களவர்கள் 2500 வருட வரலாறு ஒன்றினை கட்டியெழுப்புவதாக ஹெல உறுமய கூறுகின்றது. ஆனால், வேறு இனங்களும் பல காலங்களின் போது அவர்களின் கலாசாரங்களை கட்டியெழுப்பியுள்ள னர் என்பதனை மறந்துவிடலாகாது. 13 ஆம் நூற்றாண்டில் இலங்கையில் தமிழ் சமூகம் கட்டியெழுப்பப்பட்ட தாக மகாவம்சம் கூறுகின்றது. 15



சிரால் லக்திலக

தமிழில் : நயனகணேசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம் நூற்றாண்டளவில் முஸ்லிம் கலாசாரம் இங்கு கட்டியெழுப்பப் பட்டது. மேல்நாட்டு தமிழ் கலாசாரம் 15 ஆம் நூற்றாண்டளவில் இருந்து ஆரம்பமானது. மலைநாட்டுத் தமிழ்க் கலாசாரம் 18 ஆம் நூற்றாண்டளவிலே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய, இந்நாட்டில் பல இன கலாசாரங்கள் நிலவுகின்றன. இவ்வனைத்து இனங்களுக்கும் நடைமுறையில் இங்கு உரிமையுள்ளது என்பதனை நாம் ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

ஆனாலும், அவ்வினங்களிற்கு தீர்மானங்களை எடுக்கும் அதிகாரங் கள், ஜனநாயக ரீதியிலான சவால் கள் மற்றும் மனித உரிமை தொடர் பான சவால்கள் போன்றன நிலவு கின்றன. சமஷ்டிக் கோட்பாட்டால் இச்சவால்களை வெற்றிகொள்ள முடியும். தற்போதுள்ள பிரச்சினைக்குக் காரணம் அரசின் சுயாதிபத்தியத்திற்குள் பல இனங்களின் தேவைகள் உள்வாங்கிக்கொள்ளும் தன்மை இல்லாமையாகும். ஜெவின் லொக், ரூசோ போன்றவர்கள் சமூக நேர்காணல் ஒழுங்கிற்கேற்ப இறைமை அதிகாரமாகுவது மக்களுக்காகவே என்று கூறுகின்றனர். அரசை கட்டியெழுப்புவதற்காகவே அவர்கள் அதில் ஒரு பங்கை ஆட்சியாளருக்குப் பெற்றுக்கொடுக்கின்றனர்.

அதற்கேற்ப யாழ்ப்பாணம், வடக்கு, கிழக்கு போன்று, மலையக மக்களும் ஆட்சியாளருக்கு அதிகா ரத்தை வழங்கியுள்ளனர். ஆனாலும், ஒரு இனப்பிரிவிற்கு மட்டுமே இங்கு சுயாதிபத்தியம் செயற்படுகிறது. இது அரசியல் யாப்பு ரீதியிலான முரண்பாடொன்றாகும். பெரும்பான்மை ஜனநாயகவாதம் சிறும்பான்மையினரின் உரிமைகளைச் சவாலுக்குட்படுத்துகிறது. பன்மைத்துவ நாடொன்றில் பெரும்பான்மைக்கேற்ப முடிவுகளை எடுத்தல் மிகவும் கடினமான விடயமொன்றாகும்..

சமஷ்டிக் கருத்துக்கள் இதற்குப் பதிலளிக்கும். உலகில் ஆட்சி முறைகள் தயாரிக்கும் போது அவற்றுக்கான மாதிரிகள் இருக்கும். அங்கு ஒரு இடத்தில் ஒற்றையாட்சி முறைமை மற்றும் மறுபுறத்தில் தனி இராச்சிய மாதிரிகள் இருக்கும். இவ்விரண்டுக்கிடையில் பல ஆட்சிமுறைகள் உள்ளன. ஒற்றை, அதிகாரப் பகிர்வற்ற மத்தியப்படுத்தப்பட்ட இடைக்காலச் சமஷ்டி, மற்றும் இறுதியில் ஏற்படுத்தப்படும் முழுமை யான சமஷ்டி என்ற இவ் அனைத் தும் அங்கு இருக்கும். சமஷ்டிக் கருத்தை இடைக்கால சமஷ்டிச் சந்தர்ப்பத்தின் பின்னரே ஆரம்பிக்க முடியும். ஒற்றையாட்சியில் அதிகாரம் ஓர் இடத்திலேயே குவிக்கப்படும். அங்கிருக்கும் தண்டனைக்குப் பயந்தே மனிதர்கள் சட்டத்திற்கு மதிப்பளிக்கின்றனர். அதிகாரப்பகிர்வற்ற நிலை, மற்றும் அதிகாரப்ப கிர்வு என்பன இருவேறு நிலைகளா கும். அதிகாரப் பகிர்வு கேந்திரத்தில் உள்ள அதிகாரத்தை கலைத்து விடுவதாகும். அது நான்கு முறைகளில் மேற்கொள்ளப்படும்.

01.பன்முகப்படுத்தல்
02.பதிலாள்
03.அதிகாரப்பகிர்வு
04.தனியார் மயப்படுத்தல்.

ஐக்கிய இராச்சியத்திற்குள் வரையறுக்கப்படாத அதிகாரப்பகிர்வைக் காணக்கூடிதாகவுள்ளது. இந்தோனேசியாவின் ஆசே மாநிலத்திற்குள் ஒற்றையாட்சி முறையினுள் சுயாட்சி அதிகாரம் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. இலங்கையிலும் ஒற்றையாட்சி அதிகாரப்பகிர்வு முறைக்குள் தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். ஆனாலும், மாகாணசபை முறை அதிகாரப் பகிர்வு காரணமாக அதனை செயற்படுத்துதல் போதுமானதென தர்க் கிக்க முடியும். 13வது யாப்பு சீர் திருத்தம் சமஷ்டி மாதிரிக்குச் செல்வ தற்கு முன் செல்லக்கூடிய அதிக பட்ச அதிகாரத்தை மேற்கொள்ளல் என உயர்நீதிமன்றம் தெரிவித்துள் ளது.

சமஷ்டி முறைமையென்பது உடன்படிக்கையொன்றாகும். இணக்கப்பாடொன்று இல்லாமல் இதனை எட்ட முடியாது. இணக்கப்பாடு இல்லாததினால் 17வது யாப்பு சீர்திருத்தம் தோல்வியில் முடிவடைந்தது. சமஷ்டி முறைமையெனில் இணக்கப்பாடொன்று அவசியம். அதேபோல், எண்ணங்கள் இன்றி கட்டமைப்பொன்றை கட்டியெழுப்புவது பலனற்றது. 17வது அரசியல் யாப்பு சீர் திருத்தம் தோல்வியடைவதற்கு இவ் எண்ண ரீதியிலான பிரச்சினையே பாதிப்பை ஏற்படுத்தியது.

உலகில் 150 நாடுகள் சமஷ்டி முறைமையை ஏற்றுக்கொள்கின்றன. உலக சனத்தொகையில் 60 சதவீத்தினர் சமஷ்டி முறைக்குள்ளே வாழ்கின்றனர். உலகில் பன்மைத்துவ நாடுகள் மட்டுமன்றி, பிராந்திய அபிவிருத்தி தேவைப்படும் நாடுகளும் சமஷ்டி முறைமையினை பின்பற்றுகின்றனர். சமஷ்டி முறைமை இலங்கைக்கு பொருத்தமானது என்ற கலந்துரையாடல் முக்கியமானதொன்றாகும். அங்கு பல விதிமுறைகளை, வழிமுறைகளை இனங்கண்டு கொள்ள முடியும்.


01.இன்று நிலவும் நிலைமையினை இப்படியே கொண்டு செல்லல்
02.தற்பொழுது இலங்கையில் நிலவும் ஆட்சிமுறைகளை(மாகாண சபை) முழுமையாக செயற்படுத்துவதற்கு முயற்சித்தல்
03.முழு அதிகாரப்பகிர்வு ஒற்றை அரசொன்றை ஏற்படுத்தல்
04.இந்திய முறையில் இடைக்கால சமஷ்டி முறையொன்று
05.முழு சமஷ்டி அரசொன்றைக் கட்டியெழுப்புதல்(அதிகாரப்பகிர்வற்ற அரசொன்று- உதாரணம்: கனடா, சுவிட்ஸர்லாந்து)
06.ஒற்றை ஆட்சிக்குள் சுயாட்சி அதிகாரங்களைப் பெற்றுக் கொடுத்தல். உதாரணம்: ஆசே மாநிலம்
07.பிரிந்து செல்வதற்கு மாற்று வழியாக சுயாட்சி முறையை பெற்றுக் கொடுத்தல் உதாரணம்:சீனாவின் ஹொங்கொங் தீவு.
08.சமஷ்டி மற்றும் கொன்பெடரேஷன் கலப்பு முறையினை ஏற்படுத்துதல். உதாரணம்: ஐக்கிய நாடுகள் அமைப்பு சைப்ரஸிற்கு முன்வைத்த தீர்வு.
09.ஐரோப்பிய ஒன்றியத்துடன் நோர்வே மற்றும் சுவிட்ஸர்லாந்து கொண்டு செல்லும் நட்புறவு. அப்படியான முறையில் தெற்குடன் நட்புறவைக் கொண்டு நடத்தல்
10.கொன்பெடரேஷன் முறைமையொன்று (ஐரோப்பிய ஒன்றியம்)
11.ஆக்கிரமிப்பு வகையில் இரு அரசுகள் இருத்தல். உதாரணம்: எரித்திரியா மற்றும் எத்தியோப்பியா.

எதிர்வரும் பத்து வருடங்களில் இலங்கையின் இனப்பிரச்சினைக் கான தீர்வென்பது, இம் மாற்று வழிக ளில் ஒன்றின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படவேண்டும். அப்பொழுதுதான் கௌரவமான சமாதானத்தை ஏற்படுத்த முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறுப்பு ஜூலை திரும்புமா?



பெரும்பாலான இலங்கையர்களுக்கு 1983 இருட்டான ஆண்டு. எனது சமகாலப் பரம்பரையைச் சேர்ந்தோருக்கு இனப்பிரச்சனை என்ற பதத்திற்குச் சரியான கருத்தைச் சொன்ன ஆண்டு. எமது பாடசாலையிலிருந்து வீடு வரும்போது, எரியும் வாகனங்கள், கட்டிடங்கள், சில எரிந்த உடல்கள் எனப் பலவற்றைத் தாண்டிப் போகவேண்டியிருந்தது. திடீரென எமது வீடிருந்த சுற்றம், இரு வேறு இனங்களாகப் பிரிந்திருந்தது. போகும் வழியில் நிர்வாணமாக ஒரு மனிதன் தரையில், அவனைச் சுற்றி ஒரு கொலைகாரக் கும்பல். இக்காட்சி வியட்னாம் போரின்போது நிர்வாணமான ஒரு சிறுமி உயிருக்குப் பயந்து ஓடும்போது எடுக்கப்பட்ட அந்தப் பிரபலமான புகைப்படத்தை நினைவூட்டியது. இதேவிதமான-

**பொதுமக்கள் மீதான ஒவ்வொரு வன்முறையின் போதும், ஒவ்வொரு உயர்மட்டத் தற்கொலைத் தாக்குதலின்போதும் நாம் ஒரு இனக்கலவரத்தின் விளிம்பில் இருக்கிறோம்.**

வன்முறைக் கும்பல் உயிர்களுக்கும் உடமைகளுக்கும் நாசத்தை விளைவிக்கும் காட்சிகள் தான் - கொழும்பு நகர் முழுவதும்.

நாம் ஏதாவது படிப்பினை பெற்றோமா?

இந்தக் கொடூரச் சம்பவங்களை மீண்டுமொரு தடவை மனதில் மீட்டெடுத்துப் பார்க்கும்போது, எதை நினைவுகூருகின்றோம்? ஆர்ஜன்ரீனாவில் துன்புறுத்தல், கற்பழிப்பு, ஆட்கடத்தல் போன்றவற்றுக்கெதிராக எழுப்பப்பட்ட பிரபல சுலோகம் குறிப்பிடுவது போல 'Nunca Mas' (Never Again) அதாவது, "இனியும் இல்லை" என இலங்கை அரசினால் கூறுவதற்குத் தைரியம் இருக்கிறதா?

சமீப காலத்தில், இராணுவ அதிகாரி சரத் பொன்சேகா மீது நடத்திய தற்கொலைத் தாக்குதலும், கெப்பிட்டிக்கொலாவவில் நடந்த பஸ் குண்டு வெடிப்பும் பயங்கரவாதத்தின் மீதான



சஞ்ஜனா ஹட்டொடுவ
தமிழில் : வ. விசுவலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் பொறுமையைச் சோதித்த சம்பவங்களாகும். கோபத்தைக் கிளப்பிவிடும் இந்தச் சம்பவங்களால் இனவாத வன்முறைக் கும்பல் வீதிகளில் திரியாதது, இலங்கை இந்த விடயத்தில் (ஜுலை 83 இலிருந்து) பெருந்தன்மையடைந்துவிட்டது என்பதைக் காட்டுகிறது எனச்சிலர் கூறுகின்றனர். ஆனால், இது நிச்சயமானதா? சரத் பொன்சேகாவின் தாக்குதலையடுத்து அவசர அவசரமாக வீடுகளுக்குப் போவோரும், மயான அமைதியாகிவிட்ட கொழும்பு வீதிகளும், மீண்டுமொரு இனக்கலவரம் உருவாகுமோ என்ற பயப்பிராந்தியைக் கொடுத்தது.

மீண்டுமொரு ஜுலை 83 உருவாகுமோ என்னும் பயம் இன்னும் உயிர்ப்பாகவே இருக்கிறது.

கெப்பிட்டிக்கொலாவ சம்பவத்தில் கொலையுண்ட குழந்தைகள், தாய்மார்கள், தனித்தனியாகக் கிடந்த உடல் துண்டங்கள் என்பவற்றின் நிழல் படங்களும் அவை பற்றிய செய்திகளும் வடக்கு கிழக்கில் மாத்திரமல்லாமல், கொழும்பிலும் பயப்பிராந்தியைப் பரப்பின.

இதனால், ஜுலை 83 யின் பயங்கரம் மீண்டுமொரு தடவை எட்டிப்பார்த்தது.

ஏன் இப்படி? அப்பாவி உயிர்களின் இரத்தத்தால் எழுதப்பட்ட- எழுதப்பட்டுவரும் இந்த இனப்பிரச்சனையை இலங்கை அரசு ஏன் 25 வருடங்களாக ஒரு முடிவுக்குக் கொண்டுவரமுடியாமல், அல்லது கொண்டுவரவிரும்பாமல் இருக்கிறது? 83ல் பதவியிலிருந்த அரசாங்கமும் ஜே.வி.பி யும் இணைந்து நடத்திய, எண்ணிக்கூடப் பார்க்கமுடியாத இந்தக் கொடூரத்தின் விபரங்களை அக்காலகட்டத்தில் குழந்தைகளாகவும் சிறுவர்களாகவும் இருந்தோர் மறந்திருப்பர். சிறைச்சாலையில் அரசியல் கைதிகளைத் துன்புறுத்திக் கொல்வோரையும், மனித உயிர்களுக்கு மதிப்பளிக்காமல் அவற்றைத் துப்பாக்கிக் குண்டாலும் வாள்களாலும் அழிக்கின்ற சீரழிந்த கலாசாரத்தையும் பற்றியும் இப்போதுகூட பத்திரிகைகள் பேசுகின்றன.

**இத்தனை கால இரத்தக்களரியில் பலியானோர் எம்மைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்,**

**மீண்டுமொரு 83 உருவாகச் சந்தர்ப்பமுள்ளதா?**

ஒருவேளை வன்முறைக்கு சமூகச் சூழலும் பிறவிக்குணமும் காரணமாயிருக்கலாம். ஆனாலும், இக் கலவரங்களின் காரணகர்த்தாக்கள் அரசியல்வாதிகள் என்பதை மறுக்கமுடியாது. அதாவது, 1983 இனக்கலவரங்கள் தொடங்கியதற்கான காரணங்கள் பத்திரிகைகளில் தெளிவாகப் பிரசுரிக்கப்படவில்லை. 13 இராணுவம் கொல்லப்பட்டதே பிரதான செய்தியாயிருந்தது. இந்தச் செய்திகள் கொழும்பில் வேகமாகப் பரவித்தான் பெரும் வன்முறை வெடித்தது. ஆனபோதிலும், நடந்தவை பற்றிய விபரமான செய்திகள் வெளிப்பட்டுத்தானிருந்தன. இறந்த 13 இராணுவத்தினரதும் உடல்கள் கொழும்புக்குக் கொண்டுவரப்பட்ட ஜுலை 23 அன்றுதான் முதலில் கலவரம் வெடித்தது. இராணுவ மரியாதைகள் கொடுக்குமுன்னர், அவ்வுடல்கள் பொரளையின் கனத்தை மயானத்திற்குக் கொண்டுவரப்பட்டபோது, அங்கு ஒரு பெருங்கும்பல் காத்திருந்தது. பின்னர், அங்கு உடல்களைத் தகனம் செய்யும் ஏற்பாடு கடைசி நேரத்தில் மாற்றப்பட்டது. அங்கிருந்த கும்பலும் வன்முறையைக் கக்கத் தொடங்கியது. பொரளை, திம்பிரிகஸ்யாய, நுகேகொடை, வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி ஆகிய இடங்களில் வீதிகளிலே இக்கும்பல்களின் வன்முறைகள் நடந்தன. அடுத்த நாள் பொலிசும் இராணுவமும் வரும்வரையில் இவை தொடர்ந்தன. 25 ஜுலையில் இந்த வன்முறைகள் ஒரு புதிய ரூபமெடுத்தன. அதாவது கொழும்பு நகரிலுள்ள தமிழர்களின் வர்த்தக ஸ்தாபனங்களும் வீடுகளும் இந்த வன்முறைக் கும்பலின் இலக்காயின.


அரசியல் இயலாமை இந்த வன்முறைகள் தொடரக் காரணமாயின, ஏன்? இந்த 'அரசியல் இயலாமை" தான் இலங்கையின் இனப்பிரச்சனைக்குத் தீர்வுகாணத் தடையாகவிருக்கிறது எனச் சிலர் கூறினாலும், உண்மை அதற்கு நேரெதிரானது. முடிவெடுக்கக் கூடிய உரமான அரசியல் தாராளமாக இருக்கிறது, ஆனால் அது பிரிவினைவாதத்தைத் தூண்டிவிடுவதற்குத்தான் பெரும்பாலும் பயன்படுகிறது.

இப்படியான ஒரு குரூரத்தனமான அரசியல் இருக்கும்போது, எப்படி ஒரு உடன்பாட்டுக்கு வரமுடியும்?

ஒரு தீர்வுக்கு இலங்கையை முன்னெடுத்துச் செல்லக்கூடிய அதன் அரசியல் கட்டுமானத்தின் அடித்தளமே சரியானதாகவில்லையே. இலங்கையின் அரசியலமைப்பு, நாட்டின் தலைமைக்குச் தன்னிகரற்ற அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறது. இதன் மூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**"எதைப் பற்றிப் பயப்படுகிறேனா? எனக்கு எல்லாம் பயம். அந்தப் பயத்தைப் பற்றிய பயமே என்னைப் பயமுறுத்துகிறது. எனது முடியாமையைக் கண்டு எனக்குப் பயம், எனக்குத் தெரியாத – பெயரே தெரியாத – பொருள்களைப்பற்றி ..... பயமென்ற சொல்லே என்னைப் பெரிதாகப் பயப்படுத்துகிறது".**

அத்தலைமை பொதுமக்களின் கருத்தைத் திருத்தலாம். ஆனால், அதற்குப் பதில் இலங்கை அரசோ தமது அரசியல் நலனுக்காகப் பொதுமக்களின் கருத்தைத் "திருப்புகிறது".

இதுதான் ஜூலை 83 இலும் நடந்தது. ஜனாதிபதியும் அரசாங்கமும் சிங்கள வன்முறையாளருக்கு உதவியும் ஆதரவும் வழங்கியது அப்போதுதான். 1983 ஜூலை கலவரத்தில் அதன் பங்குக்காக ஐ.தே.கட்சி இது நாள்வரை எந்தவிதமான ஒரு மன்னிப்பும் கேட்கவில்லை. 80 களில் நடந்த இரத்தக் களரிக்கு ஜே.வி.பியும் மன்னிப்புக் கேட்கவில்லை. 83 வன்முறை பற்றித் தமது பேச்சில், "கறுப்பு ஜூலை" என்று குறிப்பிட்டதன் மூலம் மன்னிப்புக்கான ஒரு சின்னச் சைகை மட்டும் சந்திரிகா குமாரதுங்கவினால் 2004ல் கொடுக்கப்பட்டது, அவ்வளவுதான்.

வன்முறைக்குக் காரணமானவர்களும் அதை முன்னெடுத்தவர்களும் இன்று வட-கிழக்கில் பெரும் இராணுவப் பதவிகளிலும், அரசியல் தகுதிகளையும் கொண்டு எந்தக் குற்றவுணர்வோ, வெட்கமோ, பொறுப்புணர்வோ, வருத்தமோ, தண்டனையோ எதுவுமின்றிச் சொகுசாகத் தம் வாழ்க்கையைக் கழிக்கிறார்கள். என்ன செய்வது? இதுதான் இலங்கையின் வெட்கக்கேடான அரசியல் வாழ்க்கை!

இதேசமயத்தில், எந்த உடன்பாட்டிற்கான திறவுகோலும் அவர்களின் கைகளில்தான் உள்ளது. சம்பந்தப்பட்டோரிடமிருந்து வரும் ஒரு சாதாரண அறிக்கை வருடக்கணக்காகத் தொடரும் பேச்சுவார்த்தைகளிலும் உடன்பாடுகளிலும் பார்க்க சக்தியுள்ளது. ஏற்கனவே சாதி, சமயம் என உள்ளினச் சிக்கலாக இருக்கும் இதில், உடன்பாடுக்கு வருவது என்பது, போலித்தன்மையிலும் மடைமையிலும் உழலும் அரசியல்வாதிகளின் கையிலேயே உள்ளது என்பது துரதிர்ஷ்டவசமானது.

எத்தனை விசாரணைக் குழுக்களையும் கூட்டமைப்புக்களையும் நாம் கடந்த பத்து வருடங்களில் பார்த்துவிட்டோம்? எல்லாம் மண்ணோடு மண்ணாகப் போயிற்று. வன்முறையால் பாதிக்கப்பட்டவர்கள் அவற்றினால் நம்பிக்கை வறட்சியடைந்ததுதான் மிச்சம்.

ஜூலைக் கலவரத்தைப் பற்றிய அதிகாரபூர்வமான ஒரு மன்னிப்பு அல்லது வருத்தம் தெரிவிக்கும் ஒரு அறிக்கை முக்கியமானது. அத்துடன் அவ்வறிக்கை ஒரு பிரயோசனமானதாக, இழந்தவற்றுக்கு ஈடு கொடுப்பதாக இருக்கவேண்டும். இந்த வகையில் பார்க்கும்போது, இலங்கை கொஞ்சம் கூட உதவாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையில் பெருந்தோல்வியடைந்துள்ளது. 83 கலவரத்தில் பாதிக்கப்பட்டோருக்கு நஷ்ட ஈடு கொடுத்தால் எல்லாம் சரியாகி விடுமென நினைக்கிறார்கள். எல்லாம் வார்த்தை ஜாலமே தவிர, ஒரு நடவடிக்கையுமில்லை(இப்போது சிலருக்கு நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவுகள் வழங்கப்படுவதைத் தவிர). 1983 இலிருந்து, வன்முறைகளைத் தடுத்துச் சமூக மாற்றத்திற்காக நாம் எந்த ஒரு சிறிய வெற்றிகரமான உடன்பாடும் இதுவரை செய்யவில்லை. அந்த வகையில் வன்முறையாளர்களும் நாமே, பலியாடுகளும் நாமே.

பயங்கரவாதத்திற்குப் பதில் பயங்கரவாதமே என்று பழிக்குப் பழி காண்போர் ஒன்றை மறந்து விடுகிறார்கள். அதாவது "ஒருவன் தன் கண்ணைப் பறித்தால், அவனது இரு கண்ணையும் நான் குருடாக்குவேன்" என்னும் நிலைப்பாடு கடைசியில் எல்லாரும் குருடராவதில் வந்து நிற்கும். கலவரத்தைத் தூண்டும் அரசியல் பின்புலங்கள் மனித உயிர்களையும் மனித உரிமைகளையும் இனம், மதம் என்ற பெயரில் வன்முறையால் பறித்து, பழைய இருண்ட காலங்களுக்கு மீண்டும் இட்டுச்செல்வதைத் தவிர்த்து, எதிர்காலத்தை எப்படிப் புதியதாகக் கட்டியெழுப்பலாம் என்பதை நாம் பார்க்கவேண்டும்.

நோபல் பரிசை வென்றவரான அயர்லாந்தைச் சேர்ந்த ஜோன் ்யூம் (John Hume) சொல்வது போல இதற்கு "எல்லாருக்கும் பொதுவான கொள்கைகளும், உரிமைகளைக் கொடுக்கும் அர்ப்பணிப்பும் விட்டுக்கொடுத்தலும்" வேண்டும்.

வளைகுடா யுத்தம் பற்றி ஜேம்ஸ் பிளின் (James Blinn) எழுதிய, "Ardvaark goes to the War" என்னும் நாவலில், அக்கதையின் நாயகன் எவையெல்லாம் தன்னைப் பயப்படுத்துகிறது என்பதைச் சொல்வது இலங்கைக் குடிமக்களுக்கும் பொருந்தும் "எதைப் பற்றிப் பயப்படுகிறேனா? எனக்கு எல்லாம் பயம். அந்தப் பயத்தைப் பற்றிய பயமே என்னைப் பயமுறுத்துகிறது. எனது முடியாமையைக்கண்டு எனக்குப் பயம், எனக்குத் தெரியாத -பெயரே தெரியாத- பொருள்களைப்பற்றி. ..... பயமென்ற சொல்லே என்னைப் பெரிதாகப் பயப்படுத்துகிறது".

இலங்கைக் குடிமக்களின் மனங்களில் குடியிருக்கும் இந்தப் பயத்தின் தொனியானது, சிறந்த கொள்கைகளினாலும், சகல மட்டங்களிலுமுள்ளவர்களுடனான சமாதானப் பேச்சுக்களாலும் நீக்கப்படவேண்டும். நாம் போரைப்பற்றிப் பேசவேண்டுமெனில், அதன் கொடுமையான விளைவுகளைப்பற்றிப் பேசுவோம். அந்தப் போரை வெல்வதன் மூலம் எந்தச் சமூகத்தின் மனங்களை வென்று, பல்லினக் கலாசார நாடாக இலங்கையை ஆக்குவோம் என எண்ணுகிறோமோ அதே மனங்களை வெல்லமுடியாமல் போகும்.

உடன்பாட்டுக்கு நாம் ஏன் பயப்படுகிறோம்? நாம் தமிழரை மிகவும் வெறுக்கிறோமென்பதாலா? இல்லை, அவர்கள் எங்களை வெறுக்கிறார்கள் என்பதாலா? அல்லது, காலங்காலமாக உள்ள பயங்கரவாதம், சமூகங்களை இணைக்கும் அடிப்படை மனித நேயத்தை அடியோடு அரிப்பதாலா? அல்லது ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய போன்றவை தமது தொண்டை கிழிய உரத்த குரலில் கத்துவது போல, இலங்கையை மேலும் அரக்கத்தனமாக்குவதற்குப் போர் தான் பதிலா?

இன்னொரு கறுப்பு ஜூலையை நினைத்துப் பார்க்கவும் முடியாது என நாம் முடிவாகப் பேசும்போது, இம்மாதிரியான கேள்விகளை எமக்கு நாமே நம்பிக்கையுடன் கேட்டுக்கொள்ள வேண்டும். பொதுமக்கள் மீதான ஒவ்வொரு வன்முறையின் போதும், ஒவ்வொரு உயர்மட்டத் தற்கொலைத் தாக்குதலின்போதும் நாம் ஒரு இனக்கலவரத்தின் விளிம்பில் இருக்கிறோம். இதனால் ஒரு உடன்படிக்கையின் அவசியத்தேவையை எல்லா மட்டத்தினரும் உணர்ந்து கொள்ளல் அவசியம்.

இத்தனை கால இரத்தக்களரியில் பலியானோர் எம்மைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள், காத்திருக்கிறார்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவாலயத் தாக்குதலில் இலங்கைக் கடற்படையின் பங்கு

**INFORM அமைப்பைச் சேர்ந்த சுனிலா அபேசேகர, உதயா கலுபத்திரண மற்றும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தைச் சேர்ந்த தேவநேசன் நேசையா, பவானி பொன்சேகா, மிராக் ரஹீம் ஆகியோர் ஜூன் 28 ஆம் திகதி மன்னார் பேசாலைக்கும், தலைமன்னாருக்கும் விஜயம் செய்து அங்குள்ள சமீப கால நிலைமைகளை அவதானித்து வெளியிட்ட அறிக்கையின் தொகுப்பு. தமிழில்: வ. விசுவலிங்கம்**



இலங்கையிலுள்ள அபிவிருத்தி அதிகம் அடையாத மாவட்டங்களில், வடமேற்குப் பகுதியில் அமைந்துள்ள மன்னார் மாவட்டமும் ஒன்றாகும். எனினும், அது பெருமைக்குரிய நீண்ட வரலாற்றைக் கொண்டது. இலங்கையின் ஆரம்பகாலக் குடியேற்றங்கள் ஏற்பட்ட இந்தப் பகுதியில், ஏற்கனவே குடியிருக்கும் தமிழ், முஸ்லிம் மக்களுடன் அவ்வப்போது மீன் பிடிப்பதற்காக வந்து குடியேறியிருக்கும் சிங்கள வர்களும் வாழ்க்கின்றனர். இலங்கையின் இந்து, கத்தோலிக்க, மதங்களின் புராதனமான, சரித்திரப் பிரசித்திபெற்ற ஆலயங்களாகிய திருக்கேதீஸ்வரம், மடு மாதா கோவில் ஆகியன இந்த மாவட்டத் திலேயே அமைந்திருப்பதுடன், பௌத்தர்களின் பிரபல வணக்கஸ் தலமான தந்திரிமலை இவற்றுக்கு மிகவும் அண்மையில் அமைந்துள் ளது.

**நீலக் காற்சட்டையும், 'ரீ' சேர்ட்டும் அணிந்த ஆயுதக் குழுவினர், வரும் வழி நெடுகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததுடன், பின்னர் வங்காலைப் பக்கமாகவுள்ள படகுகளை அழிக்கத் தொடங்கியதாக கண்ணால் கண்ட சாட்சியங்கள் தெரிவிக்கின்றனர்.**

புவிசார், வரலாற்று, கலாசார அடிப்படைகளில் இலங்கையின் தனித்துவமான ஒரு பிரதேசமாக மன்னார் அமைந்துள்ளது.

பெரும்பான்மையான கத்தோலிக்க மதத்தவர் வாழும் இங்கே, மதகுரு இராயப்பு ஜோசெஃப், மனித உரிமை மீறல்கள், சமாதான முன்னெடுப்பு முதலியவற்றில் முக்கிய கவனம் செலுத்தி வருகிறார். நீண்ட காலமாகப் போரினால் பாதிக்கப்பட்டிருக்கும் இந்த சமூகத்தில், அருகருகாக ஒற்றுமையுடன் வாழ்ந்துவந்த இனங்களின் ஒற்றுமை கேள்விக்குறியாயிருக் கிறது. 1990ல் பெருமளவிலான முஸ்லிம்களை விடுதலைப்புலிகள் மன்னாரிலிருந்து வெளியேறச் செய்த மையால், இந்தச் சமூகத்தின் ஒரு பகுதி முஸ்லிம்களே இப்போது மன்னாரிலுள்ளனர்.

பூகோள ரீதியாக மன்னார் தமிழ் நாட்டுக்கு அண்மித்து இருப்பதால், காலங்காலமாக இந்தியாவுக்குப் பயணஞ்செய்வோருக்கும் இது ஒரு முக்கிய பாதையாக இருந்திருக்கி றது. தற்போதைய வடக்கு, கிழக்குப் போரால் பாதிக்கப்பட்ட மக்கள் அகதிகளாகத் தமிழ்நாட்டுக்குச் செல்ல ஒரு பாலமாகவும்-முக்கியமாகத் தலைமன்னார்- இருக்கிறது.

தலைமன்னாரிலிருந்து இராமேஸ்வரத்திற்கான கப்பற்சேவைகள், மக் கள் சட்டவிரோதமாகத் தமிழ்நாட்டுக் குச் செல்வதால் 1984ல் இலங்கை அரசாங்கத்தால் தடை செய்யப்பட்டது. இந்தப் பகுதியில் இடம்பெறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடத்தல் சம்பவங்களைக் கட்டுப்படுத்துவதற்காக கடற் பரப்பிலே இலங்கைக் கடற்படையின் கப்பல்கள் அதிகம் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுகின்றன. கடற்படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமான பல கடற்சமர்கள் இந்தப் பகுதியில் இடம்பெற்றுள்ளன.

மன்னாருக்கும் தலைமன்னாருக்குமிடையே பெரும்பான்மையான கத்தோலிக்கர்களைத் தன்னகத்தே கொண்டிருக்கும் ஒரு நகரமே பேசாலை. மீன்பிடித்தல் பெரும்பான்மையான மக்களின் தொழிலாக விளங்குகிறது. இந்த நகரத்தின் நடுநாயகமாக விளங்குவது, டிசம்பர் 2004ல் திருத்தியமைக்கப்பட்ட "வெற்றி நாயகி தேவாலயம்". கடற்கரையோரமாக அமைந்துள்ள இந்தத் தேவாலயம் போர்க்காலங்களில் சுற்றுப்புற மக்களுக்கு அடைக்கலம் கொடுக்கும் ஒரு இடமாகவும் இருந்துவருகிறது.

2005ன் பிற்பகுதியிலும், 2006ன் முற்பகுதியிலும் தொடர்ச்சியான பல சமர்கள் விடுதலைப் புலிகளுக்கும் கடற்படையினருக்குமிடையே நடந்து வந்தன. கடற்படையினரால் பல சாதாரண குடிமக்கள் கொல்லப்பட்டனர். இந்த விதமான தாக்குதல்களில் மிகவும் கொடூரமானது, டிசம்பர் 23 இலும் 24 இலும் நடந்தது. நூறு வீட்டுத் திட்டத்தின்மீது நடாத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் 11 வீடுகள் முற்றாக எரிந்து சாம்பராயின. நான்கு பொதுமக்கள் எரித்துக் கொள்ளப்பட்டனர். இதற்கும் மேலாக, வங்காலையில் 8-6-2006 அன்று தாய், தந்தை, இரு குழந்தைகள் என ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் கொல்லப்பட்டனர்.



**தேவாலயத்தை நோக்கி 10 அல்லது 15 நிமிடங்களாகத் தொடர்ந்து சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகஞ் செய்தனர். தேவாலயத்துக்குள்ளே 'கிரனேட்' களையும் வீசினர். திறந்திருந்த தேவாலய யன்னல் மூலமாக ஒருவன் 'கிரனேட்' டை உருட்டிவிட்டான்.**

### கடற்படை- விடுதலைப் புலிகள் மோதல்

ஜூன் 15ல் போலீசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தினால் பல வீடுகள் நாசமானதும், ஏறக்குறைய 6000 மக்கள் தேவாலயத்தில் தஞ்சமடைந்ததையுமடுத்து, ஜூன் 17ல் கடற்படையினருக்கும் புலிகளுக்குமிடையே, பேசாலைக்கு அண் மித்த கடற் பகுதியில் பெருஞ்சமர் நடந்தது. இதனால் பீதியடைந்த மக் கள், போர் மன்னாரின் ஏனைய பகுதிகளுக்கும் பரவும் என்ற பயத் தில் மீண்டும் தேவாலயத்தைச் சரண டைந்தனர்.

2000 த்திலிருந்து 3000 வரையிலான மக்களால் நிரப்பப்பட்ட தேவாலயத்தை நோக்கி வந்த நீலக் காற்சட்டையும், 'ரீ' சேர்ட்டும் அணிந்த ஆயுதக்குழுவினர், வரும் வழி நெடுகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது டன், பின்னர் வங்காலைப் பக்கமாகவுள்ள படகுகளை அழிக்கத் தொடங்கியதாக கண்ணால் கண்ட சாட்சியங்கள் தெரிவிக்கின்றனர். அந்த ஆயுததாரிகள் வந்த பாதையையும், அவர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தால் சல்லடையாக்கப் பட்ட சுவர்கள், மற்றும் வேலிகளை யும் ஊர் மக்கள் எமக்குக் காண்பித்த னர்.

அந்தத் துப்பாக்கி மனிதர்கள் கண்டபடிக்குத் துப்பாக்கிப் பிரயோகஞ் செய்துகொண்டு வந்தபோது மக்கள் தத்தமது வீடுகளிலிருந்திருந்தால் கொல்லப்பட்ட பொதுமக்களின் தொகை நிச்சயமாகக் கூடியிருக்கும் என்று அவர்கள் கூறினர்.

மிகச் சிறிய, ஏழு வயதிலும் குறைந்த மூன்று குழந்தைகளுடைய ஒரு தாய், தானும் தன் குழந்தைகளும் எப்படித் தவழ்ந்தும், உருண்டும், பதுங்கியும் பிரதான சாலையூடாக தேவாலயம் போய்ச்சேர்ந்தனர் என்பதை விளக்கினார். மோட்டார் சைக்கிளில் வந்த இந்த காற்சட்டையும், நீல ரீ-சேர்ட்டும் அணிந்த மனிதர்கள் தமது முகங்களைத் துணியால் மறைத்திருந்தனர். அவர்கள் தேவாலயத்தை நோக்கி 10 அல்லது 15 நிமிடங்களாகத் தொடர்ந்து சர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாரியாகத் துப்பாக்கிப் பிரயோகஞ் செய்தனர். தேவாலயத்துக்குள்ளே 'கிரனேட்' களையும் அவர்கள் வீசினர். ஒரு கொலையாளி திறந்திருந்த தேவாலய யன்னல் மூலமாக ஒரு 'கிரனேட்' டைப் பந்து உருட்டுவது போல உருட்டினான். அது வெடித்ததில் 75 வயதுடைய கிளாரம்மா லீலா என்ற வயோதிப மாது பரிதாபமாகப் பலியானதுடன், 47 பேர் காயமடைந்தனர். அதன் பின் அந்தத் துப்பாக்கிதாரிகள் தேவாலயத்தின் முன்புறம் சென்று தாக்குதலைத் தொடர்ந்தனர்.

நேரடிச் சாட்சியங்களின்படி இந்தக் கோரத் தாக்குதல்களின் போது தேவாலயத்துக்குள்ளிருந்த மக்கள் சீறிவிழும் துப்பாக்கிக் குண்டுகளைத் தவிர்க்கவேண்டிக் கட்டிடத்தின் முன்பக்கமாக நகர்ந்த னர், அல்லது தவழ்ந்தனர். பிரார்த் தனை செய்வோரும், மயங்கி விழு வோரும், பீதியில் கதறுவோருமாக ஒரே குழறுபடி. தேவாலச் சுவர்களும் கதவுகளும் துப்பாக்கிச் சூட்டின் உக்கிரத்தைத் தாங்கியதற்கு அவைகளிலுள்ள பொந்துகளும் ஓட்டைகளும் சான்று. 'கிரனேட்' தேவாலய நிலத்தில் தொடர்ச்சியான வெடிப்புகளை ஏற்படுத்திய அதே நேரம், குண்டுத் தாக்குதல்களால் மாதாவின் (வெற்றி நாயகி) சிலையை மூடியிருந்த கண்ணாடிப் பேழையிலும் 3 ஓட்டைகள் விழுந்துள்ளன. தேவா லய மணிக்கூடு சம்பவம் இடம்பெற்ற நேரமான 7.30 மணியைக் காட்டியதுடன் நின்றுவிட்டிருந்தது.

**ஏறத்தாள 39 படகுகளும் 45 வாடிகளும் எரிந்து சாம்பராயின. இதனால் விலைமதிப்பற்ற உயிரிழப்பைத்தவிரவும் மீனவர்களுக்கு 50 மில்லியன் ரூபாய்கள் நட்டமேற்பட்டுள்ளது.**

இதைத் தொடந்து அந்தக் கொலைக்கும்பல் கடற்கரை நோக்கிச் சென்றது. நேரில் கண்ட சாட்சியங்களின்படியும், மன்னார் கத்தோலிக்கத் தலைமைக்குருவின் சொந் தச் சாட்சியத்தின்படியும், நான்கு மீனவர்கள் வரிசையாக நிற்கவைக்கப்பட்டு வாய்களில் துப்பாக்கியால் சுடப்பட்டனர். ஐந்தாவது மீனவர் உடல் எரிந்த நிலையில் ஒரு படகுக்குள் கண்டெடுக்கப்பட்டார். ஆறாவது மீனவர் பெரும் காயங்களோடு தப்பியோடி இப்போது மருத்துவ சிகிச்சை பெற்று வருகிறார். மேலும் இந்தக் கும்பல் மீன்பிடிப் படகுகளுக்கும் வாடிகளுக்கும் நெருப்பிட்டுச் சென்றது. தரையோடு எரிந்து கிடந்த வாடிகளும், கரடிக் கட்டைகளாகக் கிடந்த படகுகளும், சம்வங்கள் நடந்த பதினொரு நாட்களுக்குப் பின் னர் நாம் போனபோதும், சம்பவத் தின் சாட்சியங்களாகக் காட்சியளித் தன.

ஏறத்தாள 39 படகுகளும் 45 வாடிகளும் எரிந்து சாம்பராயின. இதனால் மீனவப்பொதுமக்களுக்கு- விலைமதிப்பற்ற உயிரிழப்பைத் தவிர- 50 மில்லியன் ரூபாய்கள் நட்டமேற்பட்டுள்ளது. இறந்த ஐந்து மீனவர்களும் யேசுதாசன் ஜூட் நிக்சன் (23), சிரிலப்பர் சென்ற் ஜூட் (22), துரைராஜா விஜயகுமார் (39), கோடலிங்கம் லிங்கநாதன் (20) அப்துல் ரஹீம் லதீப் (28) என்போராவர்.

வெடிக்காத மேலும் இரு 'கிரனேட்' களும் வெடித்திருந்தால் இறப்பு எண்ணிக்கை 300 அல்லது 400 ஆகக் கூடியிருக்குமென்று மக்கள் அஞ்சுகின்றனர். கடுமையாகக் காயப்பட்டோர் உள்ளூர் பாதிரியாரின் இல்லத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டுப் பின்னர் வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டனர். வைத்தியசாலையிலிருந்து வந்த ஒரு அம்பியூலன்ஸ் வண்டியைக் கடற்படையினர் திருப்பியனுப்பியதாகச் சொல்லப்படுகிறது. நீண்ட நேரத்திற்குப் பின்னரே இன்னொரு அம்புலன்ஸ் வண்டிக்கு அனுமதி கொடுக்கப்பட்டது. சம்பவம் நடந்த இடத்திற்குச் செல்ல கத்தோலிக்க மதகுருவிற்கோ அரசாங்க அதிபருக்கோ அனுமதியளிக்கப்படவில்லை. இரு மணித்தியாலங்க ளாகக்



கடற்கரையில் பிணங்க ளாகக் கிடந்த அப்பாவி மீனவர்க ளைப் பார்வையிடக்கூடக் கத்தோ லிக்க மதகுருவிற்கு அனுமதி மறுக்கப்பட்டது.

பதினொரு நாட்களுக்குப் பின் நாம் பேசாலைக்குப் போனபோது அந்த நகரம் களையிழந்து துயரோடு காணப்பட்டது. மக்கள் இன்னும் பயப் பிராந்தியில் இருந்தனர். கொலைக் கொடூரங்கள் நடந்த போது தேவாலயத்தில் மக்களுடனி ருந்த பாதிரியார் பாதர் வின்சென்ற் பற்றிக், இன்னும் இரவு நேரங்களில் மக்கள் தேவாலயத்திலேயே தங்குவ தாகவும், 200 பேரளவில் அங்கு நிரந் தரமாகத் தங்குவதாகவும் தெரிவித் தார்.

### உதவி முயற்சிகளில் தேக்க நிலை

உலர் உணவு விநியோகம் சில நாட்களுக்கு நடந்து பின்னர் நிறுத்தப்பட்டுவிட்டது. மக்களின் வாழ்வாதாரப் பொருள்கள் அழிக்கப்பட்டபடியால் அவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது. தேவாலயங்களில் மக்கள் தஞ்சமடைந்திருப்பதால் தண்ணீர் மற்றும் கழிவிட வசதிகள் அவசியமாகத் தேவைப்பட்டன. இம் மாதிரியான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

உயிரிழப்புகளுக்கு மேலாக பேசாலை மக்களிடையே மனப்பாதிப்பே அதிகம் காணப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயமடைந்தோர் சிலர் குருநாகல் மற்றும் அனுராதபுர வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். வறுமைக் கோட்டிற்குக் கீழேயிருக்கும் இவர்களின் உறவினர்கள் பேசாலையிலிருந்து நோயாளர்களைச் சென்று பார்ப்பது இயலாத காரியம். அத்துடன் சிங்களவர்கள் வாழும் பகுதிகளுக்குப் போகவே இந்த உறவினர்கள் பயப்படுகிறார்கள்.

படகு மற்றும் வாடிகளைப் பறிகொடுத்த மீனவர்கள் இதற்கான காப்புறுதிகளேதுமற்ற நிலையில் எப்படி இந்த இழப்புகளை ஈடுசெய்யப் போகிறார்கள்? எல்லாக் கொடுமைகளுக்கும் மேலாக பேசாலை, மன்னார் பகுதிகளில் மீன்பிடித்தடை ஏற்படுத்தப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட மீனவர்கள் சிலருடன் பேசியபோது, அவர்கள் இலங்கைக் கடற்பரப்பிலே இந்திய மீனவர்கள் எந்தத் தடங்கலுமின்றி மீன்பிடிப்பதாகக் குறிப்பிட்டனர். மீன் பிடி சம்பந்தப்பட்ட தொழில்களையே பிரதான வருமான மூலமாகக் கொண்ட பேசாலை மக்கள் நிச்சயமற்ற எதிர்காலத்தைப் பயத்துடன் எதிர்நோக்குகின்றனர்.


கடந்த டிசம்பரில் இந்தப் பகுதியில் நடந்த மோதலில் தனது மனைவி தெரசா குருஸ் மற்றும் நான்கு வயது மகன் டிலக்ஷனையும் இழந்த குருஸ் என்பவரைப் பேசாலைத் தேவாலயத்தில் சந்தித்தோம். எரிந்த வீட்டிலிருந்த உடல்கள் பரிசோதனைக்காக காலி கரப்பிட்டியா வைத்தியசாலைக்குக் கடந்த டிசம்பர் 2005ல் அனுப்பிவைக்கப்பட்டதாகவும் இதுவரை இந்த வழக்கில் எந்த முன்னேற்றமுமில்லையென்றும் அவர் தெரிவித்தார். இந்த மோதலின் போதும் 'வெற்றி நாயகி' தேவாலயத்திற்கே மக்கள் அடைக்கலம் தேடி ஓடினர். இப்போது அதற்கும் அடி விழுந்துள்ள நிலையில், இந்தப் பிரதேச மக்களுக்கு அடைக்கலம் கொடுப்பதற்குக் கூட ஒரு இடம் இல்லாமல் போய்விட்டது.

இந்த வன்முறைச் சம்பவங்களினால் சிறுவர்களின் கல்வியும் பாதிக்கப்பட்டுள்ளது. அவர்களின் மனங்கள் பாதிப்படைந்திருப்பதுடன் பாடங்களில் கூர்ந்த கவனஞ்செலுத்த முடியாத நிலையிலுள்ளனர். உதாரணமாக பேசாலையின் பெரிய பெண்கள் பாடசாலையான சென்ற் மேரீஸ் வித்தியாலய மாணவிகள் இலங் கைக் கடற்படை முகாமைத் தாண் டித்தான் தமது பாடசாலைக்குப் போக வேண்டியுள்ளது. இதனால் இம் மாணவர்கள் பாடசலை போகப் பயப்படுகிறார்கள்.

### இலங்கைக் கடற்படையினர் போலவேயிருந்தனர்

நேரில் கண்ட சாட்சியங்களில் ஒருவர், இந்தக் கொலைகளை நடத்தியோர் அணிந்திருந்த உடை, பாவித்த மோட்டார் சைக்கிள் முதலியன கடற்படையினரது போலவே இருந்தது என்று திட்டவட்டமாகச் சொல்கிறார். ஆரம்ப கட்டங்களில் விடுதலைப் புலிகள் தான் இந்தத் தாக்குதல்களுக்குக் காரணமென அரசாங்கம் செய்தி வெளியிட்டாலும், சாட்சியங்களும் மன்னாரின் கத்தோலிக்க மதகுருவும் இது இலங்கைக் கடற்படையின் வேலையே எனச் சுட்டிக்காட்டுகின்றனர். ஜூன் 24ல் அமைச்சர்கள் குழுவொன்று பேசாலைக்குச் சென்று பார்வையிட்டது. பேசாலையின் உதவி அரச அதிபர் ஏற்கனவே இழப்பு விபரங்களைச் சமர்ப்பித்து விட்டார். எனவே பாதிக்கப்பட்ட மக்களுக்கான நட்ட ஈடுகளை அரசாங்கம் கொடுக்கத் தொடங்கவேண்டும். அத்தோடு தேவாலயத்தின் இடிபாடுகளையும் சீர்செய்யவேண்டும்.

மனித உரிமைக்குழு, மதகுருமார், அரசியல்வாதிகள் ஆகியோர் இந்தப் படுகொலைகளுக்காக சுதந்திரமான ஒரு விசாரணைக் குழு அமைக்கப்பட வேண்டுமென வலியுறுத்தி வருவதைத் தொடர்ந்து, ஜனாதிபதி ஒரு



**வெடிக்காத மேலும் இரு 'கிரனேட்' களும் வெடித்திருந்தால் இறப்பு எண்ணிக்கை 300 அல்லது 400 ஆகக் கூடியிருக்குமென்று மக்கள் அஞ்சுகின்றனர்.**

விசாரணைக்குழுவை அமைத்தபோதும் அதன் உறுப்பினர்களின் பெயர் விபரங்கள் இன்னமும் வெளியிடப்படவில்லை. இந்த விசாரணைக்குழுவின் முடிவில் பாதிக்கப்பட்டோருக்கு அனுசரணையான தீர்ப்பளித்து அவர்களின் பொருளிழப்புகளுக்கு ஈடு கட்டவேண்டும். ஜூன் 15ல் எரிந்த சடலங்கள் இன்னும் விசாரணைக் குழுவினால் அடையாளம் காணப்படாதவிடத்து, இனிமேலும் வரக்கூடிய இராணுவ அனர்த்தங்கள் இவ்வாறாகவே நடக்குமென்றே தோன்றுகிறது. இதற்கு முன்னைய, திருகோணமலையில் 5 இளைஞர்கள் கொல்லப்பட்டமை போன்றவைகளும் கூட இலங்கையில் சட்டம் ஒழுங்கு எப்படிக் கட்டுக்கடங்காமல் போய்க் கொண்டிருக்கிறது என்பதற்கோர் உதாரணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மையைத் தேடி கெபற்றிகொலாவவுக்கு..



தமிழில்: வ.விசுவலிங்கம்

INFORM அமைப்பைச் சேர்ந்த சுனிலா அபேசேகர, உதயா களுபத்திரண, மாற்றுக் கொள்கைகளுக் கான நிலைய(CPA) பிரதிநிதிகளான மிராக் ரஹீம், பவானி பொன்சேகா, மனித உரிமைகளுக்கான ஆசிய மன்ற(ASIAN FORUM FOR HUMAN RIGHTS) பிரதிநிதியான றுக்ஷனா பெர்னாண்டோ, எல்லைக் கிராமங்களில் வாழும் உரிமையை உறுதிப்படுத்துவதற்கான பொதுமக்கள் ஆணைக்குழு (CITIZEN'S COMMISSION FOR THE RIGHT TO LIFE OF BORDER VILLAGERS) பிரதிநிதியான டி.எம்.திசநாயகா ஆகியோர், இடம் பெயர்ந்த மக்களின் நிலைமைகள் தொடர்பாக ஆராய்வதற்காக ஜூன் 18ஆம் திகதி கெபற்றிகொலாவவுக்கு நேரில் சென்றனர். வணக்கத்துக்குரிய பியரத்தன அவர்களும் இவர்களுடன் இணைந்துகொண்டார்.

### பின்னணி

ஜூன் 15ஆம் திகதியன்று கெபற்றிக் கொலாவவைச் சூழவுள்ள கிராமங்களைச் சேர்ந்த மக்களை ஏற்றிக் கொண்டு வவுனியா நோக்கிச் சென்ற பேரூந்து ஒன்று கிளைமோர் தாக்குதலுக்கு உள்ளாகி, 15 சிறுவர்களுட்பட 64 பேர் கொல்லப்பட்ட சம்பவத்தையடுத்து, அந்தப் பிரதேசங்களிலி ருந்து இடம்பெயர்ந்த மக்களின் நிலைமைகளைக் கண்டறிவதற்காக நாம் அங்கு சென்றிருந்தோம்.

அனுராதபுர மாவட்டத்தில், ஹொறவப்பொத்தான - வவுனியா வீதியில் அமைந்துள்ள ஒரு சிறு நகரமே கெபற்றிகொலாவ ஆகும். திருகோணமலையிலிருந்து மதவாச்சிக்கும், வவுனியாவிலிருந்து பதவியாவிற்கும் போகும் குறுக்கு வீதிகளுக்கு அண்மையில் இந்தக் கிராமம் அமைந்துள்ளது. இங்குள்ள மக்கள் பெரும்பாலும் சிங்கள பௌத்தர்கள். கடந்த 20 வருட காலத்தில் பல இன வன்முறைகளுக்கு இந்தக் கிராமம் முகம்கொடுத்துள்ளது. இங்குள்ள கிராம மக்கள் பெரும்பாலும் வறுமைக் கோட்டுக்குக் கீழேயுள்ள விவசாயிகள். இந்தக் கிராமம் எவ்வளவு பின்னடைந்திருக்கிறதென்பதற்கு, அங்கிருந்து ஹொறவப்பொத்தான போகும் பிரதான வீதி தெளிவாக உணர்த்தி நிற்கிறது.

இலங்கை இராணுவத்துக்கு பெருமளவு எண்ணிக்கையானவர்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளை வழங்கிய கிராமமாக இது அமைகிறது. இங்கு வசிக்கும் 300க்கும் மேலான குடும்பங்களைச் சேர்ந்த ஆண்களும் பெண்களும் தற்போது இராணுவத்திலிருக்கின்றனர்.

ஜுன் 15அன்று கிளைமோர் தாக்குதலுக்குள்ளான பேருந்தானது பயணிகளால் நிறைந்திருந்தது. 130 பேர் பேருந்தில் இருந்ததாக சில செய்திகள் கூறுகின்றன. அதிலிருந்த பலர், ஜுன் 14 அன்று வவுனியாவில் கொல்லப்பட்ட ஒரு ஊர்காவல் படை உறுப்பினரின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்வதற்காகச் சென்றவர்கள். அத்துடன் பல பெண்களும் சிறுவர்களும் உள்ளூர் வைத்தியசாலைக்குச் சென்றவர்கள். இறந்தோரில் 15 சிறுவர்களும் இரு கர்ப்பிணிப் பெண்களும், ஆசிரியரான ஒரு பௌத்த பிக்குவும் அடங்குவர். அடுக்கடுக்கான உடல்கள் தமக்கு மேல் விழ, அதன் பாரம் தாங்காமல் தான் அதிகப்படியான சிறுவர்கள் இறந்துள்ளதாக மருத்துவ அறிக்கைகள் கூறுகின்றன.

கெபற்றிக்கொலாவவுக்குச் செல்லும் வீதி வெறிச்சோடிக் கிடந்தது. ஒருசில பேரே மிதிவண்டியில் சென்றுகொண்டிருந்தனர். ஜுன் 18 ஆம் திகதி நாம் அங்கு சென்ற போது, காவல்துறையினருக்குத் தண்ணீர் கொண்டுசென்ற "பௌசர்" வண்டியொன்று கெபற்றிக்கொலாவ-வவுனியா வீதியில் கிளைமோர் தாக்குதலுக்குள்ளாகியது. மூன்று காவல்படையினர் இந்தச் சம்பவத்தின்போது கொல்லப்பட்டனர். இதனால் மேலதிக பொலீசார் அங்கு குவிக்கப்பட்டிருந்ததால், நிலைமை சற்றுக் கடுமையாகவே இருந்தது. ஆனாலும், இராணுவத்தினர் எவரும் கண்ணுக்கெட்டவில்லை. அனேகமான மக்கள் தங்கியிருந்த கெபற்றிக்கொலாவ மகாவித்தியாலயத்தின் வாசலிலும் பொலீசார் காணப்பட்டனர். கூட்டம் கூட்டமாக சிங்கள இளைஞர்கள் அங்குமிங்குமாகத் திரிந்துகொண்டிருந்தனர்.

**தற்காலிக இருப்பிடங்களின் நிலமை**

ஜுன் 15ம் திகதி இடம்பெற்ற தாக்குதலையடுத்து, சுற்றுப்புறக் கிராமங்களிலிருந்து செய்தியை அறிவதற்காக கெபற்றிக்கொலா வவில் வந்து குவிந்த மக்கள் தங்கள் கிராமங்களுக்குத் திரும்பிச் செல் லாத காரணத்தால், அவர்களும் அந்த மகாவித்தியாலயத்திலேயே தங்கியிருந்தனர். ஜுன் 17ல் நடந்த பெரியளவிலான இறுதிச் சடங்குடன் மகாவித்தியாலயத்தில் மக்களின் எண்ணிக்கை அதிகரித்திருந்தது.

சம்பவத்தில் காயப்பட்டோரும், தப்பியோரும் அவர்களின் குடும்பங்களுமாகச் சேர்த்து எல்லாமாக 1013 பேர்கள் அங்கு தங்கியிருந்தனர். 16 பேர் தமது குடும்ப அங்கத்தினரை இழந்திருந்தனர். 44 பேர் காயப்பட்டோர். தாய் தந்தை மற்றும் சகோதரரையிழந்த ஒரு குழந்தையும் அங்கிருந்தது. தனது குடும்பத்திலிருந்து மொத்தமாக 18 பேரை இழந்த ஒரு வருமிருந்தார். இந்தக் குண்டு வெடிப்பினால் அப்போது நடந்துகொண்டிருந்த க.பொ.த. உயர்தரப் பரீட்சையும் தடைப்பட்டிருந்தது.

இங்கு இடப்பிரச்சினை ஒரு பெரும் பிரச்சினையாக இருந்தது. சாதாரணமாக 1800 மாணவர்கள் கல்வி பயிலும் இந்தப் பாடசாலையில், ஆயிரத்துக்கும் மேற்பட்ட வளர்ந்தவர்கள் வசிப்பதென்பது இயலாத காரியமாகும். அத்தோடு ஐந்து மலசலகூடங்களே பாவனையிலிருந்த இந்தப் பாடசாலையில் மக்களின் தேவை யை நிறைவுசெய்யும் நோக்கில் மேலும் 20 தற்காலிக கழிப்பறைகள் அமைக்கப்படவிருப்பதாக அப்போது எமக்குத் தெரிவிக்கப்பட்டது. குடிதண்ணீர் பிரச்சனையைத் தற்காலிகமாக பொலீசாருடன் இணைந்து உள்ளூர்வாசிகள் தீர்த்துவைத்தனர்.

அதிக மக்கட்பெருக்கத்தால் இந்தத் தற்காலிகப் புகலிடத்தில் மக்களின் அந்தரங்கத்தன்மை பாதிக்கப்பட்டிருந்ததோடு,அசுத்தத் தண்ணீரைப் பாவித்ததால் தொற்று நோய் அபாயமும் ஏற்பட்டிருந்தது. அத்தோடு, தாக்குதலில் தமது சொந்தங்களைப் பறிகொடுத்த மக்கள் மனரீதியாகப் பாதிக்கப்படக் கூடிய சாத்தியக்கூறுகளும் அங்கு காணப்பட்டிருந்தது.



**இறந்தோரில் 15 சிறுவர்களும் இரு கர்ப்பிணிப் பெண்களும், ஆசிரியரான ஒரு பௌத்த பிக்குவும் அடங்குவர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


### ஏனைய பிரச்சனைகள்

இந்த இடம்பெயர்ந்த மக்களுக் கான உடனடி மற்றும் இடைக்காலத் தீர்வு பற்றி நாம் கலந்துரையாடிய போது, மக்களை வெவ்வேறு இடங்க ளுக்கு மாற்றுவது தொடர்பாகப் பேச் செழுந்தது. பாடசாலையில் இடப்பற் றாக்குறையிருப்பதைப் பாதிக்கப் பட்ட மக்கள் உணர்ந்திருந்ததால், பாதுகாப்புத் தந்தால் தாம் தமது வீடுகளுக்குப் போவதில் ஆட்சேப ணையில்லை என்று ஒருவர் சொன் னார். அதிக இராணுவம் மற்றும் காவல் படையினரைப் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு அனுப்புவதா அல்லது ஊர்காவல் படையினருக்கு மேலும் ஆயுதங்களை வழங்குவதா அதிக பாதுகாப்பாக இருக்கும் என்பது அப்போது தீர்மானமாக உணரப் பட்டிருக்கவில்லை.

சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள் நாம் அங்கு நின்ற வேளையில், மக் கள் லொறிகளிலும் ட்ரைலர்களிலும் தத்தம் வீட்டுச் சாமான்களை ஏற்றிச் சென்றுகொண்டிருந்ததைக் காண முடிந்தது. இது, மக்களின் அச்சத் தையும் அவர்களது நிச்சயமற்ற எதிர்காலத்தையும் காட்டுவதாயிருந் தது. தாம் தமது வீடுகளிலில்லாத போது நடக்கும் களவுகளைத் தடுப்பதற்காகவே இம்மக்கள் தத்தம் வீட்டுச் சாமான்களை வாகனங்களில் ஏற்றிச் சென்றுகொண்டிருந்தனர். சிலர் 60 கிலோ மீற்றர் கடந்து தம்புட் டகம வரையிலும் கூடப் போய்க் கொண்டிருந்தனர். கொஞ்சம் வசதிப டைத்த மக்கள் தாமே கெபற்றிக் கொலாவ நகரத்திற்கண்மையாகப் போய் தற்காலிக வீடுகளையமைத் துக் குடியேறினர்.

தமது வழக்கமான வைத்தியப் பரிசோதனைக்காக வவுனியாவுக்குப் பயணம்செய்த பல கர்ப்பிணித் தாய் மாரும் கிளைமோர் வெடியில் அகப் பட்ட பேரூந்தில் இருந்திருந்தனர் என்ற அதிர்ச்சியான செய்தியையும் நாம் அங்கு நின்றபோது கேட்டறிந் தோம். இந்தப் பெண்கள் கெப்பற்றிக் கொலாவிலேயே தமது வைத்தியத் தேவையைப் பூர்த்திசெய்திருக்கலாம் ஆனால், வவுனியா வைத்தியசாலை யின் சுகாதார நிலையம் வாகன வசதியற்ற நிலையிலிருந்ததால், சுகா தாரப் பரிசோதகர்கள் கெபற்றிக்கொ லாவவுக்கு வரமுடியாமலிருந்தனர். கெபற்றிக்கொலாவவின் சுகாதார நிலையத்திற்கென ஏற்கனவே ஐ.நா. சிறுவர் நிதியம் (UNICEF) ஒரு வாகனத்தை வழங்கியுள்ளதாகவும், ஆனால் அது இன்னும் பாவனைக்கு வந்து சேரவில்லையெனவும் மக்கள் எம்மிடம் கூறினர்.

நாம் கருத்துக்கேட்ட மக்களி டையே பொதுவாக ஒரு வெறுப்பு மனப்பாங்கு தெரிந்தது. தமது நகரத் தில் குண்டு வெடித்ததால் மட்டுமே



**16 பேர் தமது குடும்ப அங்கத்தினரை இழந்திருந்தனர். 44 பேர் காயம்பட்டோர். தாய் தந்தை மற்றும் சகோதரரையிழந்த ஒரு குழந்தையும், தமது குடும்ப அங்கத்தவர்கள் 18 பேரை இழந்த ஒருவரும் அங்கிருந்தார்.**

இந்த அரசியல்வாதிகள் இப்போது அக்கறை காட்டுகிறார்கள் என்றும், சில நாட்களில் நடந்தவற்றை மறந்து வேறு அலுவல்களைக் கவனிக்கப் போய்விடுவரென்றும் சிலர் நம்பிக் கையிழந்த நிலையில் பேசினார்கள்.

### மேலதிக செய்திகள்

ஏப்ரல் 2006ல், ஹொறவப்பொத்தா னவில் ஆறு விவசாயிகள் படு கொலை செய்யப்பட்ட சம்பவத்தை யடுத்து அங்கிருந்து வெளியேறி தெற்குப் பிரதேசங்களுக்கு இடம்பெ யர்ந்த சிங்களக் கிராம மக்கள், இப் போது கொஞ்சம் கொஞ்சமாக மீண்டும் குடிவர ஆரம்பித்திருக்கிறார் கள். எனினும், சிலர் தமது மனைவி பிள்ளைகளைத் தமது உறவினர்களு டன் விட்டுவிட்டுத் தாம் மட்டுமே கிராமத்தில் இருக்கின்றனரென வணக்கத்திற்குரிய பியரத்ன என்ற பிக்கு கூறினார்.

இதே நேரத்தில் இங்கு வசித்த தமிழ் குடும்பங்கள் இடம்பெயர்ந்து மன்னாருக்குச் சென்று, அங்கிருந்து தமிழ்நாட்டுக்குச் செல்வதற்காகக் காத்திருக்கின்றனர் என்றும் அறிய முடிந்தது. இதில் பலர் ஏற்கனவே தமிழ்நாட்டிலிருந்து போர்நிறுத்தத் திற்குப் பின்னர் திரும்பிவந்தோர் என்பது கவனிக்கப்படவேண்டிய விடயம்.

கிராமத்தாரிடையே துப்பாக்கிகள் விநியோகிக்கப்பட்டுவிட்டன. மேலும் துப்பாக்கி ரவைகளுக்காக அவர்கள் விண்ணப்பித்திருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. ஆனால், ரவை கள் தமக்கு இன்னமும் கிடைக்கப் பெறவில்லை என்று கிராம மக்கள் கூறுகின்றனர்.

ஜூன் 15ஆம் திகதி இடம்பெற்ற தாக்குதலுக்குப்பின் எந்த நீண்டதூ ரப் பேரூந்துகளும் ஓடவில்லை. பழிவாங்கும் நோக்கில் தமிழர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட லாம் என்ற அச்சத்தில், திருகோணம லையிலிருந்து வவுனியாவுக்கு வந்த பேரூந்துகள் திருப்பிவிடப்பட்டன. தமிழருக்கெதிராக சிங்கள மக்கள் ஆத்திரம் கொண்டிருந்தது, அவர்க ளின் பேச்சிலிருந்து தெரிந்தது. மீண் டும் தமிழர் அங்கு வந்தால் தாம் அவர்களைத் தாக்குவோமென்று அவர்கள் சொல்லிவருகின்றனர்.

### முடிவான கருத்துக்கள்

கெபற்றிக்கொலாவ மிகவும் பின் தங்கிய பிரதேசம் மட்டுமல்லாமல், (வட-தென்) எல்லையிலிருப்பதால் அடிக்கடி தாக்குதலுக்குள்ளாகும் பலவீனத்திலுமிருக்கிறது. அங்கு பாதுகாப்புக்கென நியமிக்கப்பட்டோர் அம்மக்களை மனிதக் கேடயங் களாகவே பயன்படுத்துகின்றனர். அரசாங்கமும் ஏனைய உலக உதவி நிறுவனங்களும் கெபற்றிக்கொலாவ மக்களின் நீண்ட கால நலனுக்கும் பாதுகாப்பிற்குமேற்ற ஒரு தீர்க்கமான அரசியல் முடிவை விரைவாக எடுக்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இரு தரப்பு யுத்தத்தினிடையே பொதுமக்களின் பாதுகாப்புக்கு என்ன வழி?

## பொதுமக்களின் தற்போதைய பாதுகாப்பு நிலைமை

**எந்த ஒரு சமாதான உடன்படிக்கையும் தயாராகும்போது மக்களின்– முக்கியமாக இடம் பெயர்ந்த மக்களின் குடியுரிமை மற்றும் பொருளாதார உரிமைகள் மீது கவனம் செலுத்தப்பட வேண்டும்.**

அண்மைக்காலமாக வடக்கு, கிழக்கில் தினமும் நடைபெற்றுவரும் வன்முறைகளில் அப்பாவிப் பொதுமக் கள் அதிகப்படியாகப் பாதிப்படைந்து வருகிறார்கள். நாளாந்தம் "கிளைமோர்" அல்லது நிலக்கண்ணிவெடியினால் இறப்பவர்களும், இராணுவம் அல்லது ஏனைய ஆயுதப்படையினரின் பழிவாங்கல் காரணமாக இறப்பவர்களும் என இறப்பு எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே போகிறது. பல சம்பவங்களில் இந்த மாதிரி யான தாக்குதல்கள் இனவிரோதம் காரணமாக இடம்பெறுவதும் அவ்வாறான சம்பவங்களில் அப்பாவிப் பொதுமக்கள் சாவதும் வழமையாகவுள்ளது.

இந்த வன்முறைகளாலும் ஸ்திரமற்ற தன்மையாலும் நாளாந்தம் தமது வீடு வாசல்களை விட்டு இடம் பெயர்ந்து பாதுகாப்பான இடங்கள் என்று தாம் கருதும் இடங்களுக்குச் செல்லும் மக்களின் தொகையும் அதிகரித்து வருகிறது. கடந்த சில மாதங்களாக இந்த மாதிரியான இடப்பெயர்வுகள் அதிகரித்து வருகின்றன. இப்படியான இடப்பெயர்வுகள் பலவிதமாக அமைகின்றன. தமது சொந்த மாவட்டங்களுக்குள்ளேயே மக்கள் இடம்பெயர்வது, வேறு மாவட்டங்களுக்குப் போவது, இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளிலிருந்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கோ, அன்றி, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலிருந்து இராணு

பவானி பொன்சேகா

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

தமிழில்: வ.விசுவலிங்கம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வம் கைப்பற்றியிருக்கும் பிரதேசங்களுக்கோ இடம்பெயர்வது என பல வழிகளில் இந்த இடப்பெயர்வுகள் நடந்தேறுகின்றன. இத்துடன் மட்டுமல்லாது தமது உறவினர்கள் அல்லது நண்பர்களுடன் தங்கியிருப்போரும், "இரவு நேர நகர்வாளர்கள்" எனச் சொல்லக்கூடிய, இரவு நேரங்களில் மட்டும் அண்டையிலுள்ள பாடசாலை, கோவில்களில் போய்த் தங்கியிருப்போரும் எனப் பலருமுள்ளனர்.

இந்த மாதிரியான நிரந்தரமற்ற சூழ்நிலைகளால் வடக்குக் கிழக்குத் தமிழர் தமது உயிரைப் பணயம் வைத்துக் கடலில் ஆபத்தான பயணத்தை மேற்கொண்டு தமிழ் நாட்டுக்கு அகதிகளாகப் போகின்றனர். சமீப கால வன்முறை காரணமாக திருகோணமலையிலிருந்து இடம்பெயர்ந்து மன்னார் வந்தடைந்து தமிழ் நாட்டுக்குப் போவதற்காகக்



காத்திருக்கும் அகதிகளின் தொகை அதிகரித்து வருகிறது.

அதிகரிக்கும் வன்முறைகளும், ஸ்திரமற்ற போக்கும் மக்களிடையே மீண்டும் பயத்தையும் யுத்தம் பற்றிய சந்தேகத்தையும் கிளப்பியுள்ளது. இந்த மக்களில் ஏராளமானோர் ஏற்கனவே போரினால் பல தடவைகள் இடம்பெயர்ந்தவர்கள் தான். பலர் தமது சொந்தங்களைப் போரில் பறிகொடுத்தவர்கள். பலர் வீடுவாசல்களை முன்பே பலதடவைகள் இழந்தவர்கள்! இதற்கும் மேலாகச் சிலர் சுனாமியால் கடுமையாகப் பாதிக்கப்பட்டவர்கள்.

இப்படி நெருக்கடியான சந்தர்ப்பங்களிலும், பாரிய இடப்பெயர்வுகளிலும், சமாதானப் பேச்சுவார்த்தைகளின்போதும் மக்களின் இறைமைக்கும், பாதுகாப்புக்கும் பங்கம் நேரிடாமல் பாதுகாக்கவேண்டிய கட்டாயமிருக்கிறது. அவர்களது அடிப்படைத் தேவையை எந்தத் தடைகளுமின்றிப் பூர்த்திசெய்ய வேண்டிய கடமை அரசாங்கத்துக்குள்ளது. சகல அரசியல் கட்சிகளுக்கும் மக்களின் அடிப்படை உரிமை, பாதுகாப்புப் பற்றிய புரிந்துணர்வு அவசியமாகிறது.

இதன் காரணமாக எந்த ஒரு சமாதான உடன்படிக்கையும் தயாராகும் போது மக்களின்- முக்கியமாக இடம்பெயர்ந்த மக்களின் குடியுரிமை மற்றும் பொருளாதார உரிமைகள் மீது கவனம் செலுத்தப்படவேண்டும். இந்தக் கட்டத்தில் காட்டமான நடவடிக்கைகள் சம்பந்தப்பட்டவர்களால் மேற்கொள்ளப்படவேண்டும்.

### பொருத்தமான நடவடிக்கைகள்

பொதுமக்கள் எந்த விதத்திலும் தாக்கப்படாதவாறோ, மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தப்படாதவாறோ எல்லாத் தரப்பினரும் பார்த்துக்கொள்ளவேண்டும். அடிப்படைத் தேவையான உணவு பெறுவதற்கு எந்தத் தடையும் இருக்காதவாறும், அதைப் பெறுவதற்கு எந்தப் பயமுறுத்தல்களும் இருக்காதவாறும் பார்த்துக்கொள்ளவேண்டும். தமது சொந்த வீட்டில் சுற்றங்களுடன் சொந்தக் கிராமங்களில் மக்கள் வாழ்வதற்கு வகை செய்யவேண்டும். சமயத்தலைவர்களும், சமூகத்தலைவர்களும் போரின் பங்குதாரர்களுடன் கலந்து சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்கலாம். உள்ளூர் காவல்துறையுடனும், இராணுவ, அரசாங்க அதிகாரிகளுடனும் மக்களின் பாதுகாப்பு விடயமாக இவர்கள் கலந்துரையாடலாம். மேலும் அரசாங்கம் தனது அலுவலர்கள் பயங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரவாதத் தடைச்சட்டத்தைத் துஷ்பிரயோகம் செய்யாதவாறும் அதனால் சிறுபான்மைத் தமிழர் பாதிப்படையாதவாறும் பார்த்துக்கொள்ளவேண் டும்.

அரசாங்க அலுவலர்கள் இடம்பெயர்ந்த மக்களுக்கு அடிப்படை வசதிகளான இருப்பிடம், உணவு, தண்ணீர், கழிவிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். குழந்தைகள், பெண்கள், வயோதிபர் மற்றும் வலதுகுறைந்தோருக்கான வசதிகளுக்கு முன்னுரிமை அளிக்கவேண்டும். இதற்கும் மேலாக, இந்த மாதிரியான இடம்பெயர்ந்தோர் வாழும் கட்டடங்களில் பெண்களுக்கான தனி அறைகளோ மறைப்புக்களோ அமைத்து அவர்களின் மரியாதை பேணப்படவேண்டும். தற்காலிக வசிப்பிடங்களிலிருந்து நிரந்தரக் கட்டடங்களுக்கு மக்களை காலதாமதமின்றி மாற்றவேண்டும். சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிரந்தர வதிவிடம் கொடுப்பது காலதாமதமாகியது போன்ற சூழ்நிலை கள் இனிமேல் ஏற்படக்கூடாது.

மேலும் பாதுகாப்பற்ற கடல் பயணத்தை மேற்கொள்ளும் மக்களின் அவலங்களை அரசாங்கம் கவனத்திற்கொண்டு உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். பல தமிழ் அகதிகள் படகுக்காரர்களுக்கும், கடற்படையினருக்கும் ஏராளமாகப் பணம் கொடுத்தாவது இந்தியா போகிறார்கள். இந்த மக்களுக்கான பாதுகாப்பான பயணத்தை அரசாங்கம் உறுதிப்படுத்தவேண்டும். இதற்கு ஒரு நடைமுறைச் சாத்தியமான ஒப்பந்தம் இலங்கை இந்திய நாடுகளால் அரசசார்பற்ற நிறுவனங்களோடிணைந்து ஏற்படுத்தப்படவேண்டும்.

இந்த இடம்பெயர்ந்த மக்களுக் கான அடிப்படை வசதிகள் குறுகிய காலத்துக்கு மட்டுமில்லாது, அவர்கள் சொந்த இடங்களுக்குப் போகும் வரையில் கிடைக்கக்கூடியதாகச் செய்யவேண்டும். இந்த வசதிகளுக்கு குழந்தைகள், வயதானோருக்கு முன்னிடமளிக்கலாம்.

சமாதான உடன்படிக்கையின் போது, மக்கள் தங்கள் சொந்த வீடுகளுக்குச் செல்ல வசதிகள் அமைப்பது மட்டுமல்லாது, அப்படிச் சென்று நிரந்தரமாக இருக்கவும் வசதிகள் செய்யவேண்டும். ஆக்கிரமிப்பாளர்களால் கைப்பற்றப்பட்ட தமது வீடு மற்றும் காணிகளை மீண்டும் தமது சொந்தமாக்கி அனுபவிக்கும் உரிமையை மக்களுக்கு அரசாங்கம் ஏற்படுத்தவேண்டும்.

உதாரணமாக கம்போடியா, குவாற்றமாலா, புருண்டி, சியெரலியோன் மற்றும் லைபீரியா நாடுகளில் நடந்த உள்நாட்டுக் கலவரங்களினால் பாதிக்கப்பட்ட அகதிகள் தமது சொந்த இடங்களுக்குச் செல்லும் உரிமையை சமாதான உடன்படிக்கை ஏற்படுத்திக் கொடுத்தது. அதே நேரத்தில் அந்த மாதியான மீள இடப்பெயர்வுகள் அரசாங்கதால் கட்டாயமாக்கப்படவும் கூடாது. முடிவாக, அரசாங்கம் சகல தரப்பினரோடும் ஆராய்ந்து மக்க ளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும், தனிமனித சுதந்திரத்தைப் பாதுகாக்கக்கூடிய ஒரு தீர்வை முன்னேடுக்க வேண்டும்.



**கம்போடியா, குவாற்றமாலா, புருண்டி, சியேர லியோன் மற்றும் லைபீரியா நாடுகளில் நடந்த உள்நாட்டுக் கலவரங்களினால் பாதிக்கப்பட்ட அகதிகள் தமது சொந்த இடங்களுக்குச் செல்லும் உரிமையை சமாதான உடன்படிக்கை ஏற்படுத்திக் கொடுத்தது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர் பாதுகாப்பு வலயங்களின் அடிப்படை என்ன?

வி.எஸ்.கணேஷலிங்கம் தமிழில் கோ.றுஷாங்கன்
மனித உரிமைகள் இல்லம்



உள்நாட்டில் இடம்பெயர்ந்தோரின் உரிமைகள் தொடர்பான அக்கறை உலக அளவில் அதிகரித்துவரும் ஒரு சூழலில், இலங்கையில் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோரின் உரிமைகள் மீறப்படுவது தொடர்பான விவகாரத்தின் மீது அதிக கவனம் செலுத்தப்படவேண் டியது அவசியமாகிறது. உள்நாட் டில் இடம்பெயர்ந்தோரின் மனித உரிமைகளுக்கான ஐ.நா. செயலாளர் நாயகத்தின் பிரதிநிதியும், அகதிகள் சட்ட வல்லுனருமான வால்ற்றர் கலின், உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் உரிமைகள் தொடர்பாகக் கூறியிருக்கும் கருத்துக்கள் இங்கு அதிக கவனத்தைப் பெறுகிறது.


"சில வருடங்களுக்கு முன்பு வரையில் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோரின் மனித உரிமைகள் தொடர்பாக அரசாங்கங்களுடன் உரையாடுவது இயலாத ஒரு காரியமாகவே இருந்தது. இன்று குறைந்தபட்சம் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களுக்கும் கூட மனித உரிமைகள் இருக்கின்றது என் பதை பலரும் ஏற்றுக்கொள்ளத் தலைப்பட்டுள்ளார்கள்" என்று சொல்கிறார் வால்ட்டர் கலின். ஐக்கிய நாடுகள் சபையின் பழைய மிலேனியத்துக்கான

***இரண்டாம் கட்ட ஜெனீவா பேச்சுவார்த்தையில் கலந்துரையாடப்படவேண்டிய விடயங்கள் தொடர்பாக, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினால் நடாத்தப்பட்ட கருத்தரங்கொன்றில், உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாக சட்டத்தரணி வி.எஸ். கணேஷலிங்கம் ஆற்றிய உரையின் தொகுப்பு. இரண்டாம் கட்ட ஜெனீவா பேச்சுவார்த்தையின்போது உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக ஆராயப்படலாம் என்று எதிர்பார்க்கப்பட்டபோதும், துரதிர்ஷ்டவசமாக அந்தப் பேச்சுவார்த்தை இடம்பெறவில்லை.***

கடைசிப் பொதுச்சபையில் உரையாற்றிய ஐ.நா.பொதுச் செயலாளர் கொபி அனான், ஐ.நா. உறுப்பு நாடுகள், தமது நாடுகளின் இறைமை, நாட்டு எல்லைகள் தொடர்பான சர்ச்சைகளைப் புறந்தள்ளிவிட்டு, உள்நாட்டு முரண்பாடுகளால் பாதிக்கப்பட்டு அநாதரவாக் கப்பட்டுள்ள மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். அல்லாதுபோனால், உள்நாட்டு முரண்பாடுகளில் தலையீடு செய்து, சமாதானத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**"உள்நாட்டு முரண்பாடுகளில் தலையீடு செய்து, சமாதானத்தை ஏற்படுத்தும் செயற்பாடுகளையும், சர்வதேச மனிதாபிமான, மற்றும் மனித உரிமைச் சட்டங்களை நடைமுறைப்படுத்தும் செயற்பாடுகளையும் ஐ. நா. பாதுகாப்புச் சபையினூடாக மேற்கொள்ளவேண்டும்" .**

ஏற்படுத்தும் செயற்பாடுகளையும், சர்வதேச மனிதாபிமான, மற்றும் மனித உரிமைச் சட்டங்களை நடைமுறைப் படுத்தும் செயற்பாடு களையும் ஐ.நா. பாதுகாப்புச் சபையினூடாக மேற்கொள்ளக் கூடியதாக இருக்க-வேண்டும் என்பதுடன், இந்த விடயத்தில் ஒத்துழைக்க மறுக்கும் தேசங்க ளின் மீது ஆயுத விற்பனைத் தடை உள்ளிட்ட பொருளாதாரத் தடை களை விதிக்கவேண்டும் என்றும் அவர் ஆலோசனை கூறினார்.

சர்வதேச மனித உரிமைகள் சாசனத்தை ஏற்றுக்கொண்ட நாடு கள், அவற்றைப் பாதுகாக்கும் கடப்பாட்டைக் கொண்டுள்ளன. அதியுயர் பாதுகாப்பு வலயத்திலி ருந்து மக்களைப் பலாத்காரமாக வெளியேற்றும் செயற்பாடானது, மனித உரிமைகளையும், மனிதாபி மான சட்டங்களையும் மீறுவதாக அமைகிறது. ஒருவருடைய உயிர் வாழ்வதற்கான உரிமை, நடமாடுவ தற்கும், சுதந்திரமாக ஒரு வசிப் பிடத்தைத் தெரிவுசெய்வதற்குமான உரிமை, மத உரிமை, தேர்தல்க ளில் பங்கு பற்றுவதற்கான உரிமை, பொது மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சாசனத் தினால் அங்கீகரிக்கப்பட் டுள்ள சிறுபான்மையினருக்கான உரிமைகள் மற்றும் சட்டத்தைப் பாதுகாப்பதற்கான சமவுரிமை, தொழில் செய்வதற்கான உரிமை, போதிய வாழ்க்கைத்தரத்தைப் பேணுவதற்கான உரிமை, பொரு ளாதார மற்றும் சமூக கலாசார உரிமைகள் தொடர்பான சர்வதேச சாசனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி மற்றும் சுகாதார உரிமைகள் ஆகியவற்றுடன், இன ஒதுக்கலுக்கு எதிரான சாசனத்தினால் அங்கீ கரிக்கப்பட்ட சட்டத்துக்கு முன் எல்லோரும் சமனானவர்கள் என்ற உரிமை என உயர் பாதுகாப்பு வலயத்தினால் குடிமக்களுடைய பல்வேறு உரிமைகள் மீறப்படுகின் றன.

இவற்றுக்கு மேலதிகமாக, சிறு வர் உரிமை தொடர்பான சாசனத் தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சிறு வர்களின் உயிர் வாழ்வதற்கான உரிமை(உறுப்பு-6), பெற்றோ ரிடமிருந்து பிரிக்கப்படாதிருத் தல்(உறுப்பு-9), பௌதீக மற்றும் உள ரீதியான வன்முறைகளிலி ருந்து பாதுகாத்தல் (உறுப்பு-19), குடும்பச்சூழல் வீழ்ச்சியடைதல், போதிய வாழ்க்கைத்தரத்தைக் கொண்டிருத்தல்(உறுப்பு-27) ஆகிய சர்வதேச மனிதாபிமான முகவர்களால் ஏற்றுக்கொள்ளப் பட்ட சிறுவர் உரிமைகளையும் உயர் பாதுகாப்பு வலயம் மீறுகிறது. இவை தொடர்பாக மனித உரிமைகளைப் பாதுகாப்ப தற்கான ஐ.நா.வின் விசேட அதிகா ரிக்கு ஏற்கனவே விளக்கமாக எடுத் துச் சொல்லப்பட்டுள்ளது.

உயர் பாதுகாப்பு வலயங்களின் சட்ட அங்கீகாரம் தொடர்பான பிரச் சினையும் இங்கு கவனத்தில் கொள்ளப்படவேண்டிய முக்கிய பிரச்சினையாகும். எந்தவொரு சட்ட நடைமுறைகளுக்குக் கீழும், வடக்கு, கிழக்கிலுள்ள எந்தவொரு பிரதேசமும் உயர் பாதுகாப்பு வல யமாகப் பிரகடனப்படுத்தப்பட வில்லை. உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கில் உயர் பாதுகாப்பு வலயத்தின் இந் தச் சட்டச் சர்ச்சை தொடர்பாகச் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. உயர் பாதுகாப்பு வலயத்தின் சட்ட அடிப்படை தொடர்பான எந்த ஆதாரத்தையும் அரசாங்கம் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை.


வடக்கு, கிழக்கில் மாத்திரமின்றி கொழும்பிலும் கூட உயர் பாது காப்பு வலயங்கள் இருக்கின்றன.

**எந்தவொரு சட்ட நடைமுறைகளுக்குக் கீழும், வடக்கு, கிழக்கிலுள்ள எந்தவொரு பிரதேசமும் உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்படவில்லை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பில், படைநிலைகள், ஜனாதிபதி செயலகம், முக்கிய பிரமுகர்களின் வதிவிடங்கள் என்பனவே, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் 27ஆவது பிரிவின் கீழ் உயர் பாதுகாப்பு வலயங்களாக வர்த்தமானியில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் வடக்கு, கிழக்கிலுள்ள பாதுகாப்பு வலயங்கள் இவ்வாறு சட்ட அடிப்படை எதனையும் கொண்டிராததோடு, அவை படையினரால் அவர்களுடைய இஷ்டத்துக்கு தெளிவான எல்லை வரையறை எதுவுமின்றி ஏற்படுத்தப்பட்டவையாக உள்ளன.



**42,000 ஏக்கர் பயிர்ச்செய்கை நிலம், 95 கிராமசேவையாளர் பிரிவுகள், 30,000 வீடுகள், 293 வழிபாட்டிடங்கள் மற்றும் பாடசாலைகள் உட்பட, குடாநாட்டு நிலப்பரப்பில் 30 வீதமான பகுதியில் 13 உயர் பாதுகாப்பு வலயங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.**

இது மட்டுமன்றி, கொழும்பில் உயர் பாதுகாப்பு வலயங்களில் வசிப்போரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காவே அவை பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருக்க, வடக்கில் உயர் பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்களில் அந்தப் பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் வாழவோ, தமது தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடவோ அனுமதிக்கப்படாத நிலை காணப்படுகிறது.

யாழ் குடாநாட்டிலேயே அதிகளவு எண்ணிக்கையான உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் வாழ்கின்றனர். 42,000 ஏக்கர் பயிர்ச் செய்கை நிலம், 30,000 வீடுகள், 293 வழிபாட்டிடங்கள் மற்றும் பாட சாலைகள் உட்பட, குடாநாட்டு நிலப்பரப்பில் 30 வீதமான பகுதி யில் 13 பாதுகாப்பு வலயங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மாவட்ட நிர்வாகத்தினரின் தகவல்களின் படி 95 கிராமசேவையாளர் பிரிவுகள் உயர் பாதுகாப்பு வலயங்களுக் குள் சிக்கியிருப்பதுடன், இதனால் சுமார் 24,000 குடும்பங்கள் இடம்பெயர்ந்து 50 நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வருகின் றனர். இவர்களுக்கு உதவுவதற்கு அரசாங்கம் மாதாந்தம் 36 மில்லியன் ரூபாவைச் செலவிடுகிறது.

வடக்கிலுள்ள உயர் பாதுகாப்பு வலயங்களில், பாக்கு நீரிணையில் எல்லையைக் கொண்ட, சுமார் 58.3 சதுர கிலோமீற்றர் பரப்பளவான அதிக உற்பத்தித் திறன் வாய்ந்த நிலப்பரப்பான வலிகாமம் வடக்குப் பிரதேசமே ஆகப் பெரிய பாது காப்பு வலயமாகும். இந்தப் பிரதேசத்துக்குள்ளேயே பலாலி இரா ணுவ மற்றும் விமானத் தளங்க ளும், காங்கேசன்துறைக் கடற்ப டைத் தளமும் அமைந்துள்ளன. 1983 இலிருந்து இந்தப் பிரதேசத்தி லிருந்து மக்களை வெளியேற்றுவ தற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள், 1990ஆம் ஆண்டே செய்துமுடிக் கப்பட்டது.

இந்தப் பிரதேசத்தில் வாழ்ந்த மக்களுடைய வாழ்வு ரிமை, கௌரவம், பாதுகாப்பு ஆகி யவற்றை மீறுவதாக, சர்வதேச சட்ட விதிமுறைகளுக்கு மாறாக, தொடர்ச்சியான ஷெல் வீச்சு, விமானத் தாக்குதல்கள், ஆட்லறித் தாக்குதல்கள் ஆகியவற்றின்மூலம் அவர்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். இதனால், சிறுவர், வயோதிபர் உட்பட்ட 25,351 குடும்பங்கள் உடனடியாகத் தமது சொந்த இடங்களிலிருந்து வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டு, நிர்க்கதியான நிலைக்குள்ளானார்கள்.

1983ஆம் ஆண்டிலிருந்து இலங் கையில் அரசாங்கங்களும், ஜனாதி பதிகளும் மாறிவந்த போதும், பாதுகாப்பு வலயம் தொடர்பான அவர்களுடைய கொள்கையில் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை. பாதுகாப்பு காரணங்களுக்காக உயர் பாதுகாப்பு வலயங்களை நீக்கமுடியாது என்று கூறிய இவர்கள், விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே போட்டால் மாத்தி ரமே உயர் பாதுகாப்பு வலயங் களை நீக்கி மக்களை மீளக்குடி யேற அனுமதிக்கமுடியும் என்றும் வாதிட்டு வருகின்றனர். இது, விடுத லைப் புலிகளின் இராணுவ வல்ல மையை எதிர்கொள்வதில் அரச படைகளின் இயலாமையைக் காட்டுவதாக அமைவதுடன், புலிகளின் ஆயுதங்களைக் களைவதற்கு இடம்பெயர்ந்த மக்களின் துயரத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்தும் தன்மையையும் காட்டுகிறது.

பாதுகாப்புக் காரணங்களுக்காகத்தான் உண்மையில் இந்த உயர் பாதுகாப்பு வலயங்கள் பேணப் படுகின்றனவா என்ற பலமான சந்தேகமும் காணப்படுகிறது. உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளக் குடியேற அனுமதித்தால், இராணுவத்தின் கேந்திர நிலைகள் விடுதலைப் புலிகளின் தூரத்தேயிருந்து தாக்கும் கனரக ஆயுதங்களின் தாக்குதலுக்கு இலக்காகும் என்று அடிக்கடி சொல்லப்படுகிறது. முன்னாள் இலங்கை வெளிவிவகார அமைச்சர் இந்தியாவின் ஹிந்து பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியொன்றில், பலாலி, காங் கேசன்துறை ஆகிய முகாம்களைச் சூழவுள்ள பிரதேசங்களில் போர்க்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குடும்பங்களைக் குடியேற்றி, அவர்களை மனிதக் கேடயமாகப் பயன் படுத்துவதற்கு விடுதலைப் புலிகள் திட்டமிடுவதாகக் கூறியிருந்தார். ஆனால், பூநகரி, கிளிநொச்சி, ஆனையிறவு இலங்கைப் படைநிலைகளைத் தாக்கி, அங்கிருந்து விடுதலைப் புலிகள் பெற்றுக் கொண்டிருக்கும் ஆயுதங்களைக் கொண்டு பல மைல்களுக்கு அப்பாலிருந்தே இந்த முகாம்களைத் தாக்கும் வல்லமையைக் கொண்டிருக்கிறார்கள். இந்த அடிப்படையில் நோக்கும்போது, உயர் பாதுகாப்பு வலயங்களுக்கு அடிப் படையாக இவர்கள் கூறும் பாது காப்புக் காரணங்கள் அடிபட்டுப் போகிறது.

உயர்பாதுகாப்பு வலயங்களுக்குள் மேற்கொள்ளப் பட்டுவரும் நடவடிக்கைகளை அடிப்படையாக வைத்து நோக்கும் போது, இதற்குப் பின்னால் வேறு சில திட்டங்களும் இருக்கிறதோ என்ற சந்தேகம் மேலும் வலுப்பெ றுகிறது. இந்தப் பிரதேசங்களில் வாழ்ந்த மக்கள் தமது சேமிப்பின் மூலம் கட்டிய வீடுகளில் 75 வீதமானவையும், மற்றும் கோயில்கள், பாடசாலைகள் என்பனவும் இடிக் கப்பட்டு, அந்த இடிபாட்டுக் கற்களைக் கொண்டு இராணுவத்தினர் புதிய காவலரண்களையும், பதுங்குகுழிகளையும அமைத்துள் ளனர். இடித்து நொருக்கிய வீடுகள் இருந்த பகுதிகளினூடாக, அந்தக் கற்களையே பயன்படுத்தி புதிய பாதைகளை அமைத்து, வழமை யான பாதைகளில் தமக்கு இருக் கக்கூடிய பாதுகாப்பு அச்சுறுத்தல் களிலிருந்து படையினர் தம்மைப் பாதுகாத்துக் கொள்கின்றனர்.

இந்து ஆலயங்கள் பல இடித்து நொருக்கப் பட்டு, அவற்றின் உட்பிரதேசங்கள் பயிற்சி முகாம்களாகப் பயன் படுத்தப்படுவதுடன், இந்து ஆலயங்கள் இருந்த இடங்களில் புத்தர் சிலைகளும் நிறுவப்பட்டுள்ளன. இவை தவிரவும், முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் காலத்தில் மேற்கொள்ளப்பட்டது போல, இந்தப் பிரதேசங்களிலிருந்து முருகைக் கற்களை தோண்டி யெடுக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப படுவதால், எதிர் காலத்தில் மக்கள் வாழ முடியாத பிரதேசமாக இது மாற்றமடைய இடமுண்டு.

**பாலஸ்தீனத்தில் இஸ்ரேலியர்கள் செய்ததுபோல சிறுபான்மை இனமொன்றின் அடிப்படை வாழ்வாதாரங்கள் அனைத்தையும் சிதைத்து, அதனைப் பட்டினியால் சாகடிக்கும் திட்டமொன்று மேற்கொள்ளப்படுகிறதோ என்ற சந்தேகமும் எழுகிறது.**

இவற்றைத் தொகுத்து நோக்கும்போது, பாலஸ்தீனத்தில் இஸ்ரேலியர்கள் செய்ததுபோல சிறுபான்மை இனமொன்றின் அடிப் படை வாழ்வாதாரங்கள் அனைத் தையும் சிதைத்து, அதனைப் பட்டி னியால் சாகடிக்கும் திட்டமொன்று மேற்கொள்ளப்படுகிறதோ என்ற சந்தேகமும் எழுகிறது.

இவற்றைத்தவிரவும், உயர் பாதுகாப்பு வலயங்கள் பேணப் படுவதற்கு, பாதுகாப்புக் காரணங் களைத் தவிர வேறு பல காரணங் கள் உள்ளன என்பதை நிரூபிக் கும் வகையில், அண்மையில் இந் தப் பிரதேசங்களில் இடம்பெற்று வரும் இரண்டு விடயங்களையும் இறுதியாக இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். முதலாவதாக, படையினரின் தேவைக்காக, சிறைச்சாலைக் கைதிகளைக் கொண்டு இந்தப் பிரதேசத்தில் பயிர்ச்செய்கை நடவடிக்கை மேற் கொள்ள ஆரம்பித்துள்ளனர்.

அடுத்து, பாக்கிஸ்தான் நாட்டு இராணுவ புலனாய்வுப் பிரிவினர் இந்தப் பகுதிக்கு இரகசிய விஜயங் களை மேற்கொண்டதாக செய்தி கள் வெளியாகியுள்ளன. இவர்களு டைய இந்த விஜயத்தின் நோக்கம் என்ன என்பது தெளிவுபடுத்தப்படா தபோதும், பாக்கு நீரிணைக்கு மிக அருகில் உள்ள பிரதேசமொன்றில் பாக்கிஸ்தானிய இராணுவப் புல னாய்வுப் பிரிவின் பிரசன்னம் குறித்து, தென்னிந்தியாவில் முக் கிய இராணுவ கேந்திர நிலைகளைக் கொண்டுள்ளதுடன், சேது சமுத்திரத் திட்டத்தையும் ஆரம்பித்துள்ள இந்தியா மௌனமாக இருக்கும் என்று கருதிவிட முடியாது.

உயர் பாதுகாப்பு வலயங்க ளிலிருந்து இடம்பெயர்க்கப்பட்ட மக்கள், சொந்த இடங்களில் மீளக் குடியேறுவதற்கான தமது அடிப் படை உரிமையை வென்றெடுப்ப தற்காக சாத்தியமான ஜனநாயக வழிமுறைகள் அனைத்தையும் கடைப்பிடித்துள்ளனர். அமைதிப் பேரணிகளை நடாத்தியுள்ளனர். நீதிமன்றத்துக்குச் சென்றுள்ளனர். சர்வதேச சமூகத்துக்கும், ஐக்கிய நாடுகள் சபைக்கும் மனுச்செய் துள்ளனர். இவர்களுடைய அடிப் படை உரிமைகள் தொடர்பான இந் தக் கோரிக்கைகளுக்குப் பேச்சு வார்த்தை மூலம் தீர்வு ஒன்று முன் வைக்கப்படாவிட்டால், அவர்கள் தமக்குரிய வழியைத் தாமே தேடிக் கொள்ள நிர்ப்பந்திக்கப்படுவர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமஷ்டிச் சிறப்பிதழ்

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக சமஷ்டி ஆட்சிமுறையே உகந்தது என்று உள்நாட்டளவிலும், சர்வதேச அளவிலும் பெருமளவுக்கு இணக்கம் காணப்பட்டிருக்கிறது. ஆனாலும், இன்னும் சிலருக்கு சமஷ்டி என்றால் பிடிக்காத ஒரு விடயமாகவே இருந்து வருகிறது. எனவே, தீர்வு முயற்சியில் நாம் மேலும் முன்னேறவேண்டுமானால், சமஷ்டி என்றால் என்ன, அது எவ்வாறு பல நாடுகளிலும் முரண்பாடுகளுக்குத் தீர்வாக அமைந்திருக்கிறது என்பதைப்பற்றி அறிந்துகொள்வது அவசியமாகிறது.

இந்தச் சமஷ்டிச் சிறப்பிதழ், இப்போது அதிகம் பேசப்படும் இந்திய சமஷ்டி ஆட்சிமுறை பற்றியும், அதன் இலங்கைக்கான பொருத்தப்பாடு பற்றியும் ஆராய்வதுடன், நாகலாந்து, இந்தோனேஷியா, சூடான், பொஸ்னியா, கற்றலோனிய அதிகாரப் பரவலாக்கல் அனுபவங்கள் பற்றி Forum for Federations சஞ்சிகையின் மார்ச்/ஏப்ரல் இதழிற் வெளியான கட்டுரைகளையும் உள்ளடக்கியுள்ளது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய சமஷ்டி முறை செயற்படும் தன்மை



இந்தியா தனது புவித்தோற்றத்தில் வேறுபட்டிருப்பது போன்று சமூக, பண்பாட்டு அம்சங்களிலும் வேறுபட்டிருக்கின்றது. அத்துடன், தனித்தன்மை வாய்ந்த எழுத்துருவிலான உலகிலேயே மிக நீண்ட யாப்பையும் கொண்டுள்ளது. யாப்பு 395 பொது விதிகளையும், 12 சட்ட இணைப்புக்களையும், அனுபந்தங்களையும் கொண்டுள்ளதுடன், அது அரசியலமைப்பு, நிர்வாக ரீதியான விடயங்களிலும் மிகவும் விரிவாகத் தொடர்புபடுகின்றது. இந்திய அரசாங்கத்தின் சக்திகளாக மூன்று கிளைகள் அமைந்துள்ளன. நிர்வாகம், சட்டவாக்கம், நீதித்துறை என்பவையே அவையாகும். அரசியல் யாப்பால் இவை விரித்துரைக்கப்பட்டும், சட்டவரையறை செய்யப்பட்ட மட்டுப்பாடுகளுக்கு எதிராக பரீட்சித்துப் பார்க்கப்பட்டதாகவும் உள்ளது. நீதித்துறையானது அரசியல் யாப்பின் பாதுகாவலனாக உள் ளது. இந்த அரசியல்யாப்பு நெகிழ்வுத்தன்மை கொண்டதாக இருப்பதோடு, சமஷ்டி தொடர்பான விடயங்களில் மிகவும் இறுக்கமானதாகவும் உள்ளது. அத்துடன், சமஷ்டி தொடர்பான சரத்துக்களில் ஏதேனும் திருத்தங்கள் இருப்பின் நாடாளுமன்றத் தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடனும், நாட்டின் சட்டமியற்றும் குழுவினரின் அரைவாசிப் பேரினதும் உறுதிப்படுத்தலின் மூலமுமே இதனைச் செய்யமுடியும்.

இந்த அரசியல் யாப்பு நெகிழ்வுத்தன்மை கொண்டதாக இருப்பதோடு, சமஷ்டி தொடர்பான விடயங்களில் மிகவும் இறுக்கமானதாகவும் உள்ளது.

யாப்பு ரீதியான அதிகாரத்தைக் கண்டறிவதும், அவற்றை மேம்படுத்துவதுமே யாப்பின் நோக்கமாக உள்ளது. இந்த நோக்கம் தொடர்பான தீர்மான வாசகம் 22ம் திகதி தை மாதம் 1947ல் மக்களவையால் பிரகடனப்படுத்தப்பட்டது. அது "இறைமையுள்ள சுதந்திர இந்தியா வின் அதிகாரம், சக்திகள் மற்றும் அரசாங்கத்தின் மூலங்கள் யாவும் மக்களிடம் இருந்தே தோன்றுகின்றன" என்பதாகும். இதன் முன்னுரையில் "இந்தியா ஒரு இறைமையுள்ள, சமதர்ம, மதச்சார்பற்ற, சனநாயக் குடியரசாகும். இது நாட்டின் சகல பிரசைகளின் நீதியையும், சுதந்திரத்தையும், சமத்துவம் மற்றும் தோழமையையும் பாதுகாக்கும்". இந்த இலட்சியபூர்வ சிந்தனைகள் அடிப்படைக் கட்டமைப்பை பிரதிபலிப்பதுடன், இவை திருத்தத்திற்கு உட்படமுடியாத அல்லது மாற்றமுடியாத தொன்றாகவும் உள்ளது. சமஷ்டிக் கோட்பாடும் இவ்வாறான இலட்சிய பூர்வமான சிந்தனைகளின் ஒரு வெளிப்பாடாகவே உள்ளது.

ஒரு உறுதியான நாடாளுமன் றத்தை உருவாக்கவும், பிராந்தியங்க ளின் பண்பாட்டுத் தனித்துவத்தை உறுதிப்படுத்தவும், மொழி, சமய, பிரதேச அடையாளங்களைப் பாதுகாக்கவும் சமஷ்டி ஒன்றியம் அமைக்கப்பட்டது. கலப்புப் பொருளாதாரத்தை உருவாக்குவதும், பொருளாதார ரீதியான மற்றும் பிராந்திய ரீதியான வேறுபாட்டை வருமான மூலங்கள் மற்றும் திட்ட வரைபுகள் மூலம் குறைப்பதுவும் இதன் நோக்கங்களாக இருக்கின்றன.

அங்கு, மாநில அரசுகளின் உரிமையின் சமத்துவம் பற்றிய எண்ணக்கருவோ, அரசுகளின் கவுன்சிலில் மாநில அரசுகளுக்கு சமத்துவமான பிரதிநிதித்துவமோ காணப்படவில்லை. மத்திய அரசில் பிரதிநிதித்துவம் செய்யாதவர்கள் தவிர ஏனைய அரசுகளுக்கு அதி காரம் இல்லாத நிலையே காணப்படுகின்றது.


ஒரு பிரதேசத்திலிருந்து ஒரு பகுதியை வேறாக்கி புதிய அரசாங்கத்தை உருவாக்கவும், எல்லைகளை திருத்தவும், அரசின் பரப்பை



அக்தார் மஜீத்
தமிழில்: சு.ஜீவசுதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தான் ஒப்புக்கொள்ளாத மாநில அரசைக் கலைக்கவும், பெரும்பான்மைக் கட்சிகள் இல்லாத நிலையில், அல்லது சட்டசபையில் கூட்டுக்கட்சிகளின் பெரும்பான்மை இல்லாதபோது உரிய நடவடிக்கை எடுக்கவும் மத்திய அரசுக்கு வழி வகைகள் செய்யப்பட்டுள்ளது.

குறுக்கவும், அதிகரிக்கவும் செய்வதற்கு 3வது பொதுவிதியின் கீழ் இந்திய நாடாளுமன்றத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பின்வரும் பிரிவுகளுக்கு மூன்றில் இரண்டு பங்கு விசேட பெரும்பான்மையும், அரசயாப்புருவாக்கக் குழுவின் அரைவாசிப் பேரின் அங்கீகாரமும் தேவைப்படுகிறது. மாநில அரசுகளுக்கு சட்டமூலங்களைத் திருத்துவதில் பங்களிப்புச் செய்வதிலேயோ, அல்லது ஏதேனும் திருத்தங்களைக் கொண்டுவருவதற்கான தன்னார்வச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கோ இயல்பான உரிமை கிடையாது. எனினும் இரண்டாவது உட்பிரிவை ஏற்படுத்துவதிலோ அல்லது இல்லாமல் செய்வதிலோ இவர்களுக்கு விதிவிலக்கு காணப்படுகிறது.

**மத்திய-மாநில அரசுகளின் அதிகார வரம்புகள்**

மாநில அரசுகளின் நிலையினை பின்வருமாறு வரையறுக்கலாம்.

1. மாநில அரசுகளுக்கு பிரிந்து செல்லும் உரிமை இல்லை
2. மாநில அரசுகளுக்கு எவ்விதமான முன்னுரிமைகளும் கிடையாது. ஆனால் அரசியல் யாப்பால் வெறுமனே அவர்களுக்கு அவை ஒதுக்கப்பட்டுள்ளன. மத்திய மற்றும் மாநில அரசுகளின் சட்டங்களிற்கிடையே ஏதும் முரண்பாடுகள்வரின் மத்திய அரசின் சட்டமே மேலோங்கி இருக்கும்.
3. மத்திய மாநில அரசுகளுக்கு தனித்தனியான அரசியல் யாப்புக் காணப்படுதல்
4. ஒன்றிணைக்கப்பட்ட நீதித்துறை மற்றும் ஒன்றிணைக்கப்பட்ட பொதுச் சேவையானது அனைத்திந்திய சேவைகளின் மேற்பார்வையின் கீழ் காணப்படுகிறது.
5. ஒற்றைப் பிரஜாவுரிமையே காணப்படுகிறது.
6. மாநில ஆளுனர்கள் மத்திய அரசாலேயே நியமிக்கப்படுகின்றனர்.
7. அரசியல் யாப்பானது தனிமனிதர்களின் உரிமையையும், சில குழுக்களின் உரிமைகளையும் பாதுகாக்கிறது. ஆனால் மாநில அரசுகளை அவ்வாறு காக்கவில்லை

இந்த நோக்கங்களுக்காக மத்திய அரசின் நிறைவேற்று அதிகாரமானது மாநில அரசுகளுக்கு வழிகாட்டல்களை வழங்குகிறது. எனினும், மாநிலங்களிற்காக ஒதுக்கப்பட்டுள்ளவற்றில் மத்திய அரசு தலையிட முடியாத நிலைமையும் காணப்படுகிறது. மத்திய அரசானது, மாநில அரசுகளை வெளிச்சக்திகளின் அச்சுறுத்தல்களிலிருந்தும் பாதுகாப்பதுடன் அவை அரசியல் யாப்பின் பிரகாரம் செயற்படுகின்றனவா என்பதை உறுதிப்படுத்தவும் தலையீட்டைச் செய்ய முடியும். மத்தியிலுள்ள அரசின் செயற்பாடுகள் மீது ஒரு முற்சாய்வான போக்கு மாநில அரசுகளிற்கு தென்படும்போது மத்திய அரசு வழிகாட்டல்களை வழங்கமுடியும். ஆனால், இது சட்டம் ஒழுங்கு தொடர்பான மாநில அரசுகளின் செயற்பாடுகள் தொடர்பில் பொருத்தமுடையதன்று. மேலும் இவை 365ம் பிரிவின் மூலம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளதுடன், பிரிவினைச் செயற்பாடுகள் தொடர்பான அரசியல் யாப்பு நிலைப்பாடுகள் பற்றியும் இந்தப் பிரிவு எடுத்துக் கூறுகிறது.

பொம்மையின்(Bommai) அரசு தொடர்பாக வழங்கப்பட்ட நீதிமன்றத் தீர்ப்பில், "மத்திய அரசுத் தலைவர்களால் வழங்கப்படும் வழிகாட்டல்கள் சட்டபூர்வமானதாக இருக்கவேண்டும். ஆனால், மாநில அரசு அதனுடன் ஒத்துழைப்பு வழங்காதவிடத்து யாப்பின் பிரகாரம் ஆட்சி நடத்துவது சாத்தியமானதல்ல" எனக் கூறப்பட்டுள்ளது.

அரசியல் யாப்பின் மையப்படுத்தப்பட்ட அமைப்பொழுங்கானது ஒரு ஒன்றிணைந்த அரசை நடாத்துவதற்கான போதிய அதிகாரமும், இயலுமையும் மத்திய அரசுக்கு உள்ளதை உறுதிப்படுத்துகிறது. ஒரு சக்திமிக்க மத்திய அரசினால்தான் பொருளாதார அபிவிருத்தியையும், சமத்துவத்தையும் பேணமுடியும் என்று நம்பப்பட்டது. உபதேசிய அடையாளங்களுக்கு சுதந்திர இயக்கங்களின் காலத்திலும் குறைவான மதிப்பீடே வழங்கப்பட்டது. பின்னாளில், சமஷ்டியே இனங்களிடையேயான முரண்பாடு, மொழி மற்றும் சமய விடயங்களிலான முரண்பாடுகளையும் தீர்க்கவல்லது எனக் கண்டறியப்பட்டது. அண்மிய கடந்த காலங்களில் கூட்டு அரசியல் கட்சிகள் பொருளாதார தாராளமயப்படுத்தல் மற்றும் பிராந்திய ரீதியான கட்சிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளின் வளர்ச்சி என்பன மென்மேலும் அதிகாரப்பகிர்வுக்கு வழி கோலி யது.

இந்திய சமஷ்டி என்பது ஒரு இசைவற்ற தன்மையைக் கொண்டி ருக்கிறது. ஏனெனில், காஷ்மீர், நாக லாந்து மற்றும் மேகாலயா போன்ற வற்றுக்கு விசேடமான பிரிவுகள் காணப்படுகின்றன. மாநிலங்களில் இருந்து வரும் பிரதேசக் கட்சிகள் ஆட்சியில் பொருந்தக்கூடிய தன்மை யுடன் நாடளாவிய ரீதியில் ஒரு ஒத்தி சைவுத் தன்மையை ஏற்படுத்த முயல்கின்றன.

இந்திய சமஷ்டியின் கட்டமைப்பின் 4 ஆவது பத்தியானது, சுய உள்ளூர் ஆட்சிப் பகுதிகளை கிராமிய மற்றும் நகர மட்டத்தில் உள்ளடக்கியுள்ளது. இதன் நோக்கங்கள் இரண்டு தன்மைகள் கொண்டவையாக இருக் கின்றன.

1-ஜனநாயக ரீதியான அதிகாரப பரவலாக்கம்.

2-உள்ளூர் பங்களிப்பு முதலான வற்றை திட்டமிட்ட நிகழ்ச்சியில் பங்குபற்ற வைப்பதாகும்.

ஒவ்வொரு மாநில அரசும் இவ்வா றான உள்ளூர் பிரிவுகளுக்கு தமது பங்களிப்பை வழங்குவது முக்கிய கடமையாகும். 73வது, 74வது திருத் தச் சட்டங்கள் ஒரு வரைபை ஏற் படுத்தியுள்ளன. இதன் மூலம் மாநில அரசுகள் சட்டத்திருத்தங்கள் மூலம் சட்டங்களை தமது சம்மதத்துடன் கொண்டுவர முடியும். அரசியல் யாப்பானது 5 வருடங்களுக்கு ஒரு முறை உள்ளூராட்சித் தேர்தலை நடாத்த வழிவகை செய்கிறது. அத்து டன், அது பெண்கள், பிற்படுத்தப் பட்ட வகுப்பினர், பழங்குடிகள் முதலானவர்களுக்கான இட ஒதுக் கீட்டை வழங்குவதுடன், மாநில நிதி ஆணைக்குழுவினை உருவாக்கவும், அதிகாரத்தை உரிமை மாற்றம் செய் யவும், உள்ளூர் அரச அதிகாரங்க ளுக்கு திட்டங்களைத் தயாரிப்பதற் கான பொறுப்பை வழங்கவும் வகை செய்கின்றது.

1956ஆம் ஆண்டின் மாநில அரசு மீள் ஒழுங்கமைப்புச் சட்டத்தின் கீழ் வலய மட்டத்திலான 5 ஆணைக் குழுக்கள் அமைக்கப்பட்டன. ஒவ் வொரு குழுவும் அந்தந்த மாநிலங்க ளின் முதலமைச்சரையும், அபிவி ருத்தி அமைச்சர்கள், பிரதான செயலர்களையும் திட்டக்குழுவின் ஒரு அங்கத்தவரையும் கொண்டுள் ளது. அது உள்ளூராட்சி அமைச்சரின் தலைமையின் கீழ் ஒன்றிணைக்கப் படுகிறது. மத்திய, மாநில அரசுக ளுக்கிடையில் ஒரு உளவியல் ரீதி யான உறவைப் பேணவும், சிறந்த கொள்கைகளை அமுல்படுத்தவும் இந்த நடவடிக்கைகள் உதவுவதாக நோக்கப்பட்டது.

அநேக மாநிலங்கள் உள்ளூராட்சிக் குழுக்களுக்குரிய செயற்பாடுகளை சட்டபூர்வமாகக் கைமாற்றம் செய்யா மல் ஒரு நிர்வாக ஆணைபோல் வழங்கியிருக்கின்றன. அவை, இலகுவாக மாநில அரசுகளால் மீளப்பெறப்படமுடியும். பெரும்பா லான விடயங்களில் பஞ்சாயத்துக் கள் மாநில அரசுகளின் முகவர்களா கத் தரம் குறைக்கப்பட்டுள்ளன. எனினும், இவ்வமைப்புக்கள் மூலம் அடிமட்ட மக்களை பெண்கள் முன்னேற்றத திற்கும், பின்தங்கிய சமுதாயங்களின் நன்மைக்காகவும் ஒன்று திரட்ட முடிந்துள்ளது. அரசியல்யாப்புச் செயற்பாடுகளை மீளாய்வு செய்யும் தேசிய ஆணைக் குழுவினது (National Commission for review the working of the constitution - NCRWC) தன்னாட்சி மாவட்ட ஆணைக்குழுக்கள் பற்றிய கருத்தின்படி, ஆறாவது மற்றும் பதினோராவது அட்டவணையில் கொடுக்கப்பட்ட விடயங்களானவை இவ் மாவட்டக் குழுக்களை பாதுகாக் கும் எனக் கூறப்பட்டுள்ளது. துடிப்பு மிக்க ஜனநாயகப் பிரிவுகளாக ஒரு சுய அரசாங்கத்திலுள்ள உள்ளூ ராட்சி பிரிவுகள் செயற்பட முடியா மையின் தோல்வி என்பது ஒழுங்கான உள்ளூராட்சித் தேர்தல்கள் நடத்த முடியாமலும், உலக வங்கியின் கட்ட ளைப்படி உருவாக்கப்பட்ட திணைக் களங்கள் மற்றும் விசேட நோக்கம் கொண்ட அதிகார சபைகளை திறம்பட இயங்கவைக்க முடியாத நிலைமையையும் ஏற்படுத்தியுள்ளது.

கடன் வழங்குதல் தொடர்பாகவோ, திட்டங்கள் தயாரிப்பது தொடர்பாகவோ உள்ளூர் அரச பிரதிநிகள் கலந்தாலோசிக்கப்படா மல், கடன் பொறுப்பானது ஒரு பொதுவான மக்கள் செயற்பாடு போல் வழங்கப்பட்டது. மாநில அரசுகள், மத்திய அரசு என்பவற்றுக்கிடை யான அதிகாரங்களின் பிரிவு என்பது அவர்களிற்கிடையான பொறுப்புக ளின் பகிர்வுகளை பிரதிபலிப்பதாய் உள்ளது. இவ்வகையான செயற் பாடுகளை ஆற்றவும், தமது உள்ளூர் விடயங்கள் தொடர்பான சொந்த அரசியல் யாப்புக் கடமைகளை



கூட்டு அரசியல் கட்சிகள் பொருளாதார தாராள மயப்படுத்தல் மற்றும் பிராந்திய ரீதியான கட்சிகளின் வளர்ச்சி என்பன மென்மேலும் அதிகாரப் பகிர்வுக்கு வழி கோலியது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அடிப்படையில் இந்த அரசியல் யாப்பானது, சட்டபூர்வமான அதிகாரத்துடன் இணைந்த நிறைவேற்று அதிகாரமாகும். அவசர நிலைமைகளின் கீழ் ஒரு ஒற்றையாட்சிக்குரிய குணாம்சங்களை அது கொள்ளமுடியும்.

நிறைவேற்றவும் மாநில அரசுகள் மத்திய அரசுடன் ஒத்துழைக்கின்றன. அதேநேரம் உள்ளூர் ரீதியாக விரைவாக முடிக்கப்படவேண்டிய விடயங்களிற்கு மத்திய அரசு தலையிடலாம். சமஷ்டி முறைமை செயற்பாட்டினை பரிசோதிப்பதற் கும், தேவையான பரிந்துரைகளை வழங்குவதற்கும் 'சர்க்காரியா' ஆணைக்குழு என்பது மத்திய மாநில அரசுகளின் உறவின் மேல் கட்டியமைக்கப்பட்டிருக்கின்றது. "அரசுகளிற்கிடையிலான உறவின் பொறிமுறை என்பது மத்திய அரசின் விருப்பதிற்கேற்பவே காணப்படுகின்றது" என, 'சர்க்காரியா' ஆணைக்குழு தனது அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளது.

இறுதியான பகுப்பாய்வில் மத்திய அரசாங்கத்தின் அதிகாரம் என்பது தனித்தன்மை வாய்ந்ததும், மாநிலங்களின் அதிகாரம் என்பது பகிரப்பட்ட அதிகாரமாக இருப்பதையும் காண முடிகிறது. மத்திய அரசானது நிர்வாகப் படிமுறைகள் மூலம் மாநில அரசுகளின் அதிகாரத்தைக் கட்டுப் படுத்துகிறது. காணிச் சீர்திருத்தங் கள், வன அபிவிருத்தி, நீர்ப்பாசனம் தொடர்பாக ஒரே மாதிரியான கொள்கைகள் பின்பற்றப்பட வேண்டுமென திட்ட ஆணைக்குழு வலியுறுத்துகிறது. இது மேலும் நடைமுறைப்பட்டியலின் 20வது பதிவின் மூலம் முன்னெடுக்கப்படுகிறது. இது, மேலும் பொருளாதார மற்றும் சமூகத் திட்டமிடலுடன் தொடர்புபடு கிறது. எனினும், எல்லா விடயங்களி லும் மத்திய அரசின் சட்டம் இருப்ப தால், திட்டமிடல் எனும் பெயரில் மத்திய அரசு எந்தளவிற்கும் செல்ல முடியும். இந்த அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்திற்கு பட்டியல் 1 மற்றும் பட்டியல் 111 இனால் வழங்கப்பட, மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்கள் பட்டியல் 11 ஆல் மாநில அரசுகளுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன், அவை சமஷ்டியோ அல்லது ஏதோ ஒரு வடிவத்திலோ காணப்பட வில்லை. இது மத்திய, மாநில அரசுகளிற்கிடையான இரு வேறுபட்ட தன்மையைக் காட்டுகிறது. ஆனால், தேசத்தைக் கட்டியெழுப்புதல் என்ற விடயத்தில் இவர்கள் பங்காளர்களாகச் செயற்படுகின்றனர்.

"தேசிய விருப்பம்", "மத்திய அரச வழிகாட்டல்" முதலான சொற்றொடர்களின் வரைவிலக்கணங்கள் தொடர்பான விளக்கங்களின் மீது முரண்பாடுகள் தோன்றுவதற்கான நல்ல வாய்ப்புக்களை, யாப்பின் (xi) ஆம் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள "மத்திய மாநில அரச உறவு" எனும் பதம் ஏற்படுத்தியுள்ளது. உதாரணமாக, இடைக்கால அரச ஆணைக்கு முவை நியமித்து ஒற்றுமையைத் தொடரவும், திடீரென ஒற்றுமைக் கான படிமுறைகளை உருவாக்கவும் 263 ஆம் பிரிவு ஜனாதிபதிக்கு அனுமதியளிக்கின்றது. இந்த ஆணைக்குழு தேசிய ரீதியான பொதுவான எந்த விடயங்கள் தொடர்பாகவும் ஆலோசித்து வாதிட்டு பொருத்தமான கொள்கை களை சிபார்சு செய்யமுடியும். ஜனாதிபதியின் ஆணை மூலம் இந்த ஆணைக்குழுவின் எல்லையை (அளவை) விஸ்தரிக்கவும் வாய்ப்பு உள்ளது. இருப்பினும், இது ஒரு ஆலோசனை அமைப்பாக இருப்பதால் கொள்கை தொடர்பான செயற்திறனை மதிப்பிடுவது மிகவும் கடினமானதாக இருக்கும். வெவ்வேறான அரசியல் கட்சிகளின் ஆதரவுடன் மத்திய அரசும், பல மாநில அரசுகளும் ஆட்சி செய்கின்றன. மத்திய அரசு பெரும்பான்மையாக இல்லாதபோதும் நாடாளுமன்றத்தில் தமது செல்வாக்கைச் செலுத்துகின்றது. எனினும், அவசர நெருக்கடி நிலைகளில் மாநில அரசுகளுடன் மத்திய அரசு பேரம்பேசும்போது ஒரு பொறிமுறை ரீதியான தொடர்பு தேவைப்படாது இருக்கும்.

அரசியல் யாப்பானது, மத்திய, மாநில அரசுகளிற்கிடையான சட்டங்கள் தொடர்பாகவும், நிர்வாக ரீதி யான உறவுகளை வரையறுக்கவும், வருமானங்களைப் பகிர்வது தொடர்பான செயற்பாடுகளையும் மேற் கொள்கிறது. மற்றைய சமஷ்டி முறைமைகளை விட இந்தியாவில் மத்திய அரசு தனது சட்டரீதியான செயற்பாடுகள் மற்றும் நிறைவேற்று அதிகாரங்களிற்கான நடவடிக்கைக ளிற்காகவும் ஒரு அகன்ற நீதித்துறையை ஏற்படுத்தியுள்ளது.

அடிப்படையில் இந்த அரசியல் யாப்பானது, சட்டபூர்வமான அதிகாரத்துடன் இணைந்த நிறைவேற்று அதிகாரமாகும். அவசர நிலைமைக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளின் கீழ் ஒரு ஒற்றையாட்சிக்குரிய குணாம்சங்களை அது கொள்ள முடியும். வழமையான நிலைமைகளில் காணப்படுகின்ற விசேட பெரும்பான்மை என்கின்ற நிலைமை, அவசரகாலங்களில் பொருந்தாது.

ராஜஸ்தான் மாநிலத்துக்கும், மத்திய அரசுக்கும் இடையே இடம் பெற்ற வழக்கானது(1979), மாநில அரசுகளின் பிரத்தியேகமான அக்கறைக்குரிய விடயங்களில் தலையிடும் வகையில் மத்திய அரசை வலுப்படுத்தவில்லை. பிரதமர் ஏதும் இது தொடர்பான வழிகாட்டல்களை வழங்கினும், அது மாநில அரசுகளை கட்டுப்படுத்தாது. 356 ஆம் பிரிவானது, ஜனாதிபதி தாமாக, அல்லது மத்திய நாடாளுமன்ற அதிகாரத்தின் மூலம் மாநில அரசுகளின் சட்டத்துறையை செயற்படவைக்க முடியும். இறுதியாக எவ்வாறு இருப்பினும் மத்திய அரசு தான் ஒப்புக்கொள்ளாத மாநில அரசைக் கலைக்கவும், பெரும்பான்மைக் கட்சிகள் இல்லாத நிலையில், அல்லது சட்டசபையில் கூட்டுக்கட்சிகளின் பெரும்பான்மை இல்லாதபோது உரிய நடவடிக்கை எடுக்கவும் வழிவகை செய்கின்றது.

1994இல் உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பில் கூறியிருப்பதாவது, "நம்பிக்கையீனத்திலா அல்லது அக்கறை எதுவுமின்றியா இவ்வாறான சட்டசபை கலைப்புத் தொடர்பான அரச அறிவித்தலை ஜனாதிபதி செய்துள்ளார் என்பதை பரிசீலிக்க முடியும். ஏனெனில், ஜனாதிபதி எந்த அடிப்படையில் இதைச் செய்துள்ளார் என்பது தொடர்பான விடயங்களை மத்திய அரசு உச்ச நீதிமன்றுக்கு காட்டவேண்டும்" என்ற விடயத்தை வலியுறுத்தியுள்ளது.

உச்ச நீதிமன்றம் பின்வரும் முன்மொழிவுகளை 356ஆம் பிரிவு தொடர்பாக வழங்கியிருக்கின்றது.

1) மாநில அரசின் சட்டசபையைக் கலைப்பதற்கான ஜனாதிபதியின் அரச அறிவித்தலானது நீதித்துறையின் மீள்பார்வைக்கு உட்படும்.

2) அவ்வாறான செயற்பாட்டை நியாயப்படுத்துவதை நிரூபிப்பதற்கான ஆவணங்களைக் காட்டவேண்டிய பொறுப்பு மத்திய அரசைச் சார்கின்றது.

3) முழு அரசியல் திட்டத்தின்படியும் நாடாளுமன்றத்தின் மேலவை, கீழவை இரண்டினதும் ஒப்புதலுடனேயே. ஜனாதிபதி ஒரு மாநில அரசின் சட்டசபையைக் கலைக்கமுடியும். அதுவரைக்கும், சட்டசபையானது சாவின்றி உணர்ச்சியற்ற நிலையிலிருக்கும்.

அரசியல் யாப்புச் செயற்பாடுகளை மீளாய்வு செய்யும் ஆணைக்குழு (NCRWC) பின்வரும் பரிந்துரைகளைச் செய்துள்ளது.

1) பாரிய நிபுணத்துவ ஆலோசனைகள் மத்திய மாநில அரசுகளிற்கிடையில் இடம் பெறலாம் என சட்டமூலம் 263ல் கூறப்பட்டுள்ளது.

2) மாநில அரசுகளிற்கிடையிலான வியாபார வர்த்தக ஆணைக்குழுவை உருவாக்குதல்.

3) மாநிலங்களிற்கிடையான தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சட்ட மூலங்களை செயற்படுத்தும் செயற்பாட்டாளராக இருத்தல்.

4) பக்கச்சார்பற்ற பார்வையுள்ள ஆளுநர்களை குறிப்பிட்ட முதல்வர்களின் ஆலோசனையுடன் நியமித்து அவர்களின் 5 ஆண்டு பணிக்காலத்தை மரியாதை செய்தல்.

5) 256, 257, 355 ஆகிய பிரிவுகளைப் பயன்படுத்தி அவை தோல்வியுறும் சந்தர்ப்பத்தில் இறுதியாக 365 ஆம் பிரிவைப் பயன்படுத்துதல்

6) கீழவையின் பெரும்பான்மை ஆதரவு தொடர்பான கேள்விகளைத் தயார் செய்தல்

7) தொங்கு சட்டசபை அமையும்போது முதலமைச்சரைத் தெரிவு செய்தல்.

நீதித்துறையின் உன்னிப்பான கவனிப்புடன் அங்கு ஒரு தனியான, ஒன்றிணைக்கப்பட்ட நீதி முறைமை காணப்படுகிறது. உயர் நீதிமன்றத்துக்கே மத்திய, மாநில அரசுகளிற்கிடையே ஏற்படும் எந்தப் பிரச்சினைகளையும் அல்லது இரண்டு மாநில அரசுகளிற்கிடையிலான பிணக்குகளையும் தீர்த்துவைப்பதற்கான அதிகாரம் உள்ளது. நீதித்துறையின் சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதற்கான நிலைமைகள் இங்கு உருவாக்கப்பட்டுள்ளன. நீதித்துறையானது சட்டத்துறையை ஆராய முடியுமெனினும் சட்டத்துறையின் கொள்கைகளின் உள்ளார்ந்த நுண்திறத்தை ஆராயமுடியாது.



முழு அரசியல் திட்டத்தின்படியும் நாடாளுமன்றத்தின் மேலவை, கீழவை இரண்டினதும் ஒப்புதலுடனேயே. ஜனாதிபதி ஒரு மாநில அரசின் சட்டசபையைக் கலைக்கமுடியும். இதனை நீதித்துறை மீளாய்வு செய்யமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாநில, மத்திய அரசுகள் வரியை அறவிடவும், அவற்றைப் பகிரவும் அரசியல் யாப்பில் பல பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

செயற்கைச் சேர்மப்பொருள் மற்றும் இரசாயன பொருள் கம்பனிக்கும், உத்தரப் பிரதேச அரசுக்கும் இடையிலான வழக்கில்(1990), சட்டம் உருவாகுவதற்குரிய தன்முனைப்பு 3 பட்டியல்களில் இருந்து மேலெழுகின்றது என நீதிமன்றம் கூறுகின்றது. மேலும், அரசியல் யாப்பு என்பதை ஒரு உயிருள்ள ஆவணமாக மதிக்கவும், தேசிய ரீதியான இலக்குகளை அடைந்துகொள்ளும் சாதனமாக இது இருப்பதையும் இந்தக் கூற்று வெளிப்படுத்துகின்றது.

மேற்கு வங்காள அரசுக்கும், மத்திய அரசுக்கும் இடையிலான வழக்கில், "ஒரு அரசை இன்னொரு அரசு அத்துமீறி ஆக்கிரமிப்பதை கட்டுப்படுத்துவதே சமஷ்டி" என்றும், "உயர்நீதிமன்றம் அதிகார வலுச்சம நிலையைப் பேண முயற்சிக்கும்" என்றும் கூறப்பட்டுள்ளது. இது கோலக்நாத் வழக்கிலும் பின்னர் பொம்மையின் வழக்கிலும் மீள வலியுறுத்தப்பட்டுள்ளதோடு, மாநில அரசுகள் மத்திய அரசின் செயற்கைக் கோளாகவோ, முகவர் நிலையமாகவோ செயற்பட வேண்டியதில்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

### அரசிறை

அரசிறை வருமானத்திற்குரிய சமஷ்டி என்பது இந்திய அரசியல் யாப்பின் இன்னொரு அம்சமாகும். அதாவது, மத்திய மாநில அரசுகளிற்கிடையே அரசிறையைப் பகிர்ந்து கொள்ளவும், தேவைப்படுமிடத்து மாநில அரசுகளிற்கு முழுமையான பண உதவியாகவோ, தேவைகளை வகைப்படுத்திய பண உதவியாகவோ வழங்குதவதற்கும் நாடாளுமன்றத்திற்கு வலுவூட்டப்பட்டுள்ளது. மத்திய, மாநில அரசுகளின் வரி அறவிடும் கொள்கை தொடர்பாக வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திலும், அவர்களின் சொந்த வருமான மூலங்களிற்கு மேலாக சமூக, பொருளாதார பொறுப்புக்களை அதிகரிப்பது தொடர்பாகவும் ஒரு நிலைக்குத்தான சமநிலையின்மை காணப்படுகிறது. நிதிக்குழு, திட்டமிடல் குழு மற்றும் தேசிய அபிவிருத்தி ஆணைக்குழு போன்றவை குறிப்பிட்ட கால ஒழுங்கடிப்படையில் இவ்வாறான சமநிலையின்மையை நீக்குவதற்குரிய பொறிமுறையை வழங்குவதோடு, மாநிலங்கள் தமது பொறுப்பை சிறந்த முறையில் செயற்படுத்தவும் அனுமதிக்கின்றது.

ஒவ்வொரு 5 வருடங்களிற்கு ஒரு முறை ஜனாதிபதியால் நியமிக்கப் பட்ட நிதிக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்டதன்படி மாநிலங்களிற்கிடையே நிதிப்பகிர்வைச் செய்யவும், தேறிய வரி வருமானத்தை மாநில, மத்திய அரசுகளிற்கிடையே பகிருவதற்கும் அரசியல் யாப்பு உதவுகிறது. நிதி வழங்குவதற்குரிய நோக்கங்களும் இதில் குறிப்பிடப் பட்டுள்ளது. மாநில, மத்திய அரசுகள் வரியை அறவிடவும், அவற்றைப் பகிரவும் அரசியல் யாப்பில் பல பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

வளங்களைக் கைமாற்றுகின்ற செயற்பாட்டுக்கு 275 ஆவது பிரிவின் கீழ் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. இப் பரிமாற்றம் நிதி ஆணைக்குழு வின் பரிந்துரைப்படி செய்யப்படு கிறது. இது சட்டமாக்கப்பட்ட கொடுப்பனவாக கருதப்படுகிறது. மேலும் இது, மத்திய அரசாங்கத்தால் செய்யப்படவேண்டிய கடமையாகவும் கூறப்படுகிறது. திட்டக்குழுவின் பரிந்துரைப்படி விருப்பத்துடன் கொடுக்கப்படும் நிதி என்பது, அரசியல் தன்மையுடையது என விமர்சிக்கப்படுவதுண்டு. 282வது பிரிவின்படி கொடுக்கப்படும் திட்ட நிதிக் கொடுப்பனவுகள் என்பது, விருப்பத்துக்குரிய கொடுப்பனவு மற்றும் தேவை கருதிய கொடுப் பனவு ஆகிய இரு நிதிக் கொடுப்பனவுகளையும் சரிவிகிதம் உள்ளடக்கியதாகும்(50-50). மத்திய அரசின் நிதிக் கொடுப்பனவானது, மத்திய அமைசசுக்களுக்கூடாக அந்தந்த அமைச்சுக்களை ஒத்த மாநில அமைச்சர் களால் உள்வாங்கப்படுவதுடன், அவர்களின் மூலமுமே வழிநடத்தவும் கட்டுப் படுத்தவும் படுகின்றன.

மத்திய மாநில அரசுகளிற்கிடையேயான கூட்டுறவை வளர்ப்பதில் நிறுவன ரீதியான மற்றும் முறைசாரா ஒழுங்குகள் காணப்படுகின்றன. ஒரு முறையான கூட்டுறவுப் பொறிமுறைகளாக திட்டக்குழு, நிதி ஆணைக் குழு, தேசிய அபிவிருத்தி ஆணைக் குழு, மாநில அரசுகளிற்கிடையான ஆணைக்குழுக்கள் காணப்படுவதுடன், இவை மத்திய, மாநில அரசுகளிற்கிடையான உறவின் முக்கிய மான விடயங்களையும் ஆராய்கின் றன. முறைசாராப் பொறிமுறைகள் எனும்போது அமைச்சுக்கள், திணைக்களங்களின் சந்திப்புகள், அரசியல் யாப்புச் செயற்பாட்டாளர்கள் மற்றும் அரசாங்க நிறைவேற்று அதிகாரிகள் போன்றோரின் ஒன்றுகூடல்கள் என்பவற்றோடு, மாநில ஆளுநர்கள் மற்றும் முதலமைச்சர்களுக்காக குடியரசுத் தலைவராலும், பிரதம மந்திரியாலும் நடத்தப்படும் கலந்துரையாடல்களையும் குறிப்பிடலாம். இந்த முறைசாரா ஒழுங்குமுறைகளை ஏற்படுத்துவதன் நோக்கம் என்பது, ஒழுங்கு தொடர்பான நடைமுறை விழுமியங்களை (தொடர்பை ஏற்படுத்துவதில் ஏற்படும் சிக்கல்களை) குறைப்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சர்க்காரியா' ஆணைக்குழுவின் பரிந்துரையில், தேசிய அபிவிருத்தி ஆணைக்குழு மற்றும் பிராந்திய ஆணைக்குழுக்கள் இணைக்கப்பட்டு அரசாங்கங்களிற்கிடையான ஆணைக்குழுவாக வளம்படுத்தப்பட வேண்டும் என்பதுடன், தேசிய அபிவிருத்தி ஆணைக்குழுவானது தேசிய பொருளாதார மற்றும் அபி விருத்தி ஆணைக்குழுவாக மீள் பெயரிடப்படுவதோடு, இந்தப் பெயர் மாற்றத்தின் மூலம் 263ஆம் பிரிவில் சொல்லப்பட்ட செயற்பாடுகளை செயற்படுத்தலாம் என்றும் கூறப்பட்டுள்ளது. இந்த மீள் பெயரிப்பட்ட குழுவானது அரசாங்கங்களை பாதிக்கின்ற கொள்கைகள் மீது ஏற்படு கின்ற முரண்பாடுகள் தொடர்பான பரஸ்பர நம்பிக்கையையும், பற்றுறுதி யையும் கட்டியெழுப்பும் ஓர் கருவி யாக அமையும் என 'சர்க்காரியா' ஆணைக்குழு நம்பியது. இந்த நிலைமையானது தற்போதுள்ள அரசியல் யதார்த்தத்தில் பெருமளவிற்கு காணப்படாமலுள்ளது.

தேசிய அபிவிருத்தி ஆணைக்குழுவானது 5 ஆண்டு திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்ற உதவவும், தேசியத் திட்டங்களை மேற்பார்வை செய்யவும், திட்டத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கான அளவீட்டு முறைகளைப் பரிந்துரை செய்யவும் ஏற்படுத்தப்பட்டதாகும். மாநில அரசுகள் தமது 5 ஆண்டுத் திட்டங்களை திட்டக்குழுவிற்கு சமர்ப்பிக்கும். அத்துடன், தேசிய அபிவிருத்தி ஆணைக்கழு தனது சொந்தப் பரிந்துரைகளை வழங்கும். தேசிய அபிவிருத்தி ஆணைக்குழுவானது திட்டங்கள் ஒன்றிணைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுவதையும், சமவிகிதமாக அபிவிருத்தி ஏற்படுத்தப்படுவதையும் உறுதி செய்யும். இக்குழு, மத்திய மாநில அரசுகளின் பிரதம நிறைவேற்று அதிகாரிகளை உள்ளடக்கியிருந்த போதும், இதனுடைய ஆலோசனையை ஒரு தெளிவான பார்வையில் வேறுபடுத்திக் காட்டமுடியாதுள்ளது.

இந்திய சமஷ்டியின் போட்டி என்பது பல கட்சி அரசியல் மற்றும் அதிகாரப் பகிர்வு என்பதில் ஏற்படுத்தப்பட்டதாகும். அதிகரித்த பிராந்திய வாதம் மற்றும் போட்டி அரசியல் கட்சிகளின் செயற்பாடு என்பனவற்றால் மத்திய அரசு, மாநில அரசு என்பவை அதிகாரத்தின் மையங்களாக வந்துள்ளன. எப்படி இருப்பினும், மத்திய அரசின் நிதி மற்றும் திட்டமிடலைப் பலப்படுத்துகின்ற, செயற்றிட்டங்களை நடைமுறைப் படுத்துகின்ற பொறுப்பு மாநில அரசுகளைச் சாரும். இறுதிப் பகுப்பாய்வில் அதிகாரம் என்பது உள்ளார்ந்த ரீதியில் புதுடில்லியில்தான் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இது எல்லாவற்றையும்விட அதிகம் செல்வாக்குச் செலுத்துகிறது. இந்திய அரசியல் யாப்பு என்பது இரட்டை அரசாங்க அமைப்பொழுங்கு என்பதைவிடவும் ஒன்றி ணைந்த ஒன்றியம் என்பதையே அதிகம் வலியுறுத்துகிறது.

கூட்டுப் பிரதிநிதித்துவம் மற்றும் அரசியல் ரீதியாக விருத்தி செய்யப்பட்ட அதிகார முறைகள் என்பவற்றின் ஊடாக சமஷ்டியின் மீள்கட்டமைப்பு நிகழ்கிறது. கூட்டாட்சி அரசியல் என்பது, மாநில அரசுகளிற்கிடையே எழும் பிரச்சினைகளிற்கு மத்திய அரசை ஒரு நடுத்தீர்ப்பாளர் என்பதனிலும் பார்க்க, ஒரு இலகுபடுத்துனர் எனும் பங்கை வகிக்க வைக்கிறது. ஒரு அதிகார மீள்பகிர்வு மூலம் அரசியல் யாப்பின் நோக்கங்களான ஒருமைப்பாடு, சமூக நீதி மற்றும் சனநாயகம் என்பவற்றை அடைந்துகொள்ளப் பார்க்கிறது.

உண்மையை உணர்தல் என்பது ஒரு ஆரோக்கியமான குறிகாட்டியாக உள்ளது. அதாவது அதிகாரப் பரப்பு பற்றிக் கேள்வி எழுப்புவதைவிட மக்களின் தேவையை மையப்படுத்துவது முதன்மையானதாக உள்ளது. இங்கு, அதிகாரத்தின் பிரிவுகள் என்பதிலும் பார்க்க, பொறுப்புக்கள், பங்குகள் என்பவற்றினை ஏற்றுக்கொள்ளல் என்பதே முதன்மை பெறுகிறது. சமஷ்டி அரசாங்கமானது வேறுபட்ட வளக்கிடைப்பனவு, வேறுப்பட்ட மட்டத்திலான அபிவிருத்தி நிலவும் நாடுகளிற்கே பொருத்தமானதாகும். முதன்மையானதும் மிகப்பெரியதுமானதோர் மாற்றம் என்பது ஜனநாயகத்தில் தேவைப்படுகிறது. அதாவது ஜனநாயகத்தில் பிரதிநிதித்துவம் என்பதோடு நின்றுவிடாமல் பங்குபற்றும் தன்மை என்பது வேண்டப்படுகிறது.



அதிகாரப் பரப்பு பற்றிக் கேள்வி எழுப்புவதைவிட மக்களின் தேவையை மையப்படுத்துவது முதன்மையானதாக உள்ளது. இங்கு, அதிகாரத்தின் பிரிவுகள் என்பதிலும் பார்க்க, பொறுப்புக்கள், பங்குகள் என்பவற்றினை ஏற்றுக்கொள்ளல் என்பதே முதன்மை பெறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அதிகாரப் பரவலாக்கல் முறை இலங்கைக்குப் பொருந்துமா?


**கேள்வி:-** இந்திய அதிகாரப் பரவலாக்கல் முறைமையை இலங்கைக்கு எடுத்துக்கொள்ளல் பொறுத்தமானதென சிலர் இன்று பேசுகின்றனர். சமஷ்டி முறைமைக்கு எதிராக கருத்துத் தெரிவித்தவர்கள் கூட இன்று அதைப்பற்றிப் பேசுகி ன்றனர். இந்திய அதிகாரப் பரவலாக் கல் இலங்கைக்குப் பொருத்தமான தாக அமைவதற்கு தடையாக இருக் கும் அம்சங்கள் எவை என நீங்கள் கருதுகின்றீர்கள்?

**பதில்:-** இந்திய அதிகாரப் பரவலாக்கல் முறைமையை சமஷ்டி முறைமை எனக் கூற முடியும். அதில் இலங்கைக்கு பொருந்தும் வகையில் சில விசேட அம்சங்கள் உள்ளன.

இதில் முதலாவது அம்சம், இந்தியாவில் நிலவுவது சமஷ்டி முறைமையென்றாலும் அதன் மத்திய அரசாங்கத்திற்கு இருக்கும் அதிகளவிலான அதிகாரம். சுவிட்ஸர்லாந்து மற்றும் கனடா போன்ற நாடுகளின் மத்திய அரசாங்கத்தினை விட அதிகளவு அதிகாரம் இந்திய மத்திய அரசாங்கத்திற்கு அரசியல் யாப்பின் மூலம் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது அம்சம், பல்வகைத் தன்மையினைக் கொண்ட நாடான இந்தியா ஐக்கிய நாடாக 50 வருடங்களுக்கு அதிகமான காலம் சமஷ்டி முறைமைக்குள் நின்றுபிடிக்கின்றதென்பதனை நாம் ஏற்றுக்கொள்ளல் வேண்டும். சமஷ்டி முறையென்ற சுயாட்சி (Self Rule) மற்றும் அதிகாரப்பகிர்வு (Shared Rule) என்பது, குழு ஆட்சிகளுக்கிடையில் இணக்கப்பாட்டுடன் தயாரிக்கப் படும் ஆட்சி முறைமையாகும். இந்தியாவைப்போன்ற ஒரு நாட்டில் பல்வகைத்தன்மை இருப்பதற்கு அதன் சமஷ்டி முறைமை உதவி

எமது அரசியல் யதார்த்தத்தை, பொருளாதார யதார்த்தத்தை, யுத்த ரீதியான யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு, அவற்றின்மீது உரிய கவனம் செலுத்தும் அரசியல் யாப்பொன்றையே நாம் உருவாக்கவேண்டும்.



ரொஹான் எதிரிசிங்ஹவுடனான கலந்துரையாடல்

நேர்காணல்: ஜகத் லியனாராச்சி

தமிழில் நயனகணேசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்தது. உண்மையில் அது இலங்கைக்கு சிறந்த பாடமொன்று.

மூன்றாவது விடயம் எமது அரசியல் யாப்பில் இணைக்கப்பட்ட 13வது யாப்புச் சீர்திருத்தம் இந்திய அரசியல் யாப்பு சீர்திருத்தத்தின் கருத்துக்களைப் பெற்றுக்கொண்டு தயாரிக்கப்பட்ட ஒன்றாக இருக்கின் றமை. 1987ல் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனவிற்கு அதிகாரப பகிர்வை நடைமுறைப்படுத்துவதற்கு அழுத்தமொன்று இருந்த மையே, இந்த மாற்றம் நிகழ்ந்தமைக் குக் காரணமாகும். இந்திய முறைமையைப் பின்பற்றி அந்தச் சட்ட மூலம் தயாரிக்கப்பட்டது.

ஆனாலும், இந்திய முறையில் விசேட முக்கிய அம்சங்களை இங்கு காணக்கிடைப்பதில்லை. உதாரணமாக, இரு சபைகளினதும் (ராஜ சபை, லோக் சபை) அதிகாரங்களைக் கொண்ட சுயாதீன உயர்நீதி மன்ற பஞ்சாயத்ராஜ் போன்ற மூன்றாம் நிலை அதிகாரப்பகிர்வு முறைகள் 13வது அரசியல் யாப்புச் சீர்திருத்தத்தில் இடம்பெறவில்லை. இதனால், இந்திய மத்திய அரசாங்கத்தினை விட அதிகாரங்களைக் கொண்ட மத்திய அரசாங்கமொன்று இலங்கையில் உருவாகியுள்ளது.

**கேள்வி:-** இந்தியாவில் நிலவும் மூன்றாம் நிலை அதிகாரக் கட்டமைப்பான பஞ்சாயத்ராஜ் முறைமை இலங்கையின் பிரதேசசபை முறைக்கு சமமாகாதா?

**பதில்:-** இல்லை,

இலங்கையில் மாகாண ஆட்சி நிலையங்களின் வரலாறு 13வது சீர்திருத்தத்தின் பின்னான காலத்திலிருந்தே ஆரம்பிக்கிறது. கிராமிய சபைகள் போன்ற சக்திமிக்க மாகாண ஆட்சி சம்பிரதாயமொன்று இலங்கையில் நிலவியது. 13 வது அரசியல் யாப்பு சீர்திருத்தத்தின் பின்னர் புதிய சொற்களைப் பயன்படுத்தினாலும் கூட சக்திமிக்க மாகாண சபை ஆட்சி முறைமையொன்று அறிமுகப்படுத்தப்படவில்லை. அவற்றுக்குப் பெற்றுக் கொடுக்கப்பட் டுள்ள அதிகாரங்கள் மிகக்குறைவு.

**கேள்வி:-** இந்தியாவில் மாநிலங்களுக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்களை மத்திய அரசாங்கம் மீளவும் பெற்றுக் கொள்ளல் தொடர்பாக இந்திய அரசியல் யாப்பில் உள்ள அம்சங்கள் நடை முறையில் எவ்வாறு செயற்படுகிறது?

**பதில்:-** உண்மையில் இந்திய மத்திய அரசாங்கத்திற்கு அரசியல் யாப்பின் கீழ் பாரிய அதிகாரங்கள் உள்ளன. ஆனாலும், கடந்த இருபது வருட காலப்பகுதிக்குள் இந்திய அரசில் தேசியக் கட்சிகள் சீர்க் கெட்டு ஒவ்வொரு மாநிலக் கட்சிகளு டன் கூட்டிணைந்து அரசாங்கம் அமைத்ததன் காரணத்தினால், மாநிலத்தில் உள்ள சிறு கட்சிகளுக்கு மத்திய அரசாங்கத்தினுள் அதிகாரம் உள்ளது. தற்பொழுது ஆரம்பகாலத்தில் செய்தாற்போல் மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கத்திற்கு அதிகாரங்களைக் குறைக்க முடி யாது. உண்மையில் இது அரசியல் யாப்பின் இயல்பு காரணமாக அல்ல, கட்சி அரசியல் முறைமைகளினூ டாக ஏற்பட்ட ஒரு நிலைமையாகும். ஆனால், அரசியல் யாப்பில் ஜனாதிபதியின் சட்டதிட்டங்கள் (Presidential Rule) மத்திய அரசாங்கத்திற்கு வலுவூட்ட முடியுமென்ற உறுப்பு ஒன்றுள்ளது.

அதற்கேற்ப மாநில அரசாங்கத்திற்குள் பிரச்சனை இருக்குமாயின் நிருவாகங்கள் வீழ்ச்சியுறுமாயின், மத்திய அரசாங்கத்தின் மூலம் மாநிலத்தின் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளக்கூடிய தன்மை உள்ளது. இந்த நிலைமை இந்தியாவில் அரசியல் மயமாக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, மத்திய அரசின் அதிகாரம் காங்கிரஸ் கட்சியிடம் இருக்கும் பட்சத்தில், அவர்களுக்கு எதிரான அரசாங்கம் ஒன்று மாநிலத்தில் இருக்குமாயின், ஜனாதிபதியின் சட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, மாநிலத்தின் அதிகாரத்தைப் பறிக்கக் கூடிய வழிமுறையொன்று மத்திய அரசாங்கத்திற்கு உள்ளது. பா.ஜ.க. வும் அவ்வாறு செய்துள்ளது. உண்மையில் இது இந்திய அரசியல் யாப்பின் சீர்கேடான நிலைமையென கல்விமான்கள் எதுக்காட்டுகின்றனர்.

ஆனால், தற்பொழுது இந்திய உயர்நீதிமன்றம் இந்த நிலைமைக்கு வசதி வாய்ப்பாளராகியுள்ளது. இந்தியாவின் பொம்மே (Bomai) என்ற பிரசித்தி பெற்ற வழக்கு தீர்ப்பின் மூலம் உயர் நீதிமன்றம் ஜனாதிபதி சட்டதிட்டங்களை பயன்படுத்தக்கூடிய விதம் பற்றித் தெளிவாகத் தெரிவித்திருந்தது. அது அரசியல் காரணங்களுக்கானதாக இருந்தால், அதற்கு இடமளிப்ப தில்லை எனவும், அதற்கு நியாய மான காரணம் இருந்தால் மட்டுமே நீதிமன்றம் அதற்கு இடமளிக்கும் எனவும் அந்தத் தீர்ப்பில் தெரிவிக்கப் பட்டது.

இதற்கமைவாக உயர்நீதிமன்றத் தின் மூலம் மத்திய அரசின் அதிகா ரங்கள் நிர்வகிக்கப்பட்டுள்ளது. ஆனால், இலங்கையில் இவ்வாறு இடம்பெறுமா என்பது சந்தேகத்திற் குரியது. ஏனெனில், இலங்கையின் அரசியல் கட்சிகளின் நிலை இந்தி யாவை விட வித்தியாசமானது. இலங்கையில் பிராந்திய அரசியல் கட்சிகள் இல்லாவிடினும், இன்னும் தேசியக்கட்சிகள் வலுவாக உள்ளன. மறுபுறத்தில், இலங்கையின் நீதித் துறை சுதந்திரமாகவும், அதிகார வலுவுடையதாகவும் செயற்படுவதில்லை. அரசியல் யாப்பின் விதிமுறைகளுக்குப் புறம்பாக அரசாங்கம் செயற்படுமாயின் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் கலாசாரமொன்று இலங்கையில் காணப்படவில்லை.

இலங்கையின் நீதித்துறை, நிறைவேற்று அதிகாரம், மற்றும் அரசியல் யாப்புக்குச் சற்றுக் கீழேயே உள்ளது. ஆனால் இந்தியாவில் அவ்வா றில்லை. நிறைவேற்று அதிகாரம், அரசியலமைப்பு மற்றும் நீதித்துறை என்பன சமமான நிலைகளில் இருக்கின்றன. இலங்கையின் சமஷ்டி முறைமையொன்றை அறிமுகப் படுத்தப்படுவதாயின், இந்தியாவின் இவ்விசேட அம்சங்களை நாம் ஏற்றுக்கொள்ளல் வேண்டும். அதற்கேற்ப அரசியல் கலாசார மற்றும் நீதித்துறை கலாசாரத்தை விளங்கிக் கொண்டு இலங்கைக்கு பொருத்தமான வகையில் சமஷ்டி முறைமையொன்று உருவாக்கப்படுதல் வேண்டும்.

**கேள்வி:-** மாநிலங்களுக்குப் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்களை மத்திய அரசாங்கம் மீளப் பெற்றுக்கொள்வதற்கு இந்திய மத் திய அரசாங்கத்திற்குள்ள அதிகாரம் சிறந்ததொரு அம்சமா?

**பதில்:-**இந்திய மாநில அரசாங்கங்களின் அதிகாரங்களை மத்திய அரசு மீளப் பெற்றுக் கொள்ள இயலுமான தன்மை சிறந்ததொன்று என இலங்கையின் சில அரசியல்வாதிகள் கூறுகின்றனர். ஆனால், யாப்பு நிபுணர்கள் இந்த அதிகாரம் இந்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் யாப்பின் சீரற்ற ஒரு அம்ச மென்றே குறிப்பிடுகின்றனர். மாநில அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட அதி காரத்தை, மத்திய அரசாங்கம் ஒரு தலைப்பட்சமாகப் பெற்றுக் கொள் ளக்கூடியதாக இருப்பின், மாநில அரசாங்கத்தின் அதிகாரம் பாதுகாப் பற்ற, பொறுப்பற்ற ஒன்றாகிவிடும். ஒரு தலைப்பட்சமாக அதிகாரத்தை மீளப் பெற்றுக்கொள்ளல் சமஷ்டி நாடொன்றுக்கு பொறுத்தமான அம்சமல்ல.

இலங்கையில் இம்முறை பயன்ப டுத்தப்படுமாயின், தமிழ்க் கட்சிக ளுக்கே நாம் அதிகாரத்தை வழங்கு வோம். இந்த நிலையில், மத்திய அரசாங்கத்திற்கு தேவையான போது நாம் அதனை மீளப் பெற்றுக் கொள்வோம் என்று கூறுவதா? மத்திய அரசாங்கத்திற்கு இவ்வா றான அதிகாரமிருப்பதன் மூலம் அதி காரம் துஷ்பிரயோகத்திற்குட்பட லாம். இந்தியாவின் மத்திய அரசாங் கம் அவ்வதிகாரத்தினை துஷ்பிரயோ கத்திற்கு உட்படுத்தியதனாலேயே உயர் நீதிமன்றம் அதில் தலையிட் டுள்ளது.

அதனால், அதிகாரம் வரையறுக்கப் படும் முறையொன்று தேவைப்படு கிறது. மத்திய அரசாங்கம் முக்கிய மாக நாட்டின் ஐக்கியத் தன்மையை பாதுகாப்பதற்கு தேவையான அதிகா ரங்களை வைத்துக்கொள்ளல் வேண் டும். இலங்கைகக்கு அவ்வாறான முறையொன்றையே தயாரிக்க வேண்டும்.

**கேள்வி:-** இலங்கைக்கு அதிகாரப் பகிர்வு முறைமையுடைய அரசியல் யாப்பொன்று தயாரிக்கப்படுமாயின் மேற்குறிப்பிட்ட விடயங்களுக்கு மேலதிகமாக விசேடமாக உள்ள டக்கப்பட வேண்டிய விடயங்கள் யாவை?

**பதில்:-** 1972 மற்றும் 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பைப் பார்க் கும் பொழுது அதிகாரத்தை வரைய றைக்கு உட்படுத்தும் Check and Balance முறையொன்றைக் காணக் கூடியதாக இல்லை. 1972ஆம் ஆண்டு யாப்பின் கீழ் தேசிய அரசசபைக்கு அதிகளவு அதிகாரங் கள் கிடைத்தன. 1978 ஆண்டு யாப்பின் கீழ் ஜனாதிபதிக்கு அதிகளவு அதிகாரங்கள் கிடைத்தது. நாம் புதிய அரசியல் யாப்பொன்றை தயாரிக்கும் பொழுது, அவ்வாறு எந்தவொரு பதவிக்கோ அல்லது நபருக்கோ வரையறையற்ற அதிகா ரம் கிடைக்கும் முறைமையொன்று உருவாக்கப்படாதிருப்பதில் அவதா னமாய் இருக்கவேண்டும்.

மறுபுறத்தில், எமது தேசியப் பிரச்சினையினைத் தீர்க்கக் கூடிய அரசியல் யாப்பொன்றையே நாம் தயாரித்தல் வேண்டும். அது எமது நாட்டின் ஐக்கியத் தன்மையினை பாதுகாப்பதாக அமைதல் வேண்டும்.

**"ஒற்றை" என்ற சொற்பதமே தமிழ்த் தலைவர்களுக்கு பாரிய பிரச்சனையாகியுள்ளது. அதன்மூலம் 1972ஆம் ஆண்டு அவர்களுக்கு ஞாபகப்படுத்தப்படுகிறது. அது சிங்கள பெரும்பான்மையின் ஏகாதிபத்தியத்தினை நினைவூட்டுகிறது.**

அடுத்து, எமது அரசியல் யதார்த் தத்தை, பொருளாதார யதார்த் தத்தை மற்றும் எமது யுத்த ரீதியான யதார்த்தத்தை புரிந்துகொண்டு, அவற்றின்மீது உரிய கவனம் செலுத் தும் அரசியல் யாப்பாக அது இருத்தல் வேண்டும். நாம் விரும்பி னாலும் விரும்பாவிட்டாலும் வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் அதிகளவி லான பிரதேசத்தினை விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். தமக்கு அதிகாரமொன்று உள்ளதாகவும், பாரிய தியாகத்தைச் செய்த இராணுவமொன்று இருப்பதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

வரலாற்றில் ஜனநாயக ரீதியில் செயற்பட்ட செல்வநாயகம், அமிர்த லிங்கம் போன்றவர்கள் 1950 களில் ஜனநாயக ரீதியில் சமஷ்டி முறை மையொன்றினைக் கோரினர். ஆனா லும் அவ்வாறான முறைமையொன்று பெற்றுக்கொடுக்கப்படவில்லை. இறுதியில், 1972ல் ஒற்றையாட்சி யென்று கூறி முத்திரையொன்றை அரசியல் யாப்பிற்குள் குத்திவிட்ட னர். அதற்குப் பின்னரே, ஜனநாயக ரீதியில் தமது கோரிக்கைகளைப் பெற்றுக்கொள்ள முடியாமையினால் யுத்தத்திற்குச் செல்ல வேண்டிய நிலைக்குத் தாம் தள்ளப்பட்டதாக அவர்கள் கூறுகின்றனர்.

நாம் இந்த யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளல் வேண்டும். அவ் உள்ள டக்கத்தினை ஏற்றுக்கொண்டு, இப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு உதவும் வகையில் அரசியல் யாப்பொன்றை நிர்மாணித்தல் வேண்டும். நாம் வெற் றுத்தாளொன்றைக் கொண்டு அரசி யல் யாப்பொன்றை தயாரிக்க இய லாது. "ஒற்றை" என்ற சொற்பதமே தமிழ்த் தலைவர்களுக்கு பாரிய பிரச்சனையொன்றாகியுள்ளது. அதன் மூலம் 1972ஆம் ஆண்டு அவர்க ளுக்கு ஞாபகப்படுத்தப்படுகிறது. அது சிங்கள பெரும்பான்மையின் ஏகாதிபத்தியத்தினை நினைவூட்டு கிறது. நாம் இந்நிலைமையினை ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

ஆனாலும், சில வேளைகளில் விடு தலைப் புலிகள், மற்றும் தமிழ்க் கட்சிகள் திம்புக் கொள்கையினை ஏற்றுக்கொள்ளும் அரசியல் யாப் பொன்று தமக்குத் தேவையென கூற லாம். நாம் திம்புக் கொள்கையினை ஏற்றுக் கொள்வதற்கு தயாரெனின் சமஷ்டி முறையொன்று அவசியம். நாம் நினைக்கும் விதத்தில், ஏற்றுக் கொள்ளப்படும் அதிகாரப்பகிர்வு முறையொன்றாக (Asymmetry) அது அமைதல் வேண்டும்.

இங்கே எனக்குச் சந்தேகமொன் றுள்ளது. இதற்கு இந்திய முறைமை போதுமானதாகுமா என்று கேள்வி எனக்கு எழுகிறது. கனடாவில் உள்ள (கியூபேக் மாநில) அதிகாரப் பகிர்வு முறை ஸ்பான்யாவில், பெல் ஜியத்தில் உள்ள சமமான அதிகாரப் பகிர்வு முறை ஆகிவற்றை நாம் எமது தேவைக்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று நான் கருதுகிறேன்.

ஆனால், சில ஜே.வி.பி மந்திரிகள் இந்திய முறைமையினைக் கொண்ட அரசியல் யாப்பொன்று இலங் கைக்கு பொருத்தமானதா என்பதை பற்றி கவனத்தில் கொள்ள முடியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று தெரிவித்துள்ளனர். நான் நினைக்கின்றேன் இந்திய முறைமை போதுமானதல்ல. ஆனால், அவர்களுடைய கருத்துக்கள் சிறந்தது என்றே நான் நினைக்கிறேன். அவர்கள் இந்திய முறையைப்பற்றி கலந்துரையாட முன் வந்தமையே இங்கு ஒரு வளர்ச்சி ஏற்பட்டிருக்கின்றது என்பதைக் காட்டுகிறது.

**கேள்வி:-** சமஷ்டி ஆட்சிமுறை வரும் வேளை இனப்பிரச்சனைக்கு முழுத்தீர்வு கிடைக்குமா? அல்லது, அது மேலும் பிரிவினைவாதத்திற்கு வழிகோலுமா?

**பதில்:-** நான் 26 வருட காலமாக சமஷ்டி முறைமைக்கு ஆதரவாகப் பேசுகின்றேன். ஆனாலும், சமஷ்டி முறைமையொன்று வந்தவுடனே பிரச்சனையைத் தீர்க்க முடியுமென்று நான் நினைக்கவில்லை. நாம் இனப்பிரச்சனையை ஒற்றையாட்சி முறைமையின் கீழ் தீர்ப்பதற்கு முயற்சி செய்தோம். ஒற்றையாட்சி என்ற முத்திரையைப் போட்டதன் பின்னே இனப்பிரச்சனை உக்கிரம டைந்தது. அதன் பின்னர் தான் 1974ல் தனி இராச்சியத்திற்கான இயக்கமொன்று ஆரம்பிக்கப்பட்டது.

ஒற்றையாட்சியென்ற முத்திரை காரணமாகவே அவர்கள் தனி இராச்சியத்திற்கான இயக்கமொன்றை ஆரம்பித்தனர். தற்பொழுது இந்த ஒற்றையாட்சியின் கீழ் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசம் ஒன்று உள்ளது. இதனால், நாட்டின் ஐக்கியத் தன்மையைப் பாதுகாப்பதற்குப் பொருந்தும், சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சமஷ்டி முறைமையை இலங்கைக்குப் பிரயோகித்துப் பார்ப்போம் என நான் தெரிவிக்கின்றேன்.

இங்கு சில வேளைகளில் சந்தேகங்கள் எழக்கூடும். ஆனாலும், இயன்றளவு தூரம் நாட்டின் ஐக்கியத் தன்மையைப் பாதுகாக்கும் வகை யில் அரசியல் யாப்பொன்றைத் தயா ரித்து, சிறுபான்மையினரின் அபிப் பிராயங்கள் மற்றும் துக்கங்களையும் செவிமடுத்து, திம்பு கொள்கை அடிப் படையில் சமஷ்டி ஆட்சி முறைமை யொன்றைத் தயாரிக்க வேண்டு மென்று நான் தெரிவிக்கின்றேன்.

**கேள்வி:-** பல்வகைத் தன்மைக்கு மதிப்பளிக்க வேண்டியதற்காகவா சமஷ்டி அரசுகள் கட்டியெழுப்பப்பட் டுள்ளன?

**பதில்:-** இல்லை. அவுஸ்ரேலியா, ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளில் சமஷ்டி முறைமையொன்று உருவாகுவதற்கு அடிப்படைத் தூண்டுதலாக பன்மைத்துவம் அமையவில்லை என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால், தென்னாபிரிக்கா, இந்தியா, பெல்ஜியம், ஸ்பானியா போன்ற நாடுகளில் பல்வகைத்தன்மைக்கு ஆதரவாக சமஷ்டிக் கோட்பாடு முன்வைக்கப் பட்டது.

வரலாற்றில் அதிகளவு சமஷ்டி முறைமைகளைக் கொண்ட சுயாதீன அரசுகள் சில ஒன்றிணைந்து சமஷ்டி அரசொன்றை உருவாக்கியமைக்கான சான்றுகள் உள்ளன. அது ஒன்றிணைக்கப்பட்ட சமஷ்டி வாதம் (Integrative Federalism) என அறிமுகப்படுத்தப்பட்டது. இதற்கு சிறந்த உதாரணம் சுவிட்ஸர்லாந்தாகும். ஆனால் ஆரம்பத்தில் ஒற்றை என நடைமுறைப்படுத்தப்பட்ட சில நாடுகள் பல்வகைமையை ஏற்படுத்திக் கொள்வதற்காக சமஷ்டி நாடுகளாக உருமாறி இருக்கின்றன. இவற்றிற்கு பெல்ஜியம், தென்னாபிரிக்கா, ஸ்பானியா போன்ற நாடுகள் உதாரணங்களாகும்.

**ஒற்றையாட்சி என்று குறிப்பிடப்படுகின்ற நமது ஆட்சியின் கீழ் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் என ஒன்று உள்ளது. இந்த யதார்த்தத்தை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும்.**

**கேள்வி:-** ஒற்றையாட்சிக்குள் அதிகாரப்பகிர்வை மேற்கொள்ள முடியாதா?

**பதில்:-** நான் மேலே குறிப்பிட்டது போல் எமது நாட்டின் தமிழ்த் தலைவர்களுக்கு ஒற்றை என்ற சொற்பதத்தில் பிரச்சினையுள்ளது. ஆனாலும், ஒற்றையரசின் அம்சங்களைப் பார்க்கும்போது, பிரதேச அரசாங்கங்களின் அதிகாரத்தை மத்திய அரசாங்கம் ஒரு தலைப்பட்சமாக எவ்வேளையிலும் ஏகமனதாக மீளப் பெற்றுக்கொள்ள முடியும். மாநிலங்களுக்கு அறிவித்தோ அல்லது அவர்களுடைய அனுமதியின்றியோ மீண்டும் மத்திய அரசாங்கத்தினால் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதினால், அம்மாநிலங்கள் குரல் இல்லாத நிலைக்குத் தள்ளப் படும்.

சமஷ்டி முறைகைக்குள்ளும் மாநிலங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை மீண்டும் மத்திய அரசாங்கத்திற்கு பெற்றுக் கொள்ள முடியும். அதற்காக, மாநிலங்களின் விசாரணை மற்றும் அவர்களுடைய பங்கு பற்றலுடனான அரசியல் யாப்பு சீர்திருத்தமொன்றை ஏற்படுத்த வேண்டும். இதனால் சமஷ்டி முறைமைக்குள் அதிகாரத்தை பகிர்தல் மிகவும் பாதுகாப்பானதாகும்.

13வது சீர்திருத்தத்தின் கீழ் கல்வி, சுகாதாரம், போக்குவரத்தின் கீழ் மாகாணங்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டாலும் அவற்றை நடைமுறைப்படுத்துகையில் அவை தொடர்பாக பாரிய அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்திடம் உள்ளது. அவற்றை வரையறுக்க வேண்டுமாயின் சமஷ்டி முறைமையொன்று அவசியம்.

நாட்டின் ஐக்கியத்தன்மையை விரும்புபவர்களே கனடாவில் சமஷ்டி வாதிகள் (Federalist) எனக் கூறப் படுகின்றனர். இலங்கையில் சமஷ்டி வாதிகள் நாட்டைப் பிரிப்பவர்கள் என்றே குறிப்பிடப்படுகின்றனர். தனி இராச்சியத்தினை விரும்புபவர்களும் சமஷ்டி முறைமைக்கு எதிராகவே உள்ளனர். சமஷ்டி என்ற கருத்தில் அதிகாரப்பகிர்வு முறை மற்றும் சுயாட்சி என்று இரண்டும் ஒன்றாக இருப்பதினால், விடுதலைப் புலிகள் சுயாட்சி பற்றி மட்டுமே கதைக்கின்றனர். அதனால் தான் நான் இடைக்கால யோசனையின் (ISGA) தற்போதைய தோற்றப்பாட்டினை ஏற்றுக் கொள்வதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாகலாந்து: இந்திய சமஷ்டிக்கு மற்றுமொரு சோதனைக்களம்

இந்திய அரசாங்கமும் ஆயுதம் தரித்த பிரிவினைவாதிகளும் பேச்சு வார்த்தை நடத்தியது மட்டுமல்ல, சில விடயங்களில் ஒரு இணக்கப் பாட்டுக்கு வந்த சந்தர்ப்பங்களும் உண்டு. அப்படியான ஒரு சந்தர்ப்பம் தான் கடந்த ஜனவரி 31ல் நாகா லாந்து தேசிய சோஷலிசக் கூட்டணி (ஐசாக் முய்வா பிரிவு) க்கும் இந்திய அரசுக்கும் இடையில் ஏற்பட்டிருந் தது. நாகலாந்து தேசிய சோஷலிசக் கூட்டணி (ஐசாக் முய்வா பிரிவு) (National Socialist Council of Nagaland- Isaac Muviah faction- NSCN-IM), கடந்த எட்டு வருடங்க ளாக நடைமுறையிலிருந்த யுத்த நிறுத்தத்தை இன்னும் ஆறு மாதங்க ளுக்கு நீடித்து, நீண்ட காலமாக நடக்கும் இந்த ஆயுத எழுச்சிக ளுக்கு இந்திய அரசுடன் ஒத்து ழைத்து ஒரு முடிவு காண விழைந் துள்ளது.

வட கிழக்கு இந்தியாவின் ஏழு மாநிலங்களான நாகாலாந்து, அஸ் ஸாம், திரிபுரா, மீசோராம், அருணாச் சலப் பிரதேசம், மணிப்பூர் மற்றும் மேகாலயா என்பன இந்தியாவின் மிகவும் பின்தங்கிய மாநிலங்களா கும். "ஏழு சகோதரிகள்" என அழைக்கப்படும் இவற்றில் நாகாலந் தின் மத்திய பகுதியில் இருப்பது தான் பிரிவினைவாதிகளின் பகுதி. இந்த ஏழு மாநிலங்களையும் இந்தி யாவுடன் இணைப்பது, நேபாளம், பங்களாதேஷ், சீனா, பூட்டான் போன்ற நாடுகளுக்கண்மையிலுள்ள ஒரு ஒடுக்கமான நிலப்பாதைதான். நாகாலாந்தின் கிழக்கு எல்லையில் (பர்மா) மியன்மார் உள்ளது. நாக லாந்திலுள்ள மக்களில் வெகு சிலரே ஹந்தி மொழியைப் பேசுகின்றனர். பெரும்பான்மையானோர் தீபெத் மற்றும் பர்மா நாட்டினரின் இனக் குழுவுக்குச் சொந்தக்காரர்கள்.

தற்போதைய பிரிவினைவாதம் 1947 இலேயே ஆரம்பமாகிவிட்டது.

நான்கு நாட்கள் இந்திய அரசுக்கும் நாகலாந்து தேசிய சோஷலிசக் கூட் டணி (ஐசாக் முய்வா பிரிவு) க்கும் இடையே பாங்கொக்கில் நடந்த பேச்சுக்களையடுத்து யுத்த நிறுத்தம் அறிவிக்கப்பட்டது. கட்டுப்பாடான சமஷ்டிக் கொள்கை காரணமாக, சுதந்திர காலத்திலிருந்தே தொடர்ந் துவரும் இந்த ஆயுதப்போரை இந் திய அரசால் ஒரு முடிவுக்குக் கொண்டுவர முடியவில்லை. இந்தி யாவில் ஒவ்வொரு புரட்சி இயக்க மும் வளரும்போதும், அது சமஷ்டிக் கான இன்னொரு படியை அமைத்து விடுகிறது. ஐம்பதுகளில் தொடங்கிய திராவிடர் புரட்சியும், எண்பதுகளில் ஆரம்பத்தில் இடம்பெற்ற சீக்கியர் போராட்டமும் இவ்வாறானதே. உதா ரணமாக் அரசமொழிக்கொள்கை (ஹிந்தி எதிர்ப்பு)ப் போராட்டம்.

நாகலாந்தில் எட்டு வருடங்களாகத் தொடர்ந்த யுத்த நிறுத்தம், பிரச்ச னையை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதில் இரு தரப்பினருக்குமுள்ள

டீபக் சத்தோபாட்யாய்
ஃபொரேஷன்ஸ் சஞ்சிகையின் தெற்காசிய, பசுபிக் பிராந்திய திட்ட அலுவலர்

தமிழில் : வ. விஸ்வலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கறையைக் காட்டுகிறது. முக்கியமாக மாணவ அமைப்புகள், கிறிஸ்தவ தேவாலயத்தினர் என்ற பலர் இந்தச் சமாதான முயற்சியில் ஈடுபட்டமை, அமைதி ஏற்படுவதற்குரிய ஓர் குறியீடாகக் காணப்படுகிறது. இந்தியாவிலே மிக நீண்ட காலமாக நடந்துவரும் ஒரு ஆயுதப் போராட்டமான நாகாலாந்துப் போராட்டம் பெரும் சிக்கல்களைக் கொண்டது.

### 1975க்கு முன்னர் நாகலாந்து

நாகலாந்தில் 17க்குமேற்பட்ட பிரதான இனக்குழுக்களும், அதே எண்ணிக்கையிலுள்ள சிறுபான்மையினக் குழுக்களும் உள்ளன. ஒவ்வொரு குழுவிற்கும் தனிப்பாஷை, கலாசாரம் போன்றவையிருந்தும், அவை யாவும் வாழ்க்கைமுறை, சமய வழிபாடு முதலியவற்றால் பின்னப்பட்டுள்ளன. நாகர் பிரிவினர் நாகலந்தில் மட்டுமல்லாமல் அஸ்ஸாம், மணிப்பூர், அருணாச்சலப் பிரதேசம் போன்ற மாநிலங்களிலும் செறிந்து வாழ்வதால் இப்பிரச்சினை மேலும் சிக்கலாகிறது.

1947ல், Phizo's Naga National Council நாகலாந்திலுள்ள அரைமில்லியன் நாகர்களுக்காகச் சுதந்திரம் கேட்டது. இது படிப்படியாக நாகலாந்து ஒரு தனி மாநிலமாக 1963ல் உருவாக வழிசெய்தது. நாகலாந்தை உருவாக்கியதன் மூலமாக இந்தியா தனது வழமையான முறையான, மொழியடிப்படையில் மாநில உருவாக்கம் (1956ன் மாநில மீள் கட்டமைப்புச் சட்டம்) என்ற முறையை மாற்றி, இன அடிப்படை யில் ஒரு மாநிலத்தை உருவாக்கி யது. மொழியடிப்படையிலான மாநிலங்களுக்கான உதாரணங்க ளாக மீசோராம், மேகாலயா போன்ற மாநிலங்கள் அமைந்துள்ளன.

நாகலாந்தின் உருவாக்கமானது ஏனைய ஆயுதக் குழுக்களுக்கும் அரசியல் நீரோட்டத்தில் இணைய வேண்டும் என்ற ஆர்வத்தைத் தோற்றுவித்தது. Phizo's Naga National Council இந்திய அரசுடன் ஒரு ஒப்பந்தத்தை 1964ல் செய்தபோதும், உட்கட்சிப் பூசல்களால் Council of Naga People, Naga National Council இலிருந்து பிரிந்தது. பங்களாதேஷ் ஒரு தனி நாடாக உரு வான அக்காலத்தில், இவ்வளவு காலமாக கிழக்கு வங்காளத்தில் அடைக்கலம் தேடிவந்த Naga National Council பலவீனமடைந்தது. அதே நேரத்தில் Council of Naga People ம் அதன் கூட்டணிக் கட்சிகளும் இந்திய அரசுடன் சேர்ந்து, 'Shillong Accord' என்ற சமாதான உடன்படிக்கையை 1975ல் செய்தது.

### 1975: தேசிய சோஷலிசக் கூட்டணிப் புரட்சி

'Shillong Accord' என்ற சமாதான உடன்படிக்கையினாலோ, தனி மாநிலத்தாலோ பிரிவினைவாதிகள் ஆறுதல் பெறவில்லை. பல நாகலாந்தினர் இந்த உடன்படிக்கை மூலம் நாகலாந்து தேசிய சோஷலிசக் கூட்டணி தம்மை இந்திய அரசிடம் விலைபேசி விட்டதாகக் கருதினர். 'Shillong Accord' என்ற சமாதான உடன்படிக்கையில், இந்திய அரசியலில் நாகாலாந்தின் பங்குபற்றிய இறுதி முடிவு கூறப்படவில்லை. இந்த நோக்கங்களைக் கொண்டு 1980ல் இளம் புரட்சிக்காரர்களால் National Socialist Council of Nagaland உருவாக்கப்பட்டது. இது வும் 1988ல் பிரிவுபட்டு NSCN-K உருவானது.

1997ல் NSCM-IM இந்திய அரசுடன் ஒரு சமாதான உடன்படிக்கையைச் செய்தது. அதைத் தொடர்ந்து 2000ல் NSCN-K வும் இந்திய அரசுடன் ஒரு ஒப்பந்தம் செய்தது.

யுத்தநிறுத்தத்தின் அவசியத்தை எல்லாக் கட்சியினருமே உணர்ந்ததற்குக் காரணம், பொது மக்கள் பிரதிநிதிகளிடமிருந்து சமாதான முயற்சி எடுக்குமாறு அழுத்தங்கள் வந்ததுதான். அத்துடன் ஆண்டுக்கணக்காக நடந்த உள்நாட்டுப் போரால் நாகாலாந்தின் பொருளாதாரம் கீழ்நோக்கிச் சென்றதோடு, இந்திய இராணுவத்தினதும், மியன்மார் பாதுகாப்புப் படையினதும் கரங்களில் பிரிவினைவாதிகள் அழிந்து கொண்டிருந்தனர். NSCM-IM ஏனைய சிறு ஆயுதக்குழுக்களுக்கு முன்மாதிரியாக இருப்பதால், இதன் ஆதரவு இன்றி அவை காணாமல் போய்விடக்கூடிய சந்தர்ப்பமிருந்தது.

இவையெல்லாம் சேர்ந்த ஒரு பாரிய முடிச்சை அவிழ்ப்பது இந்திய அரசாங்கத்தின் கைகளில் இருந்தது.

### எதிர்நோக்கும் பிரச்சினை

இறுதித் தீர்வு முழுமையாக இல்லாதபோதும் அதைச் சரிப்படுத்துவதற்கான முயற்சிகள் நடைபெறுகின்றன. ஆரம்ப கட்டங்களிலிருந்து பேச்சுவார்த்தைகள் நீண்ட தூரம் முன்னேறியுள்ளபோதும், NSCM-IM தமது பொறுமையை இழந்து வருகின்றனர். அதன் தலைமை 2006 ஆரம்பத்தில் பாங்கொக்கில் பேசும் போது, "நாம் தனிநாடு என்ற எமது கோரிக்கையிலிருந்து கீழிறங்கி சமஷ்டி முறையிலான அமைப்புக்கு இந்திய அரசுடன் இணங்கியி ருக்கிறோம். ஆனால் நாகர்களின் பிர தேசத்தை வடகிழக்கு இந்தியாவில் ஒன்றாக்குவதற்கான எதையும் அவர்கள் ஒழுங்காகச் செய்வதாகத் தெரியவில்லை" என்று கூறியிருக்கிறார்.

NSCM-IM, பரந்துள்ள நாகர்களை ஒன்று சேர்த்து ஒரு தனியான நாகாலாந்து உருவாக்கவேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி வருகிறது. அந்தப் புதிய உருவாக்கத்திற்கு, பிற மாநிலங்களான அஸ்ஸாம், மணிப்பூர், அருணாச்சலப் பிரதேசம் போன்றவை பிரிக்கப்படவேண்டும். அப்படிப் பிரிப்பதில் நிர்வாக ரீதியாக உள்ள சிக்கல்களை இந்திய அரசு சந்திக்கிறது. இன்னொரு பிரச்சனையான, 'சமஷ்டி முறையிலான ஒருமைப்பாடு" பற்றிப் பிரச்சனைக்குரிய இரு தரப்பினரான NSCM-IM வினரும் Naga National Council இனரும் ஏகமனதாயிருப்பதால் எந்தவிதமான தடையும் தற்சமயம் இல்லை. இந்தச் சமஷ்டி ஒருமைப்பாடு எந்த ஒரு காரணத்

**"நாம் தனிநாடு என்ற எமது கோரிக்கையிலிருந்து கீழிறங்கி சமஷ்டி முறையிலான அமைப்புக்கு இந்திய அரசுடன் இணங்கியிருக்கிறோம். ஆனால் நாகர்களின் பிரதேசத்தை வடகிழக்கு இந்தியாவில் ஒன்றாக்குவதற்கான எதையும் அவர்கள் ஒழுங்காகச் செய்வதாகத் தெரியவில்லை"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸைதக் கொண்டும் எந்த ஒரு தரப்பி னராலும் எதிர்காலத்தில் மாற்றப்பட லாகாது என்பதையும் இந்த இரு கட்சியினரும் உணர்ந்து, அந்த வித மான சமஷ்டியை முன்னெடுக்கத் தயாராயுள்ளனர். அத்துடன் NSCM-IM வினர், மத்திய அரசுக்கும் நாகா மக்களுக்கும் பயனளிக்கும் வேறுபல முயற்சிகளையும் அரசாங்கத்தோடு ஆராயத் தாயாராயிருந்தனர். மத்திய மந்திரி ஒஸ்கார் பெர்னாண்டோ மற் றும் உள்நாட்டு அமைச்சர் பத்ம நாபையா போன்றோர் இந்தப் பிரச்ச னைகளில் முழுமுச்சோடு பங்கெ டுத்தது, காங்கிரஸ் ஆட்சிக்கு இந்த சமாதானப் பேச்சுவார்த்தை எவ்வளவு முக்கியம் என்பதைக் காட்டுகிறது.

நாகாலாந்தின் அமைதிப் பேச்சுக ளில் உள்ள மிகவும் பெரிய தடை என்னவெனில், அங்கிருக்கும் எண் ணிக்கையற்ற இனக்குழுக்கள் தாம்(Tribes). பல இனக்குழுவினரு டைய கருத்துக்கள் முன்னிலைப்ப டுத்தப்படவில்லை, அல்லது பிரதி நிதித்துவப்படுத்தப்படவில்லை. உதாரணமாக அங்காமிஸ், ஆஓஸ் போன்றவற்றைக் குறிப்பிடலாம். NSCM-IM வினர், இதற்குக் கார ணம் கிறிஸ்தவ தேவாலயத்தினரும், அரச சார்பற்ற நிறுவனங்களும் (non governmental organisations-NGO'S) தான் என்கின்றனர். இந்த NSCM-IM வினர் ஒரேயொரு இனக் குழுவையே (சேமா இனக்குழு- sema tribe) பிரதிநிதித்துவப்படுத்து கின்றனர். அதுபோல NSCM-K வினர் கொன்யாக் இனக்குழுவைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர்.

1990 களிலிருந்து காஷ்மீர் பிரச் சனை சமஷ்டிக்கான இன்னொரு பரிசோதனையாகியது. அதனால் இந் தியாவின் வடகிழக்கு ( நாகாலாந்து போன்ற) மாநிலப் பிரச்சனைகள் பின் தள்ளப்பட்டன. ஆனாலும், அங்கு நடந்த சம்பவங்கள் இந்திய சமஷ்டி முறை மேலும் வலுவடைய ஒரு காரணமாகப் பிற்காலத்தில் இருக்கும். இந்தியாவுக்கு ஏற்ற சமஷ்டி யாப்பு முறையைக் கண்டு கொண்டு கையாள உதவும். மீசோ ரம் தேசிய இராணுவம் அழிக்கப்பட் டமை, 'டார்ஜீலிங் மலையகக் கூட்டணி" மற்றும் "போடோ எல்லைக் கூட்டணி" முதலியவற்றின் உருவாக்கம், எப்படி பல்லினக்குழுக்களை ஒரு சமஷ்டி அமைப்புக்குள் கொண் டுவரலாம் என்பதற்குரிய படிப்பினை களாகும்.

# இந்தோனேசியாவுடன் கூட்டாட்சியற்ற ஆசே மாநிலம்- ஒரு ஆய்வு



28 வருடங்களாக நடந்த இந்தோனேசிய உள் நாட்டுப்போர், 15/8/2005 அன்று ஹெல்சிங்கியில் நடத்தப்பட்ட சமாதான உடன்படிக்கையுடன் நிறுத்தப்பட்டது. இதைக் கைச்சாத்திட்டோர் இந்தோனேசிய அரசாங்கமும், 'ஆசே விடுதலை முன்னணி' (Free Ache Movement or Gerakan Aceh Merdika- GAM) யுமாகும். இந்த உடன்படிக்கையில், 'கூட்டாட்சி' (federalism) 'தன்னாட்சி' (autonomy) போன்ற சொற்கள் மிகவும் சாமர்த்தியமாகத் தவிர்க்கப்பட்டிருக்கின்றன. 'தன்னாட்சி' (autonomy) என்ற சொல் GAM இனால் ஏற்றுக்கொள்ள முடியாதது, ஏனெனில், 'தன்னாட்சி' (autonomy) என்பது பேரளவிலேயே இருக்கும் அதேநேரத்தில், 'கூட்டாட்சி' (federalism) ஆசேக்கு ஒரு சவாலாக இருக்கும்.

இந்தோனேசிய வரலாற்றைப் பார்க்கும்போது, சில தருணங்களில் நிஜத்தைவிட வெளித்தோற்றத்தில் காணப்படும் அரசியல் முக்கியமாகக் கருதப்படும்.

அதாவது, என்ன சொல்லப்படுகி றதோ அது நிச்சயமாக நடக்கிற தென்று சொல்லமுடியாது. இதன் படியே, ஆசே சமாதான உடன் படிக்கை, 'கூட்டாட்சி' (federalism) 'தன்னாட்சி' (autonomy) போன்ற வற்றை விபரித்தாலும் கூட,

பேராசிரியர் டேமியன் கிங்க்ஸ்பறி
'டீகின்' பல்கலைக்கழகம்–அவுஸ்ரேலியா
தமிழில்: வ. விசுவலிங்கம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப் பதங்களைப் பாவிப்பதை மறுக்கிறது.

இந்தோனேசிய உள்நாட்டுப் போர் 1976ல் தொடங்கியது. அப்போது தான் 'ஆசே விடுதலை முன்னணி' வளர்ச்சிபெற்று ஆசேயின் தனித்து வத்தை உணர்ந்து சுதந்திரத்தை நாடியது. அது தனது இராணுவ நடவடிக்கைகளை ஆரம்பிக்க, இந்தோனேசிய அரசும் அதற்கு பதிலளிக்கத் தொடங்க, அதனால் ஏறக்குறைய 15,000 மக்கள் இறந்தும் ஆயிரக்கணக்கான வீடுகள் நாசமாகவும் செய்தன. 4 மில்லியன் மக்கள் அச்சத்துடன் வாழத் தொடங்கினர்.

'சிறப்புத் தன்னாட்சி' 2002 இல், ஜனாதிபதி சுகார்ட்டோவின் 32 வருட கால ஆட்சியைத் தொடர்ந்து, ஆசேக்கும் பப்புவா நியூகினிக்கும் தன்னாட்சி பார்த்துக்கொள்ளப்படும்.

ஒரு சிறப்புத் தன்னாட்சி வழங்கியதில் ஆசேயும், பப்புவா நியூ கினியும் மாறுபடுகின்றன. ஆசேயில் மாவட்டங்களைவிட, மாகாணங்கள் அதிக அதிகாரம் கொண்டுள்ளன. இது, பிரிவினைவாதிகளைத் திருப்திப்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டது. ஆனாலும், அதிக மூலவளம் கொண்ட ஆசேக்கு, அவைகளினால் வரும் வருமானங்கள் மிகச்சிறிய அளவிலேயே கிடைக்கின்றது. மத்திய அரசின் கட்டுப்படுத்தப்பட்ட அதீத அதிகாரம் அங்கு இருப்பதால் அதிக இராணுவமும் அங்குள்ளது.

இதனாலே, ஆசே விடுதலை முன்னணி இந்தச் 'சிறப்புத் தன்னாட்சி' என்ற பெயர்ப்பதத்தை ஏற்றுக்கொள்ள மறுத்து, 'அது ஒரு போலி' என்றது. இதனால் ஹெல்சிங்கியில் ஏற்பட்ட சமாதான எல்லாப் பாகங்களிலும் வியாபிக்கப்பட்ட அரசியல் நடவடிக்கைகள் இருப்பின், அங்கு கூட்டாட்சிமுறை பொருத்தமாகவிருக்கும். அதே நேரத்தில் பரந்த அரசியல் தன்னிறைவும் காணப்படும்.

இந்தோனேசியா, 13,000 தீவுக் கூட்டங்களையும் 12 பிரதான மொழிகளையும், 350 சிறுபான்மை மொழிகளையும் கொண்ட நாடு. காலனித்துவ ஆட்சிதான் அதனை ஒன்றாக இணைத்தது. நெதர்லாந்து காலனித்துவம் இந்தோனேசியாவை 1700 இலிருந்து 1949 வரை ஆண்டது. இந்தக் காலனித்துவ ஆட்சி, 1946 இலிருந்து 1949 வரை கூட்டாட்சி அரசுகளை இந்தோனேசியாவில் ஏற்படுத்தியது. ஓகஸ்ட் 1949ல், இரண்டாம் உலக யுத்தம் முடிவடைந்ததும், சுகார்னோவும் மொ'மெட் 'ட்டாவும் 'சுதந்திர இந்தோனேசியா' வை வெளிப்படையாக அறிவித்தனர்.

**விமர்சகர்கள், இக்கூட்டாட்சி முறை நடைமுறைக்குதவாது என்றும், ஒல்லாந்தரின் காலனித்துவ ஆட்சிக் காலத்துக்குப் பொருத்தமானதை இன்னும் தொடரவே இக்கூட்டாட்சி வழிவகுக்கிறது என்றும் சொல்கிறார்கள்.**

அதிகாரம் கிடைத்தது. இப்போது சுதந்திரமடைந்துள்ள பப்புவா நியூ கினி, அரசியல் மாற்றம் காரணமாகத் தனது சரித்திர நிலைப்பாட்டினை உணர்ந்து கொண்டுள்ளது.

இந்தோனேசியாவின் இதர பாகங்களிலும் இந்த மாநில சுயாட்சி முறை கொண்டுவரப்பட்டு அரசியல் பொருளாதார அதிகாரத்தையளிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த முறை மத்தியதரப்படுத்தலினைச் சுலபமாக்குவதோடு, தன்னாட்சி மாவட்டங்கள் சுதந்திரமாக இயங்காத வகையில் சிறியவையாக இருக்குமாறும் உடன்படிக்கையில் இந்தத் தன்னாட்சி என்ற பெயர் ஏற்கப்படவில்லை.

இந்தோனேசிய அரசாங்கத்தின் கண்ணோட்டத்தில், 'கூட்டாட்சி' (federalism) என்ற சொல்லும் பிரச்சனைக்குரியதே. 1949 ல் இந்தோனேசியா ஒரு கூட்டாட்சி நாடாக ஆகியது. ஆனால், அடுத்த இரு வருடங்களில் அந்தக் கூட்டாட்சி முறை முடிவுபெற்றது. விமர்சகர்கள், இக்கூட்டாட்சி முறை நடைமுறைக்குதவாது என்றும், ஒல்லாந்தரின் காலனித்துவ ஆட்சிக் காலத்துக்குப் பொருத்தமானதை இன்னும் தொடரவே இக்கூட்டாட்சி வழிவகுக்கிறது என்றும் சொல்கிறார்கள்.

பொதுவாக, ஒரு நாட்டின் டிசம்பர் 1949ல் கூட்டாட்சி இந்தோனேசியாவுடன் சேர்ந்து 16 அரசாங்கங்களும் தன்னாட்சிப் பிரிவுகளும் இருந்தன. இதை இந்தோனேசியத் தேசியவாதிகள், காலனித்துவத்தின் தனித்தன்மையான 'பிரித்தாளும்' தந்திரமாகப் பார்த்தனர். கூட்டாட்சி முறைக்கு மிகச்சிறந்த உதாரணமாக இருந்திருக்கக்கூடிய இந்தோனேசியா, இந்தப் பின்னணியிலே, 'சுதந்திர இந்தோனேசியா'வாக 1950ல் உருவெடுத்தது.

1950 இலிருந்து, அது ஒன்றுபட்ட நாடாக மட்டுமல்லாது, 13ம் நூற்றாண்டு யாவா நாடாக மறுவமைப்புப்பெற்று, 'மஜபஹிட்' அரசாகவும் உருவானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தோனேசியப் பாடசாலைப் பிள்ளைகள் தமது ராஜா காலத்துப் பெருமைகளை இப்போதும் தமது சரித்திரப் புத்தகங்களில் படிக்கின்றனர். ஆனாலும், சாதாரண பொதுமக்களிடையே அரச குலத்திற்கென ஒரு சிறப்பான இடம் இருக்கவில்லை. இது ஆச்சரியப்படுவதற்கொன்றல்ல.

தெற்கு 'சுலவெசி' யிலும் 'அம்பொன்' மாகாணத்திலும் பிரிவினைவாதப் புரட்சி ஆரம்பமானதால் விரைவிலேயே இந்தோனேசிய அரசின் கூட்டாட்சி முறைகள் குலைக்கப்பட்டன. இந்தோனேசிய இராணுவம் இதை ஆரம்பத்திலேயே தடுக்கப் பார்த்தது, ஆனால் பிரிவினைவாதிகள், 'கூட்டாட்சி முறை இந்த நாட்டின் இறைமைக்கு ஆபத்தானது' என்ற கருத்தை இராணுவத் தளபதிகளிடையே திணித்துவிட்டனர். அவசியமேற்படின் அடக்குமுறையிலேனும் இக்கூட்டாட்சி தொடர்வதைத் தடுக்கவேண்டுமென அவர்கள் நம்பினர்.

1953 இலும் பின்னர் 1958இலும் இஸ்லாமை அடிப்படையாகக் கொண்ட ஆசேயின் புரட்சி இந்தோனேசிய அரசுக்கு மேலும் நெருக்கடியைக் கொடுத்தது. இந்தப் புரட்சியாளர்களை அடக்கிய பின்னர் இந்தோனேசியா, நாடாளுமன்ற ஜனநாயக முறையிலிருந்து, நிறைவேற்று அதிகாரம் பெற்ற ஜனாதிபதி ஆட்சிக்குத் தாவியது. இதனால் எல்லா அரசியல் அதிகாரமும் மத்திய அரசிடம் போனது.

**கூட்டாட்சியும் ஒன்றிணைந்த இந்தோனேசியாவும்**

1998ல் ஜனாதிபதி சுகார்ட்டோவின் வீழ்ச்சிக்குப் பிறகு, அவருடைய எதிர்ப்பாளரான அமீன் ரெய்ஸ் என்பவர் மீண்டும் கூட்டாட்சி முறையை அறிமுகப்படுத்த விரும்பிப் படுதோல்வி கண்டார். இவர் இந்தோனேசியாவின் சட்டமேல் சபையிலே 1998 இலிருந்து 2004 வரை தலைவராகவிருந்ததோடு, இந்தோனேசியாவின் பெரிய முஸ்லிம் கட்சியான National Mandate Party ன் தலைவராகவும் இருந்தவர். இவர் 2004ல் ஜனாதிபதித் தேர்தலில் நின்று 15 வீதமான வாக்குகளையே பெற்று நான்காவதாக வந்தார்.

இதே நேரத்தில் கிழக்குத் தீமோர், தனது சுதந்திர வேலைகளை ஆரம்பித்தது. இந்த நாடு 1975இல் உலக சட்டத்திற்கு விரோதமாகக் கைப்பற்றப்பட்டு, இந்தோனேசியாவின் ஒரு பகுதியாக 1976ல் அறிவிக்கப்பட்டது. இழந்த சுதந்திரத்தை மீளப்பெற கிழக்குத் தீமோர் ஆரம்பித்த போராட்டத்தை இந்தோனேசிய இராணுவம் நசுக்கியதுமல்லாமல், அதற்கு 'இந்தோனேசியாவின் ஒற்றையாட்சி அரசு' (The Unitary State of the Republic of Indonesia) எனப் புதுப்பெயர் கொடுத்து அழைக்கத் தொடங்கினர்.

கிழக்குத் தீமோர் ஒக்டோபர் 1999ல் தனிநாடாகியதையடுத்து, 'இந்தோனேசியாவின் ஒற்றையாட்சி அரசு' (The Unitary State of the Republic of Indonesia) என்ற வார்த்தை ஏறக்குறைய ஒரு தேசிய மந்திரம் போலாகிவிட்டது எனலாம். ஆசேயில், அரசாங்க சேவையாளர் இந்தோனேசிய அரசுக்கு விசுவாசமாக இருப்போம் என சத்தியப்பிரமாணம் செய்ய இராணுவம் வற்புறுத்தியது.

இந்தோனேசியாவின் நொந்துபோன ஜனநாயகத்தையும், அரசியலில் இராணுவத்தின் ஈடுபாட்டையும் கருத்தில் கொண்டு, எந்த ஒரு அரசியல்வாதியும் இந்தோனேசியா ஒரு ஒன்றுபட்ட நாடு எனப் பொதுப்படையாகக் கூறுவதில்லை. ஆசே பேச்சுவார்த்தைகளின்போது, இந்தோனேசிய அரசியல்வாதிகள் எந்த ஒரு தீர்வுத்திட்டத்தையும் அங்கீகரிக்க முடியவில்லை. கூட்டாட்சி என்பது அங்கீகரிக்கமுடியாத ஒரு வார்த்தையாகவிருந்தது.

தன்னாட்சிக்காகச் சுதந்திரக் கோரிக்கையை விட்டுக்கொடுத்த 'ஆசே விடுதலை முன்னணி', உடன்படிக்கையின்போது, தமது தனிநாட்டுக் கொள்கையைக் கைவிட்டது. அதற்குப் பதிலாக அதிக அதிகாரம் படைத்த தன்னாட்சியை அங்கீகரித்தது.

இந்த உடன்படிக்கையை அடுத்து, ஏனைய மாநிலங்களும் இந்தத் தன்னாட்சியைத் தழுவக்கூடுமென்ற வதந்தி இந்தோனேசியப் பத்திரிகைகளில் பரவலாக வெளியிடப்பட்டது. உதாரணமாக ஆசேயைப் போலவே பிரச்சனைக்குரிய பிரதேசமான பப்புவா நியூகினியும் இம்மாதிரி தன்னாட்சியை அடையுமா என்ற கேள்விக்குறி எழுந்தது. இக்கேள்வி, எதிர்காலத்தில் இந்தோனேசியா ஒரு கூட்டாட்சி அரசாக மாறுமா என்ற இன்னொரு கேள்விக்கும் வித்திட்டது.

இந்தக் கேள்வி பெரிதாகு முன்பே, முன்னாள் இராணுவ கேணலும், கிழக்குத் தீமோரில் 1970 களில் பணிபுரிந்தவருமான இந்தோனேசிய ஜனாதிபதி- சுசிலோ பம்பாங் யுதொயோனோ (Susilo Bambang Yudhoyono) யும் இன்னும் சில அரசியல்வாதிகளும் சேர்ந்து பப்புவா நியூ கினியை மூன்று மாகாணங்களாகப் பிரித்தனர். அரசியல்யாப்பு நீதிமன்றம் இதில் இரு மாகாணங்களை அனுமதித்துள்ளது. மூன்றாவது பற்றிய வழக்கு நடந்துகொண்டிருக்கிறது.

பப்புவா நியூ கினியை முன்னேற்றம் செய்வதே இதற்கான காரணம் என்று சொல்லப்பட்டாலும், உண்மையான காரணம் ஆசேயைப்போல நியூகினிக்கும் பிரிந்து போகும் எண்ணம் வந்துவிடக்கூடாது என்பதேயாகும். நியூகினிக்குத் தன்னாட்சி கிடைத்தால் அதன் மூலம் அது சுதந்திரத்தை அடைய முற்படலாமென இந்த மாகாணப் பிரிவுக்குக் காரணமானவர்கள் கருதுகிறார்கள். இந்தப் பிரிவு காரணமாக நியூகினி, ஆசே மாதிரியான உடன்படிக்கையை அடைவது சாத்தியப்படாது.

பெரியளவான உறுதிகளுடன் ஆரம்பமான இந்த நியூகினி மாகாணப் பிரிவுகள் தரமான தலைவர்களில்லாததால் எந்த முன்னேற்றத்தையும் அடைய முடியவில்லை. நியூ கினியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும் தலைவரான Theys Eluay இந்தோனேசிய இராணுவச் சிறப்புப் படையால் 2001ல் கொல்லப்பட்டார். அவருக்குப் பின்வந்தோர் அரசியல் அடைக்கலம் தேடி அயல் நாடுகளில் இருக்கின்றனர்.

இந்தோனேசியாவின் ஏனைய பகுதிகளைப் பொறுத்தவரையில் ஒரு புதிய அரசியல் ஒழுங்கு அதற்குத் தேவைப்படுகிறது. பிரிவினையா? அல்லது கூட்டாட்சியா? என்ற அடிப்படையில் அவை மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும். அப்படியான அழுத்தங்கள் இந்தோனேசியாவில் அவ்வப்போது எழுந்தபோதும், அவை எந்தப் பலனையும் மக்களிடம் ஏற்படுத்தாதவாறு இராணுவம் பார்த்துக்கொள்கிறது.


**இந்தோனேசியக் கூட்டாட்சி உருவாகுமா?**

இந்தோனேசிய அரசின் ஜனநாயக விரோத செயல்களையும், இராணுவக் கெடுபிடிகளையும் பார்க்குப்போது, கூட்டாட்சி என்பது கேள்விக்குறியே. குறிப்பாக தற்போதைய ஜனாதிபதி ஒரு முன்னாள் இராணுவ அதிகாரியாகவிருந்தார் என்பதை வைத்துப் பார்க்கும்போது, இது சாத்தியப்படாது என்றே தோன்றுகிறது.

கூட்டாட்சி என்பது முன்னைய காலனித்துவ நாடான இந்தோனேசியாவிற்கு மிகப்பொருந்தும். அதன் பூகோள, கலாச்சார அமைப்பும் அதை உறுதிப்படுத்துகிறது. ஆனால் அத்தகைய கூட்டாட்சிக்கு எதிரான சக்திகள் மிகப்பலமாக இருப்பதால் எதிர்காலத்தில் இது நடக்காது.

ஆசேயின் சமாதான உடன்படிக்கை நடைமுறையில் செயல்படுத்தப்படுவது சாத்தியமானால், அது ஏனைய மாநிலங்களுக்கும் உதாரணமாக இருக்கும். ஆனால் இதற்கெல்லாம், இந்தோனேசிய இராணுவம், சந்தர்ப்பவாத அரசியல்வாதிகள், பொதுமக்களின் பொறுப்பின்மை முதலிய இன்னோரன்ன காரணிகள் பெரும் தடைகளாக இருக்கின்றன.

# சூடானின் சமஷ்டிக் கொள்கை: ஒரு முற்றுமுழுதான சமாதான அங்கீகரிப்பும் அதன் தொடர்புகளும்




இந்த 'சமஷ்டிக்குள் ஒரு சமஷ்டி' முறை, பல்லின சமுதாய ஒருமைப்பாட்டுக்கு வழிவகுக்கும்.

சமஷ்டிக் கொள்கைக்கு எதிரானவர்களால், சூடான் அது 1956ல் சுதந்திரம் பெற முன்னரே பெரும் சிக்கல்களைச் சந்தித்து வந்திருக்கிறது. 50 வருடங்களாக இடம்பெற்ற இரு பெரும் உள்நாட்டு யுத்தங்களுக்கும் பின்னர், தற்போது சமஷ்டி முறை அங்கீகரிக்கப்பட்டு 'கார்ட்டும்' அரசாங்கத்திற்கும் 'சூடான் மக்கள் சுதந்திர முன்னணி'(Sudan people's Liberation Movement/Army- SPLM A) க்குமிடையே 9 ஜனவரி 2005 அன்று ஒரு ஒப்பந்தம் கைச்சாத்தாகியுள்ளது.

ஐம்பதுகளின் ஆரம்பத்திலேயே தெற்கு சூடான் சமஷ்டி முறையிலான கூடுதல் அதிகாரத்தை வலியுறுத்தி வந்தது. ஆனால் ஒரு முடிவை அவர்களால் ஏற்படுத்த முடியாமல் போனதால், சூடானின் சுதந்திர நாளன்றே உள்நாட்டு யுத்தம் ஆரம்பமாகியது. அதற்குப் பின் வந்த ஐந்து தசாப்தங்

ஷோன் ஷோலிஹான்
தமிழில் : வ. சிவலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**தெற்கு சூடானின் ஜனாதிபதி தான் மத்திய – தேசிய அரசின் உப ஜனாதிபதி! மத்திய அரசின் சபையிலும், அரசாங்க சேவைகளிலும், தேசிய பெற்றோலிய சபையிலும், நிதிவழங்கல் சபையிலும் மேலும் பல அரச ஸ்தாபனங்களிலும் தெற்கு சூடானுக்குரிய பங்குகள் ஒதுக்கப்பட்டுள்ளன.**

களாக, பல தோல்வியடைந்த சமாதானப் பேச்சுக்களும் உடன்படிக்கைகளும், தென் சூடானின் அரசியல்வாதிகளை நம்பிக்கையிழக்கச் செய்ததுடன் 1955 இலிருந்து 1972 வரைக்கும், பின் 1983 இலிருந்து 2004 வரைக்கும் இரு பெரும் உள் நாட்டுப் போர் மூளவும் அது காரணமாகியது.

தென் சூடான் மக்களின் முறைப்பாடு கிட்டத்தட்ட ஒரே மாதிரியாகவே இருந்து வருகிறது. அதாவது, வடக்கு சூடானின் பெரும்பான்மை முஸ்லிம்கள் அனுபவிக்கும் எல்லா பொருளாதார சுகங்களும் தென் சூடானின் கிறிஸ்தவர்களுக்குக் கிடைப்பதில்லை. அத்துடன் முஸ்லிம்கள் தமது 'ஷாரியா' சட்டத்தைத் தெற்கிற்குத் திணித்தல், தமது சமய கலாச்சாரத்தைக் கடைப் பிடிக்க வலியுறுத்தல், 1982ல் தெற்கு சூடானில் நில எண்ணை கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் வடக்குத் தெற்குக்குப் புதிய எல்லையை வரைய முற்படுதல், காணிகளை உடமையாக்குவதில் தடை, 'கார்டுமின்' தண்ணீரைப் பாவிப்பதில் சிரமம் என இன்னபல துயரங்களை தெற்கு சூடானியர் அனுபவித்து வந்துள்ளனர்.

தெற்கின் சுதந்திரம் என்பது, நினைத்துக்கூடப் பார்க்கமுடியாத ஒன்றாகவே வடக்குச் சூடானுக்கு இருந்துவந்தது. 'சமஷ்டி' என்பது அவர்களைப் பொருத்தவரை ஒரு கெட்ட வார்த்தை! அது ஒரு பலவீனமான கொள்கையாகப் பார்க்கப்பட்டதற்குக் காரணம், வடக்கினர் தமது இஸ்லாமிய சட்டதிட்டங்கள், இஸ்லாமிய தேசியவாதம், தமது சொந்த பொருளாதாரத் தேவை முதலியவற்றுக்கு இந்த 'சமஷ்டி' ஒரு இடைஞ்சலாக இருக்கிறது எனக் கருதியது தான். தெற்கிற்கு இதுவரையில் கொடுத்த சுதந்திரமே தமக்கு அழிவைத்தரும் என வடக்கு நம்பியது. தெற்கினையடுத்து வடக்கிலுள்ள ஏனைய சிறுபான்மையயினரான 'டார்பர்'(Darfur) மக்களும் சுதந்திரம் கேட்க ஆரம்பிப்பர் என வடக்குப் பயந்தது.

சமாதான ஒப்பந்தம் கைச்சாத்தான ஐந்து ஆறு மாதங்களில் அதற்குப் பிரச்சனை வந்தாலும் கூட, அது நடைமுறையிலிருந்து வந்தது. இதற்கிடையில், மேற்கு சூடானில் 'டார்பர்'(Darfur) பிரச்சனை விஸ்வரூபமெடுத்து, முழுதான ஒரு ஆயுதப் போர் ஆரம்பமானது. 'டார்பர்'(Darfur) இன்னொரு மனித நேயத் தோல்வியானது. இதே விதி சூடானின் கிழக்கையும் நெருங்கிக் கொண்டிருந்தது.

இந்த நேரத்தில் இரு பெரிய கேள்விகள் எமது மனதில் தோன்றுகின்றன. சமீபத்தைய அரசியல் சூழ்நிலையில் சமாதான ஒப்பந்தம் நின்று பிடிக்குமா? இதே வடிவிலான சமஷ்டி முறையை ஏனைய பிரச்ச னைக்குரிய மாகாணங்களுக்கும் விரிவுபடுத்தல் பொருத்தமுடையதா? என்பவையே அந்தக் கேள்விகள்.

### முழுமையான சமாதான உடன்படிக்கையில் சமஷ்டியின் நிலைப்பாடு

சமாதான உடன்படிக்கையின்படி, அரசாங்கத்தின் நான்கு நிலைகள் அரசியல் சாசனத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

1- ஒன்றிணைந்த தேசிய அரசாங்கம் (மத்திய அரசாங்கம்)

2- அதிக அதிகாரங்களைக் கொண்ட தென் சூடானின் அரசு

3- 26 உள்நாட்டு அரசாங்கங்கள் (State Governments). இதில் 16 வடக்கிலும் 10 தெற்கிலும் 4- உள்ளூராட்சிகள்

முதல் மூன்றும், பொருளாதார அரசியல் ரீதியாக மிகுந்த அதிகாரத்தைக் கொண்டவை. மத்திய அரசு, தெற்கு சூடான் அரசு மற்றும் 26 உள் நாட்டு அரசாங்கங்களும் தமது சொந்த அரசியல் யாப்பைக் கொண்டிருக்கும். இந்த சமாதான ஒப்பந்தத்தில் குறிப்பிடத்தக்க அம் சம் என்னவெனில், மத்திய அரசுக் கும் 26 தெற்கு உள்நாட்டு அரசாங் கங்களுக்குமிடையிலான சகலவித பிரச்சனைகளும் தெற்கு சூடானின் இடையீட்டுடனேயே நடக்கவேண் டும். சமஷ்டி முறையின் இந்த சமனிலையற்ற கோட்பாடு காரணமாக, கார்டுமிற்கும் ஏனைய தெற்கு உள்நாட்டு அரசாங்கங்களுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறக்குறைய எந்தவிதத் தொடர்புமில் லாமல் போகும். கார்டும் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த நில எண்ணையின் 50 வீதமான வரி வருமானம் தெற்கு சூடானுக்குப் பிரித்தளிக்கப்படவேண்டுமென்பதும் இதே மாதிரியான விமர்சனத்திற்குள்ளா னது.

இவைகளைத் தவிர, தெற்கு உள்நாட்டு அரசாங்கங்களுக்கு எந்தப் பிற விநியோகமும் செய்வது மத்திய அரசின் விருப்பத்தின்படியே நடக்கும். இந்த அதியுயர் அதிகாரம் பெற்ற தெற்கு உள்நாட்டு அரசுகள் சூடானியர்களின் சரித்திர ரீதியான தனித்துவத்தைப் பெறமுடியும். அத்துடன் இந்த 'சமஷ்டிக்குள் ஒரு சமஷ்டி' முறை, பல்லின, சமுதாய ஒருமைப்பாட்டுக்கு வழிவகுக்கும்.

மத்திய அரசிலே ஒவ்வொரு தொகுதியும் நேரடி அதிகாரம் செய்வதற்குரிய இயக்க முறைகள் அமைக்கப்பட்டுள்ளன. முக்கியமாக, மத்திய அரசிலே தெற்கு சூடானின் பங்கு. உதாரணமாக, தெற்கு சூடானின் ஜனாதிபதி தான் மத்திய-தேசிய அரசின் உப ஜனாதிபதி! மத்திய அரசின் சபையிலும், அரசாங்க சேவைகளிலும், தேசிய பெற்றோ லிய சபையிலும், நிதிவழங்கல் சபையிலும் மேலும் பல அரச ஸ்தாபனங்களிலும் தெற்கு சூடானுக்குரிய பங்குகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

தெற்கு சூடான் அரசைப் பொருத்தவரையில், திட்டமிடல் உயர் அதிகாரம், சட்ட உருவாக்கம் ஆகியவற்றைப் பெரும்பாலும் தெற்கு சுதந்திர முன்னணி, சூடான் மக்கள் சுதந்திர முன்னணி(Sudan people's Liberation Movement/Army- SPLM/A) ஆகியவையே ஆக்கிரமித்துள்ளன. கார்டுமில் தேசிய காங்கிரஸ் கட்சி எனும் இஸ்லாமியக் கட்சியே பெரும்பான்மையாக இருந்தாலும், சூடான் மக்கள் தேசிய முன்னனியும் குறிப்பிடத்தக்க சிறுபான்மைக் கட்சியாகவுள்ளது. தெற்கின் உள்நாட்டு அரசாங்கங்களிலும் சூடான் மக்கள் சுதந்திர முன்னணியும் வடக்கு உள்நாட்டு அரசாங்கங்களில் தேசிய காங்கிரஸும் பெரும்பான்மையாகவுள்ளன. இதே நிலைமை மத்திய அரசின் 'மேல் சபை' யிலும் பிரதிபலிக்கிறது. ஏனைய கட்சிகள், மத்திய மற்றும் தென் அரசாங்கங்களிலே மிகச்சிறிய பங்கையே வகிக்கின்றன. பார்க்கப்போனால், இந்தச் சமாதான உடன்படிக்கை பெரும்பாலும், சூடானின் போருக்குக் காரணமான இருபெரும் கட்சிகளான தேசிய காங்கிரஸுக்கும் சூடான் மக்கள் சுதந்திர முன்னணிக்குமிடையிலே தான் செய்யப்பட்டுள்ளது.

சமாதான உடன்படிக்கை ஒரு ஆறு வருட இடைக்காலம் வரையே. அதன் முடிவில் தெற்கு சூடான், மத்திய சூடானுடன் இருப்பதா அல் லது தனியே பிரிவதா என்பதற்கான ஒரு வாக்கெடுப்பு மக்களிடையே நடைபெறும். இந்த இடைக்கால அரசு முழுமையாக முடிக்கப்பட்டு, 'சேர்ந்திருப்பதே அழகு' என்று மக்களை உணரவைப்பதே இந்த, சமாதான உடன்படிக்கையின் முக் கிய நோக்காகும்.

### முழுமையான சமாதான உடன்படிக்கைக்கு அப்பால்

உலகில் எந்த ஒரு சமாதான முயற்சியிலும் இருப்பதுபோல் இந்த சமாதான உடன்படிக்கையும் பல விமர்சனங்களையும் அவநம்பிக்கைகளையும் கொண்டுதானிருக்கிறது. இதில், தேசிய காங்கிரஸ் முழுமையான மனதோடு இந்த சமாதான உடன்படிக்கையைக் கடைப்பிடிக்கிறதா என்பது ஒன்று.

இதே தேசிய காங்கிரஸ் 1989 இல் இராணுவச் சூழ்ச்சி மூலம் அப்போதைய அரசைக் கவிழ்த்தது. சமா தான உடன்படிக்கையின் பிரதான கொள்கைகள் இந்தத் தேசிய காங்கிரசால் பின்பற்றப்படுகிறதா என்பதில் சந்தேகம் நிலவுகிறது. அதன் முதல் 15 மாதகால ஆட்சியும் அதை நிரூபிக்கிறது. தேசிய காங்கிரஸ், சூடானின் மிகப்பலமுடைய ஒரே யொரு கட்சி. பலவீனமான அதிகாரத்தை மத்தியிலே கொண்டது. அது தனது சொந்தக் கட்சிக்குள்ளிருந்தும் வெளியேயிருந்தும் மிரட்டல்களைச் சந்திக்கிறது. கட்சியின் சிரேஷ்ட அங்கத்தவர்கள், அரசு அதீத அதிகாரத்தினை தெற்கிற்கு அளித்துவிட்டதா கக் கருதுகின்றனர்.

விமர்சகர்கள் மேலும், 'முழுமையான சமாதான உடன்படிக்கை' என்றதில் 'முழுமையான' என்ற பதம் பொருத்தமற்றது என்கிறார்கள். பூகோள ரீதியாக இது தென் சூடான் மக்களின் அபிலாஷைகளை நிறைவுபடுத்துகிறது. பேச்சுவார்த்தைகளுக்கு 'டார்பர்'(Darfur) போன்ற வடக்கின் சிறுபான்மையினர் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. சூடானில், வடக்கு-தெற்கோ அல்லது முஸ்லிம்-கிறிஸ்தவர் என்ற பிரச்சனையோ அல்ல என ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். வடக்குத் தெற்குப் பிரச்சனை துல்லியமானது. ஆனால், வடக்கிலுள்ள சிறுபான்மையினரின் பிரச்சனைகள் சிக்கலானது. முக்கிய



'சமஷ்டிக் கொள்கையானது ஒரு அரசியல் யாப்பு மட்டுமல்ல, அது ஒரு அரசாங்கம், ஒரு சமூகத்தின் அடிமூலம்'

மாக 'டார்பர்'(Darfur) மக்களின் பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பது சூடானின் முக்கிய பொறுப்பாகும்.

இந்த சமாதான உடன்படிக்கை பல அரசியல் கட்சிகளை ஒதுக்கி வைத்துள்ளது. உதாரணமாக, UMMA கட்சி, Democratic Unionist Party போன்றன. இதில் Democratic Unionist Party, கடந்த எல்லாத் தேர்தல்களின் போதும் அதிக வாக்குகளைப் பெற்றுள்ளது. இந்த இரு கட்சிகளும் வடக்கு சூடானிலுள்ள குறிப்பிடத்தக்க குடும்பங்களிலே செல்வாக்குப் பெற்றிருந்தன. அவைகளின் செல்வாக்கு தற்போது மிகவும் சரிந்த நிலையில் காணப்படுவதற்கு, அவர்கள் கடந்த 50 வருட காலமாகச் சூடான் கீழ் நிலைக்குப் போவதற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குப் பொறுப்பாயிருந்ததும் ஒரு காரணமாகும். ஆனபோதிலும், இது மாதிரியான சகல அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்பும் அங்கீகாரமுமின்றி இந்தச் சமாதான உடன்படிக்கை நீண்ட காலத்திற்குத் தாக்குப்பிடிக்காது என அரசியல் பார்வையாளர்கள் கருதுகின்றனர்.

### சூடானில் 'சமஷ்டி'

சூடானில் பொதுவாக நடக்கும் எந்த செயல்களுக்கும் மாநில சுயாட்சிகளின் அதிகாரங்கள் எப்படிப் பதிலளிக்கின்றதென்பது முக்கியம். ஏனெனில், இவைகளின் செயற்பாடுகளைப் பொறுத்து நிலைமைகள் மாறக்கூடும். அடிப்படையிலேயே சூடானின் அரசியல் சூழல் ஆடிக் கொண்டிருக்கும் பட்சத்தில், இந்த 'முழுமையான சமாதான உடன்படிக்கை' (Comprehensive Peace Agreement) ஒரு பெரும் சாதனையாகும். அத்துடன் சூடானியர்களுக்கு 'சமஷ்டி' பற்றிய ஒரு முழுமையான நோக்கையும் இந்த சமாதான உடன்படிக்கையிலுள்ள அம்சங்கள் வழங்குகின்றன.

சூடானுக்கு உதவி வழங்குவோ ரும், அதன் மீளக் கட்டியெழுப்புதலு டன் இந்த சமஷ்டிக் கொள்கைகளை நிலை நிறுத்தவும் முன்னிற்பர். முக்கியமாகத் தெற்கு சூடானுக்கு. சூடானின் நான்கு நிலையிலுள்ள அரசாங்கங்களுக்கு இந்த சமாதான உடன்படிக்கை ஒரு 'போனஸ்' ஆகவே கருதப்படும். இந்த நேரத்தில், சமஷ்டிக் கொள்கையின் ஆராய்வாளரான ரொன் வோற்ஸ்(Ron Watts) கூறுவதைக் குறிப்பிடவேண்டும் 'சமஷ்டிக் கொள்கையானது ஒரு அரசியல் யாப்பு மட்டுமல்ல, அது ஒரு அர சாங்கம், ஒரு சமூகத்தின் அடிமூலம்'.

அடிப்படையிலேயே ஒரு நிலையற்ற சூழலைக் கொண்டிருக்கும் சூடானின் அரசியலில் இந்த விதமான புதிய அரசியல் பரிமாணங்களை எப்படிப் படிப்படியாகக் கொண்டுபோய் மக்களுக்குப் பயனளிப்பதாக்குவது? இது, சம்பந்தப்பட்டவர்கள் எப்படித் தாம் முதலில் அதை (முக்கியமாக 'சமஷ்டி' யை) ஜீரணம் செய்கிறார்கள் என்பதிலும், பின்னர் அதைக் கூட்டிக் கழித்துக் கணித்த பின்னர் எப்படிச் செயலாக்குகிறார்கள் என்பதிலும் இருக்கிறது. சூடானின் நீண்ட நாள் நன்மையும் அவர்கள் செய்யும் அந்த முடிவிலேயே தங்கியிருக்கி றது.



# சூடான், இந்தோனேசிய சமாதான முயற்சிகள்: இலங்கைக்கான படிப்பினைகள்

இலங்கையின் சமாதானத்தை முன்னெடுத்த நடவடிக்கைகளில் இரண்டாயிரத்து ஐந்தாம் ஆண்டு ஒரு சவாலாக இருந்தது. ஏற்கனவே தளர்ந்து போயிருந்த சமாதானப் பேச்சுக்கள், சுனாமி அனர்த்தத்தையடுத்து அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான "சுனாமிக்குப் பின்னதான புனரமைப்புத் தொடர்பான முகாமைத்துவக்கட்டமைப்பு" மூலமாக மீண்டும் புதுப்பிக்கப்பட எடுக்கப்பட்ட முயற்சிகள் பலிக்கவில்லை. சுனாமியைத் தொடர்ந்து ஆரம்பித்த வன்முறைகள் யுத்தநிறுத்த உடன்படிக்கையையும், "போருமில்லை சமாதானமுமில்லை" என்ற முன்பிருந்த சூழ்நிலைகளையும் தலைகீழாக மாற்றிவிட்டன.

இலங்கையைப் போலவே பாலஸ்தீனத்திலும், வட அயர்லாந்திலும் இந்த விதமான சமாதான முன்னெடுப்புக்கள் தொடர்ச்சியான வன்முறைகளால் கடந்த காலங்களில் முறிவடைந்தும் செயலிழந்தும் போயிருக்கின்றன. இப்படியான நிகழ்வுகள் எந்தவொரு சமாதான முன்னெடுப்புக்களிலும் சகஜமானதாகும்.

ஏனைய நாடுகளின் பிரச்சனைகளைப் பார்க்கும்போது, 2005ம் ஆண்டு எதிர்பாராத இரு பெரும் சமாதான உடன்படிக்கைகள் கைச்சாத்தான ஆண்டாகும். ஒன்று இந்தோனேசியா அரசாங்கத்துக்கும் "ஆசே விடுதலை முன்னணி"(Free Aceh Movement- GAM)க்குமான

மிராக் ரஹீம்
தமிழில் வ. விசுவலிங்கம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதான உடன்படிக்கை. இரண்டாவது, சூடான் அரசாங்கத்துக்கும் "தெற்கு மக்கள் விடுதலை முன்னணி"(Southern People's Liberation Movement-SPLM)க்குமிடயிலான உடன்படிக்கை. இந்த இரு பெரிய சமாதான உடன்படிக்கைகளும், உலகிலுள்ள ஏனைய நாடுகளின் நீண்டகால, சிக்கலான, இழுபறி நிலையிலுள்ள உள்நாட்டுப் பிரச்சனைகளை எப்படித் தீர்ப்பதென்பதற்கு அடியெடுத்துக் கொடுப்பதுடன், வழிகாட்டவும் செய்கிறது.

இந்த இரு நாடுகளின் சமாதானத் தீர்வு உடன்படிக்கையின்போதும் இரு பக்கத்தாரும் அதிகாரப்பரவலாக்கல் மற்றும் மத்திய, பிராந்திய மக்களின் உரிமைகள் என்பனவற்றில் உடன்பட்டுள்ளனர். ஆனாலும், எந்த சமாதான உடன்படிக்கையின்போதும் வழமையாக வரக்கூடிய இக்கட்டான பிரச்சனைகளான ஆயுதக் களைவு, இராணுவம் மற்றும் ஆயுதக்குழுக்களைக் கலைப்பது, நிதி, பொருளாதார உரிமைகள் மற்றும் மாநிலங்களுக்கான வரிப்பங்கீடு, தமது சொந்த மாநிலச் சின்னங்களைக் கையாளும் உரிமை, அடிப்படை மனித உரிமை முதலியவை சிக்கலான கட்டுமானங்களாகவுள்ளன. ஆனாலும், இந்த இரு நாடுகளின் சமாதான உடன்படிக்கைகளுக்குமிடையேயுள்ள முக்கியமான வேறுபாடு என்னவெனில், தெற்கு சூடான் நாட்டு மக்கள், தாம் தனியாகப் பிரிவதற்கோ அல்லது சூடானுடன் சேர்ந்திருப்பதற்கோ முடியுமான வகையில் வாக்களிக்க உரிமையளிக்கப்பட்டிருக்கிறது.

**தனியாகப் பிரிவதற்கோ அல்லது சூடானுடன் சேர்ந்திருப்பதற்கோ முடியுமான வகையில் வாக்களிக்க தெற்கு சூடான் நாட்டு மக்களுக்கு உரிமையளிக்கப்பட்டிருக்கிறது.**

இந்த இரு உடன்படிக்கையிலுமுள்ள முக்கிய பிரிவுகள், வேறொரு நாட்டின் உள் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்குப் பிரதிபண்ண முடியாதவையெனினும் அவைகளில் சில மாற்றங்கள் செய்யப்பட்டு அந்தந்த நாடுகளின் தனிப்பட்ட நிலைகளுக்கேற்ப அவற்றைக் கையாளலாம். இந்த இரு சமாதான உடன்படிக்கைகளிலுமுள்ள ஒவ்வொரு நிபந்தனைகளையும் அலசி ஆராய்ந்து, அவைகளை எப்படி எமது இலங்கை இனப்பிரச்சனைக்கு ஏற்றவாறு பயன்படுத்தலாம், எந்தப் படிப்பினைகளைப் பெறலாம், எவையெவற்றை நடைமுறைப்படுத்தலாம் என்பதை இந்தக் கட்டுரை ஆராய்கிறது.

இவற்றில் இந்தோனேஷியாவின் ஆசே விடுதலை முன்னணிக்கும், அந்நாட்டு அரசாங்கத்துக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கை பற்றியும், இது எவ்வாறு கள யதார்த்தத்தையும், சர்வதேச அரசியல் சூழ்நிலையையும் சரியாகப் புரிந்துகொண்டு ஒரு தீர்வைநோக்கி நகர்ந்தது என்பது பற்றியும் கடந்த 'சமாதான நோக்கு' இதழில் பார்த்திருந்தோம். எனவே, இங்கு சூடானின் சமாதான உடன்படிக்கையின் முக்கிய அம்சங்கள் சிலவற்றை நோக்குவோம்.

**சூடானின் சமாதான உடன்படிக்கை**

21 வருட உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக ஒரு பொருத்தமான சமாதான உடன்படிக்கை சூடான் அரசுக்கும் 'சூடானிய மக்கள் விடுதலை முன்னணி'(Sudanese People's




Liberation Movement- SPLM) க்குமிடையே 09/01/2005 அன்று கைச்சாத்தானது. இரு வருட காலமாக நடந்த பேச்சுவார்த்தைகளும் உலக நாடுகளின் தலையீடும் தான் இதற்குக் காரணமாகும். வடக்கே முஸ்லிகளைப் பெரும்பான்மையாகவும், முஸ்லிம்களைத் தலைமையாகவும் கொண்ட அரசாங்கம், தெற்கேயுள்ள கிறிஸ்தவ இன மக்கள் மீது ஆக்கிரமிப்பு நடத்தியதால் 1.5 மில்லியன் மக்கள் பலியானதும், 4 மில்லியன் மக்கள் இடம்பெயர்ந்ததுமான இந்த 21 வருட ஆயுதப்போர்தான் ஆபிரிக்காக் கண்டத்திலேயே நீண்ட உள்நாட்டு யுத்தமாகும்.

**சமாதான உடன்படிக்கையின் முக்கிய நிபந்தனைகள்:**

* நிரந்தரமான யுத்தநிறுத்தத்தை இந்த உடன்படிக்கை வலியுறுத்துகிறது.
* இரு தரப்பிலுமுள்ள ஆயுததாரிகள் தமது வடக்கு அல்லது தெற்கு இராணுவத் தளங்களைவிட்டு வெளியேறுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



* இருதரப்பும் சம்பந்தப்பட்ட 1:1 என்ற விகிதாசாரத்திலான ஒரு அதிகாரப்பிரிவு அமைக்கப்பட்டு, அது ஒரு தற்காலிக 6 வருட காலங்களுக்கு பிரச்சனைக்குரிய பிரதேசங்களுக்குப் பொறுப்பாகவிருத்தல்.

* இந்த 6 வருடங்கள் கடந்த பின்னர், தெற்கு சூடான் மக்கள் தாம் சூடான் நாட்டுடனேயே இணைந்து இருக்க விரும்பும் பட்சத்தில், வடக்கும் தெற்கும் கலந்த 39,000 இராணுவப்படை உருவாக்கப்படும்.

* இடைப்பட்ட 6 வருட காலத்தில் தெற்கு சூடான் தனது சொந்த அதிகாரங்களைக் கொண்டிருக்கும். 'தேசிய சட்டவாக்க மீளமைப்புச் சபை' ஒன்று தெற்கு சூடானுக்கான புதிய சட்டமூலங்களை உருவாக்கும். இந்தச் சட்டவாக்கலில் தெற்கு சூடானின் பங்கு 70:15:15 என்ற விகிதத்தில் SPLM க்குச் சார்பாக முறையான தேர்தல் நடக்கும்வரை இருக்கும்.

* சமஷ்டி முறையிலமைந்த இரு நாடாளுமன்றப் பிரவுகள் மத்திய அரசுக்கும், பிரதேச அரசான தெற்கு சூடானுக்கும் அமைக்கப்படும். தேர்தல் நடக்கும்வரை ஒரு வடக்கு சூடானியர் ஜனாதிபதியாகவும், ஒரு தெற்கு சூடானியர் உப ஜனாதிபதியாகவும் கொண்ட ஒரு தேசிய அரசு இடைக்கால அரசாக அமைக்கப்படும். நாடாளுமன்றக் குழுவும் மத்திய சூடான் அரசு, மற்றும் வடக்கு தெற்குக் கட்சி உறுப்பினர்கள் கொண்டதாக இருக்கும்.

* இடைக்கால அரசு உருவாக்கப் பட்டு 3 வருட காலத்தில் பொதுத்தேர்தல் நடத்தப்படும்.

* இந்த உடன்படிக்கையின்படி இந்த 6 வருட இடைக்கால அரசாங்கத்தின் நடைமுறையில், தெற்கு சூடானிய மக்கள் தாம் தனியாகப் பிரிவதா? அல்லது சூடானுடன் சேர்ந்து இருப்பதா? என முடிவு செய்வர்.

* தமது மாநிலத்துக்குச் சொந்தமான கொடியைப் பாவிப்பதற்குள்ள உரிமை.

* சூடானின் பாரிய எண்ணைக் கிணறுகள் பெரும்பாலும் தெற்கு சூடானிலேயே இருக்கின்றன. அவை 50:50 என்ற விகிதாசாரத்தில் பிரிக்கப்படவேண்டும்.

* அரசாங்க உத்தியோகங்களில் அமர்வதற்கு 70:30 என்ற விகிதாசாரத்தில் சூடான் அரசுக்குச் சார்பாக இந்த உடன்படிக்கை இருக்கும்.

* வடக்கு சூடான் 'பவுண்ஸ்' ஐயும், தெற்கு சூடான் 'தினார்' ஐயும் என, இரு வெவ்வேறு நாணயங்களைப் பயன்படுத்தும்.

* இஸ்லாமியச் சட்டமான 'ஷாரியா' வடக்கில் மட்டும் வழக்கிலிருக்கும். தெற்கு சூடானில் அந்தச் சட்டம் இருக்காது. இது தற்போதுள்ள அரசியல் சாசனத்தில் மாற்றங்களைக கொண்டுவரும். தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்றம், பிரச்சனைக்குரிய 'காற்றூம்'(Kharoum) மாநிலத்தில் 'ஷாரியா' வை வழக்கில் வைப்பதா என்பதை முடிவு செய்யும்.

* அடிப்படை மனித உரிமையை சூடானிய அரசாங்கம் மதிக்கவேண்டுமென்பது உறுதிப்படுத்தப்படவேண்டும் எனவும் இந்த உடன்படிக்கை உலக நாடுகளைக் கேட்டுள்ளது.

* இருதரப்பு யுத்தத்தை அவதானிக்க ஒரு குழு அமைக்கப்படவேண்டுமென்பதை இந்த ஒப்பந்தம் வலியுறுத்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொஸ்னியா, ஹெர்ஸகொவினா: இரு வாக்குகளால் தோற்கடிக்கப்பட்ட அரசியலமைப்பு மாற்றம்

பொஸ்னியப் பாராளுமன்றத்தில் கடந்த ஏப்ரலில் புதிய அரசியல் யாப்புத் திருத்தம் சம்பந்தமாக எடுக்கப்பட்ட வாக்குப் பதிவின்போது, இரு வாக்குகள் வித்தியாசத்தில் அது தோற்றது. இதனால் பொஸ்னியா ஐரோப்பிய ஒன்றியத்தில் இணையும் எண்ணம் தள்ளிப்போயிருக்கிறது. இந்த யாப்புத்திருத்தம், ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைவது தொடர் பான பேச்சுவார்த்தைகளுக்கு அவசியமானதாகக் கருதப்பட்டது.

1995ல், பொஸ்னியாவின் இடைக்கால அரசியல் யாப்பான, "டேய்ற்றன் அமைதி உடன்படிக்கை" (Dayton peace accord) கையெழுத்திடப்பட்ட நாளுக்குப் பின்னர், இந்த ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைவது தொடர்பான வாக்குப்பதிவும் அதன் தோல்வியும் பெரும் கவலைக்குரிய நாளாகப் பொஸ்னியப் பாராளுமன்றத்தில் காணப்பட்டது.

இந்த யாப்புத்திருத்தம் அங்கீகரிக்கப்படவேண்டுமெனில், பாராளுமன்றக் கூட்டத்தொடரில் சமூகமளித்த பிரதிநிதிகளில் மூன்றில் இரண்டு வீத மானவர்களின் ஆதரவு இருத்தல் வேண்டும். ஆனாலும் 42 பிரதிநிதிகளில் 26 பேரே ஆதரித்தனர். 16 பேர் எதிராக வாக்களித்ததால், இந்த யாப்புத் திருத்தத்திற்குரிய பெரும்பான்மை கிடைக்கவில்லை.

அதற்கடுத்த நாள், ஐரோப்பிய சிறப்புப் பிரதிநிதி கிறிஸ்டியன் ஷ்வாற்ஸ்-ஷில்லிங் (Christian Schwarz-Schilling) தனது பெரும் அதிருப்தியைத் தெரிவித்தார். "நேற்றைய வாக்கெடுப்பினால் தளர்ந்திருக்கும் பொஸ்னியர்களுக்கு இதிலிருந்து மீளுவதற்கு நாளாகும். ஆனால் அவர்கள் முன்னோக்கிச் செல்வது முக்கியமானது. பொஸ்னி யாவின் அரசியல் யாப்பை மீள அமைப்பது அல்லது திருத்துவது என்பது ஒரு காலத்தில் நடந்தே தீரும். ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைவதற்காகத் தன்னைத் தயார்ப் படுத்தவும், பொஸ்னிய மக்களின் சேவைக்காகவும் இந்த முடிவு மீளப் பரிசீலிக்கப்பட



வேண்டும்" என்று அவர் தெரிவித்தார்.

மூன்று வருட போரினால் 50 வீதமான மக்கள் நாட்டை விட்டு வெளியேறி, ஏறக்குறைய 100,000 மக்கள் கொல்லப்பட்டபின் டேய்ற்றன் அமைதி உடன்படிக்கை "(Dayton peace accord) புதிய அரசாங்கத்தை பொஸ்னியாவில் அமைத்தது. திருத்தியமைக்கப்பட்ட பொஸ்னியாவுக்கு ஒரு முழு வடிவத்தை இந்த உடன்படிக்கை கொடுத்தது. இந்த உடன் படிக்கையில் சில திருத்தங்கள் 1995 இலிருந்து மேற்கொள்ளப்பட்டன வெனினும், எல்லாத் திருத்தங்க ளுமே, ஐரோப்பாவுடன் இணைவதற் குத் தேவையானவையல்ல.

பொஸ்னியாவின் பொதுத்தேர்தலுக்கு முன், அதாவது ஒக்டோபர் 1 ஆம் திகதி, இந்த யாப்புத் திருத்த வேலைகள் தேர்தல் ஆணையகத்தினால் எதிர்க்கப்பட்டது. ஆனால்

"கடந்த காலத்திலேயே சிக்கிக்கொண்டிருக்கும் ஒரு சிறு குழு, மீண்டும் போரின் அவலங்களைத் தொடங்கி பழைய கணக்குகளைத் தீர்க்க நினைக்கிறது"

பேராசிரியர் டொகொஸ்லோ டொம்ஜான்
கனடாவுக்கான முன்னாள் பொஸ்னியத் தூதுவர்
தமிழில் வ. விசுவலிங்கம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது இவ்யாப்பு தோல்வியுற்றதால், ஏற்கனவே இருக்கும் அரசியல் யாப்பின் சட்டங்களுக்கிணங்கவே தேர்தலும் நடைபெறும்.

**யாப்பு மாற்றத்திற்கான திட்டம்:**

* 87 உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றத்தின் lower house க்கு சட்ட உருவாக்கத்திற்கான அதிகாரம் கொடுத்தல்
* upper house க்கு முக்கியமான தேச நலனை மட்டுமே கையாளுவதற்கான மாற்று அதிகாரம்
* ஒரு ஜனாதிபதிக்கும் இரு உப ஜனாதிபதிகளுக்குமான தேர்தல்



* பொஸ்னியாவின் மந்திரி சபைக்கு அதிக அதிகாரம்.

இந்த மாற்றங்களுக்கு முக்கியமான எதிர்ப்பாளர்கள், 'ரிஸ் சிலாட்ஸிக் (Haris Silajdzic) என்பவரின் "பொஸ்னியா- ஹெர்சகோர்வினா கட்சி" யினரும் க்ரோசியக் கட்சியிலிருந்து பிரிந்த HDZ1990 என்ற கட்சியுமாகும்.

ஐரோப்பியப் பாராளுமன்றம் ஏப்ரல் 2005ல் பொஸ்னியாவின் அரசியல் யாப்புக் கட்டமைப்பின் தன் மையை விமர்சிக்க முற்பட்டபோது தான் இந்த யாப்பு மாற்றத்தின் அவ சியம் வெளிப்படையாகத் தெரிந்தது. ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதி கள் பொஸ்னியப் பிரதிநிதிகளுடன் "டேய்ற்றன் அமைதி உடன்படிக்கை" (Dayton peace accord) சம்பந்தமாக நடந்த ஒரு விசாரணையில், அதை மீளமைக்க வலியுறுத்தினர். பின்னர் 16\2\2006 இலும் ஐரோப்பியப் பாராளுமன்றம் இதை வலியுறுத்தி, பொஸ்னியாவின் மூன்று சிறுபான்மையினத்தினருடன் யாப்புமாற்றம் சம்பந்தமாகப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவேண்டும் என்றது. இத்துடன் அந்த யாப்பு மனித உரிமைகள், குடி மக்கள் சமமான முறையில் நடத்தப்படல், சிறுபான்மையினப் பிரிவினருக்காக அரச நடைமுறையைச் சுலபமாக்கல் முதலியவற்றையும் உள்ளகப்படுத்தவேண்டும் எனவும் கேட்டது.

**தேர்தல் குளறுபடி**

கூட்டாட்சிமுறை நடைமுறையிலுள்ள நாடுகளில் மக்களின் இன, மொழி, பூகோள அடிப்படையில் தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்பட்டுள்ளன. உதாரணமாக, கனடாவில் 10 மாகாணங்களும், ஜேர்மனியில்16ம் உள்ளன. ஆனால் பொஸ்னியாவில் இரண்டு மட்டுமே உள்ளன. அவை "entities" என்று கூறப்படும். அவை யாவன சேபியர் இன மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட "சேபியன் மாநிலம் (Republika Srpska/ Serbian Republic)", மற்றது, பொஸ்னியர்களையும் குரோற்ஸை யும் பெரும்பான்மையாகக் கொண்ட, "பொஸ்னியா- ஹெர்ஸகோவினா கூட்டமைப்பு" (Federation of Bosnia and Herzegovina) ஆகும். இத்துடன் உலகரீதியாகக் கண்காணிக்கப்பட்ட சிறிய மாவட்டமான "ப்ருகோ" என்பதுமுண்டு.

முஸ்லிம்களை அதிகமாகக் கொண்ட பொஸ்னியா, ரோமன் கத்தோலிக்க மக்களைக் கொண்ட குரோசியா, பாரம்பரிய கிறிஸ்தவர்களைக் கொண்ட சேபியா என்ற மூன்று இனத்திற்கும் வித்தியாச பாகுபாடுகள் கொண்ட இந்தத் திருத்தப்பட்ட பொஸ்னிய யாப்புமுறை அடிவேரோடு மாற்றப்படவேண்டும். இந்த நிலைமையை மேலும் சிக்கலாக்குவதற்கு, "பொஸ்னியா- ஹெர்ஸகோவினா கூட்டமை"ப்பில் மேலும் 10 உப தொகுதிகள் (மாநிலம் எனப்படும்) பிரிக்கப்பட்டுள் தோடு, 84 மாநகரசபைப்பிரிவுகளும் உண்டு. இதே நேரத்தில் சேர்பியக் குடியரசில் 53 மாநகரசபைப் பிரிவுகளே உண்டு.

இந்த திருத்தப்பட்ட யாப்பு முறைக்கு எதிராக வாக்களித்ததற் குக் காரணம், இந்த யாப்பின் சாராம்சத்தில் வரும், பாராளுமன்றத்தில் "entity voting" என்பதே. entity voting, வாக்குகள் முறைப்படுத்தப்படவேண்டுமெனில் மூன்று விதமான நிபந்தனைகள் உண்டு

1- பெரும்பான்மை வாக்குகள்

2- மூன்றில் ஒரு பங்கு குறைந்த பெரும்பான்மை வாக்காவது சேபியக் கூட்டமைப்பு உறுப்பினர்களிடமி ருந்து வரவேண்டும்

3- மூன்றில் ஒரு பங்கு குறைந்த பெரும்பான்மை வாக்காவது "பொஸ்னியா-ஹெர்ஸகோவினா கூட்டமை"ப்பினரிடமிருந்து வரவேண்டும்

யாப்பு மாற்றத்துக்கு எதிரானவர் கள் பொஸ்னியாவினை இரு பிரிவுக ளாகப் பார்க்கிறார்கள். அவர்களது கருத்துப்படி, இவ்யாப்பு மாற்றம் ஏற்றுக்கொள்ளமுடியாதது, காரணம் இவை போருக்கான காரணங்களைச் சட்டபூர்வமாக்கும். இப்போருக்கான காரணங்கள் எல்லை மற்றும் பொருளாதார அடிப்படையிலிருக் கும். ஏனெனில், போர் நிறுத்தப்பட்ட போது பூகோளரீதியாக இந்த இரு பிரிவுகளும் (entities) தமது எல்லை ( நாடு) க்குள்ளேயோ அல்லது மற்றப்பிரிவின் எல்லைக்குள்ளேயோ தான் இருந்தன. ஒவ்வொரு மாவட்டமும் தத்தம் பிரிவுகளுக்குச் (entities) சொந்தமாகும்போது, அந்தப் பிரிவுக்குரிய அரசாங்கம், பொருளாதார அரசியல் மற்றும் சமூகச் சூழலை அப்பிரதேசத்தில் நிலைநிறுத்துவதற்குரிய அதிகாரத்தைப் பெறுகிறது. அப்படியாகப் பெறும் அதிகாரம் மத்திய அரசின் அதிகாரத்தை விடச் சக்தி வாய்ந்ததாகவிருக்கும்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமைப் பதவியைத் தற்சமயம் வைத்திருக்கும் ஒஸ்ரியா நாட்டின் தூதுவரான, (Werner Almhofer) வேர்னர் அல்ம்ஹொபர், யாப்புத் திருத்தத்திற்கு எதிராக வாக்களித்தவர்களைப் பற்றிக் குறிப்பிடுகையில், "அரசியல் மற்றும் இனப் பிரச்சினைகளையே அவர்கள் முன்னெடுக்கிறார்கள், ஐரோப்பிய ஒன்றியத்தின் வழியை அல்ல" என்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரேஷ்ட அமெரிக்க அதிகாரியும், முன்னாள் பொஸ்னியத் தலைமைப் பிரதிநிதியுமான டொனல்ட் ஹேய்ஸ் (Donald Hayes), "கடந்த காலத்திலேயே சிக்கிக்கொண்டிருக்கும் ஒரு சிறு குழு, மீண்டும் போரின் அவலங்களைத் தொடங்கி பழைய கணக்குகளைத் தீர்க்க நினைக்கி றது" என்கிறார்.

தோல்வியைச் சமாதானப்படுத்தும் "பொஸ்னியா- ஹெர்சகோர்வினா கட்சி" தலைவர் ஹரிஸ் சிலாட்ஸிக் (Haris Silajdzic), "இந்த யாப்புத் திருத்தம் ஒதுக்கப்படவேண்டியதே, காரணம் "entity voting" பொஸ்னியாவுக்குக் கெட்டதையே கொடுக்கும்", என்கிறார்.

அதேநேரத்தில், சேர்பியாவின் பிரதம மந்திரியான மிலொரட் டோடிக் (Milorad Dodik), "entity vote" முறை, இரு தடவைகளே பாவிக்கப் பட்டிருக்கிறது, இது ஏன் இவ்வளவு சர்ச்சைக்குரிய விடயமாகவுள்ளது எனத் தெரியவில்லை, முக்கியமாக 'பொஸ்னியா- ஹெர்சகோர்வினா கட்சிக்கு", என்கிறார்.

குரோசியர்களைப் பொறுத்தவரை, இரு பிரிவுகளும் (entities) வைத்திருப்பது பொஸ்னியருக்கும் குரோசியர்களுக்குமான இடத்தைத் தருவதில் தோல்விதரும். இது காரணமாகத்தான் குரோசியப் பாராளுமன்ற உறுப்பினர்கள் HDZ கட்சியிலிருந்து விலகி, HDZ1990 கட்சியை உருவாக்கினர். இரு பிரிவுகள் (entities) ஐ ஆதரிக்கும் சட்டத்தீர்வுகளெதுவும் பொஸ்னியாவின் குரோசியர்களுக்கு ஆதரவான நிலையைத் தராது என்கின்றனர்.

### ஐரோப்பாவின் பல்லினக் கலாசார நாடு

மூன்று கலாசாரங்கள் சந்திக்கும் இடமான பொஸ்னியாவில் ரோமன் கத்தோலிக்கர், பாரம்பரிய கிறிஸ்தவர், முஸ்லிம்கள் என்போர் பால்டிக் கடல் மற்றும் கருங்கடலிலிருந்து அன்ட்ரியாட்டிக் கடல் வரை பரந்து இருப்பதனால், இந்த நாடு ஐரோப்பாவிலேயே மிகக்கூடுதலான இனங்களைக் கொண்ட நாடாகிறது.

கடந்த கால சம்பவங்கள் இன்னும் தேர்தல் நேரங்களில் பயமுறுத்துகிறது. "அழுத்தம் தரும் பிரச்சினைகளை"ப் பற்றிப் பேசுவதானால், பாரிய, புதுமையான கொள்கை மாற்றங்களைச் செய்யவேண்டியிருக்கும் என்பதனால், ஒவ்வொரு இனக் குழுவினதும் அவலங்களைப் பேசுவதும், "தெரிவுசெய்யப்பட்ட" பிரச்சனைகளை அலசுவதும் சுலபமான காரியமாகப் பார்க்கப்படுகிறது.

தற்போதைய நிர்வாகக் கட்ட மைப்பு மிகவும் செலவீனமுள்ளதும், சிக்கலானதும், பொருளாதார ரீதியாகக் கட்டுப்படியாகாததும், அரசியல் ரீதியாக அரைவேக்காடானதும் ஆகும். இதனால் ஐரோப்பிய ஒன்றியம், மற்றும் உலக நாடுகளுடனான பேச்சுவார்த்தைகள் நடத்துவது பெரும் கஷ்டமாக இருக்கிறது. அப்பிழைகளைத் திருத்துவதற்கு நான்கு விதமான, பரிசோதனைக்காக அமைக்கப்பட்ட யாப்புகளை பொஸ்னியத் தலைவர்கள் குறிப்பிடுகின்றனர். அவற்றுள் 'இனப்பிரிவுகளைக் கொண்ட பொஸ்னியா ( the Bosnia of ethnicities), மாநிலங்களைக் கொண்ட பொஸ்னியா (the Bosnia of regions), மக்களின் நாடு பொஸ்னியா (Bosnia as a citizen state) என்பன சிலவாகும்.

அரசியல் யாப்புத் திருத்த வாக்குகள் தோல்வியடைந்தமை, தமது எதிர்காலம் பற்றி முடிவெடுப்பதில் பொஸ்னியர்கள் தடுமாறுவதைக் காட்டுகிறது.

### ஆர்வமின்றிய அறிகுறி

அரசியல் யாப்பு மாற்றங்களுக்கெதிராக பொஸ்னியாவில் வாக்கு கள் போடப்பட்டமை உலக நாட்டவருக்கு ஒரு பிழையான அறிகுறியை அளித்திருக்கிறது. ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைவதற்கான போக்கிலே ஒரு அடி பின்னோக்கியிருக்கிறது. இதற்கான முழுப் பொறுப்பையும் பொஸ்னியாவின் அரசியல்வாதிகள், முக்கியமாக, HDZ1990 கட்சியும் "பொஸ்னியா- ஹெர்சகோர் வினா கட்சி" யும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

யாப்புத் திருத்தத்திற்கு ஆதரவாக வாக்குப்போட்ட எட்டுக் கட்சிகளில் ஒன்றான HNZ என்ற குரோசிய அரசியல் கட்சியின் தலைவர் மிலென்கோ ப்ர்கிக் (Milenko Brkic), எதிர் காலத்தில் பொஸ்னியா ஐரோப்பிய ஒன்றிய அரசியலில் கலப்பதற்கும் அதன் வளர்ச்சிக்கும் இந்தத் தோல்வி ஒரு தடையாக இருக்கக் கூடாது என்கிறார்.

உலகத்திலுள்ள பல ஜனநாயக நாடுகளிலுள்ள அரசியல் வடிவங்களை பொஸ்னியா அறிந்துகொண்டு அவைகளைப் பின்பற்றலாம். 46 உறுப்பினர்களைக் கொண்ட "ஐரோப்பியக் கூட்டணி/சபை" (The Council of Europe) யில் பொஸ்னியா ஒரு உறுப்பினராக 2002 ல் இணைந்தது. இந்தச் சபை "சட்ட மூலமான ஜனநாயகத்திற்கான ஐரோப்பிய விசாரணைக்குழு" (European Commission for Democracy) அல்லது, "வெனிஸ் ஆணைக்குழு" (Venice Commission) என்ற தனிப்பட்ட ஆணைக்குழுவை அமைத்தது. இந்தத் தனிப்பட்ட ஆணைக்குழு மார்ச் 2005ல் பொஸ்னியாவுக்குச் சில ஆலோசனைகளை வழங்கியது. அதாவது "entities" இலிருந்து சில

> **அரசியல் யாப்புத் திருத்த வாக்குகள் தோல்வியடைந்தமை, தமது எதிர்காலம் பற்றி முடிவெடுப்பதில் பொஸ்னியர்கள் தடுமாறுவதைக் காட்டுகிறது.**

அதிகாரங்களைத் தேசிய அளவிற்கு மாற்றுமாறும், தேசியத் தலைமை மற்றும் பாராளுமன்றத்திற்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்யும்போது, அவர்கள், ஐரோப்பிய மனித உரிமைகள் குழு மற்றும் இன்ன பல அமைப்புக்களுக்குப் பொருத்தமானவர்களாயிருக்குமாறு பார்த்துக்கொள்ளவும் அறிவுறுத்தியது. எந்த மாற்றங்கள் வந்தபோதிலும் இரு பிரிவுகளிலிருந்தும் (entities), இந்த மூன்று பிரதான இனக்குழுவினர் (பொஸ்னியர், குரோசியர், சேபியர்) நீதியைப் பெறுவர் எனவும், மத்திய அரசாங்கம் பொஸ்னியாவையும் ஹெர்ஸகோவினாவையும் ஒரே நாடு என அங்கீகரிக்கும் பலமுடையதாக இருக்கும் எனவும் ஐரோப்பிய ஒன்றியம் திருப்திப்பட்டுக்கொள்ளவேண்டியது தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றலோனியாவுக்கு எவ்வளவு அதிகாரம்?

## புதிய சட்டமூலத்தினால் தடுமாறும் ஸ்பெயின்:



**'the Statute' என அழைக்கப்படும் சுய ஆட்சிக்கான இந்தச் சட்டம், 90 சதவிகித வாக்குகளால் கற்றலோனிய சட்டசபையால் முன்னரே அங்கீகரிக்கப்பட்டிருந்தது.**

30/3/2006 ல் ஸ்பெயின் பாராளுமன்றத்தில் ஒரு சட்டமூலம் அங்கீகரிக்கப்பட்டு, அது 189 க்கு 154 வாக்குகளால் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது. அந்தச் சட்டமூலத்தினால், ஸ்பெயின் நாட்டின் ஒரு மாநிலமான கற்றலோனியா (Catalonia), கூடுதல் அதிகாரங்களைப் பெறும். இந்தச் சட்டமூலம் ஸ்பானிய மேல்சபைக் குப்போய், அதன் பின் பொது மக்க ளின் (அங்கீகார) வாக்குக்காக கற்றலோனியாவுக்கு அனுப்பப்படும்.

கற்றலோனியாவின் சட்டசபை இந்தச் சட்டமூலத்திற்கு அமோக ஆதரவை அளித்தபோதும், கற்றலோனியப் பொதுமக்களிடையே இது பற்றி ஒரே விதமான அபிப்பிராயங்கள் இல்லை.

'the Statute' என அழைக்கப்படும் சுய ஆட்சிக்கான இந்தச் சட்டம், 90 சதவிகித வாக்குகளால் கற்றலோ னிய சட்டசபையால் முன்னரே அங்கீகரிக்கப்பட்டிருந்தது. இந்த 'Statute' கற்றலோனியாவுக்கான ஸ்பெயினின் நிதி ஒதுக்கலைக் கூட்டுவதுடன், சில வழக்கு விசாரணைகள் ஸ்பானிய உயர் வழக்காடு மன்றங்களுக்குப் போவதைத் தடுக்கும்.

இந்த 'Statute' முதன் முதலாக கற்றலோனியாவின் சட்டசபையில் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தச் சட்டசபைக்கு இப்போது இடதுசாரிக் கூட்டணியான "கற்றலோனிய சோஷலிசக் கட்சி" தலைமை தாங்குகிறது. இக்கூட்டணி ஜோர்டி ப்யுஜொல் (Jordi Pujol) ஆல் தலைமை தாங் கப்பட்ட "கற்றலோனியா தேசியக் கட்சி" (Catalonia Nationalist Party) ன் 23 வருட ஆட்சிக்குப் பின்னர், நவம்பர் 2003ல் சட்டசபைக்குத் தெரிவு செய்யப்பட்டது. ஜோர்டி ப்யுஜொல் (Jordi Pujol) இனது அரசாங்கம் ஜொஸெ லுயிஸ் ரொட்றிகஸ் ஸபடேரோ (Jose Luis Rodriguez Zapatero) வைத் தலைவ ராகக் கொண்ட அன்றைய சோஷலி சக் கட்சியின் கூட்டணியிலான ஸ்பெயின் மத்திய அரசாங்கத்துடனும், கொன்சவேடிவ் கட்சியின் ஜோஸே மரியா அஸ்னர் (Jos'se Mari'a Aznar) உடனும் பேச்சுவார்த்தைகள் நடத்தியும், புத்திசாலித்தன மான அணுகுமுறைகளாலும் கூட்டாட்சிக்கான பல யுக்திகளை மேற்கொண்டது. இருந்தபோதும் கடும் போக்கையுடைய இடதுசாரித் தேசியவாதிகள் கற்றலோனியாவின் சரித்திரம், கலாசாரம், மொழி போன்றவற்றைக் காரணம் காட்டியும் வரிகளை மீளப்பெறுவதற்காகவும் இன்னும் மேலான அதிகாரங்களுக்கு ஆசைப்பட்டனர்.

'the Statute' என அழைக்கப்படும் சுய ஆட்சிக்கான இந்தச் சட்டத்திற்கான ஆதரவைக் கொடுத்தவர்கள், தற்போது ஆளும் இடதுசாரிக் கூட்டணியான "கற்றலோனிய சோஷலிசக் கட்சி" கடும்போக்காளர்களான தேசியவாதிகள் மற்றும் சோஷலிச



ஜோன் பராஸ் (John Barraass)
*'Barcelona Business' பத்திரிகை முன்னாள் ஆசிரியர்*
தமிழில் வ.விசுவலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதியான பஸ்குவால் மரகோல் (Pascual Maragall) ஐத் தலைவராகக் கொண்ட "கிறீன்" கட்சியினரும் ஆவர். தேசியவாதிகளைக் கொண்ட கற்றலோனியா சட்டசபை எதிர்க்கட்சியினரும் இதற்குப் பின்பலமாக இருந்தனர்.

ஐரோப்பிய ஒன்றியம் ஸ்பெயி னுக்கு அளிக்கும் உதவித்தொகை இப்போது வீழ்ச்சியடைந்ததால், தமது வளர்ச்சித் திட்டங்களுக்கு நிதியளித்துக் கொண்டிருக்கும் ஸ்பெயினினால் கற்றலோனியாவுக்கு வரும் தொகையில் 2.5 பில்லியன் யூரோக்கள் குறைவாகக் கிடைக்கி றது.

பிரச்சனைக்குரிய புதிய Statute இன் குறிக்கோள், வழக்கமாகக் கற்றலோனியாவுக்கு வரும் நிதிப் பங்களிப்பைப் பேணியும், குறைந்த பங்களிப்பை ஸ்பானிய மத்திய அரசுக்கு வழங்குவதுமேயாகும். அதிகாரத்திலிருப்போர் நிதியைப் பயன்படுத்தி தமது சேவையைப் பொதுமக்களுக்குத் தேவையான அள்வில் வழங்காததால், "நிதித் தட்டுப்பாடு" காரணமாக மத்திய ஸ்பானிய அரசுக்குக் குறைந்த அளவு பங்களிப்பையே தம்மால் செய்யமுடியும் என்பது கற்றலோனியாவின் வாதம்.

கற்றலோனியாவின் இந்த நடவடிக்கை நாட்டின் வரிக்கொள்கைக் குக் குந்தகம் விளைக்கும் என்பது விமர்சகரின் வாதம். கற்றலோனியா ஸ்பெயினின் செல்வந்த மாநிலங்க ளில் ஒன்று எனினும், அதுவும் எக்ஸ்ரிமடுரா (Extremadura) மாநிலமும் ஒரேயளவு வரித்தொகையையே அளிக்கின்றன. கற்றலோனியா, தான் ஸ்பெயின் மத்திய அரசிடமிருந்து பெறும் உதவிகளைவிட எட்டு சதவீதம் அதிகமான வரிகளை அரசின் திறைச்சேரிக்கு அளிக்கிறது எனச் சில பொருளியல்வாதிகள் கூறுகின்றனர். இந்தப் புதிய Statute மாற்றப்பட்டு, நிதிப்பங்கீட்டு அதிகா ரக் குழுவின் சட்டமும் திருத்தப்பட் டால், கற்றலோனியா தமது எண்ணெய், சாராயம் மற்றும் புகையிலையிலிருந்து வரும் வரிகளில் 50 சதவீதத்தைத் தாமே வைத்திருக்க அனுமதி கொடுப்போமென மத்திய அரசு விட்டுக்கொடுக்கிறது. இது தமது முன்னைய நிபந்தனைகளி லிருந்து மத்திய அரசு இறங்கி வந்தமையைக் காட்டுகிறது. இந்த விகிதாசாரம் தேவைக்கேற்றபடி எதிர் காலத்தில் கூடும். இந்த உடன் படிக்கை, மேலும் 3 பில்லியன் யூரோக்களை மத்திய அரசு கற்றலோனியாவின் வேலைத்திட்டங்களுக் குச் செலவிடும் எனத் தெரிவிக்கிறது.

ஸ்பானிய நிதியமைச்சர் பெற்றோ சோல்பெஸ் (Pedro Solbes), இந்த வரிப்பங்கீட்டு முறை உடன்படிக்கை ஏனைய மாநிலங்களுக்கும் விரிவுபடுத்தப்படலாமென்கிறார். இந்த நடவடிக்கையால், வருடத்திற்கு மேலும் 20 பில்லியன் யூரோக்கள் கூடுதலாக மாநில அரசாங்கங்களுக்குக் கொடுக்கப்படும். அதே நேரத்தில் மத்திய அரசின் நிதியிலே 15 வீதம் குறையும்.

**சிறுபான்மையினரால் ஆளப்படும் அரசா?**

இந்த வழிமுறைகளால் எல்லோருமே திருப்தியடையவில்லை. 26 ஆசனங்கள் குறைவாகவுள்ள கடும்போக்குத் தேசியவாதிகளாகிய Esquerra Republicana de Catalunya-ERC வின் ஆதரவு தேடும் சோஷலிசக் கட்சித் தலைவர் பஸ்குவால் மரகால் மற்றும், மத்திய அரசின் சபையிலே 12 ஆசனங்கள் குறைவாகவுள்ளதும் அதனால் கற்றலோனியர்களின் ஆதரவு தேவைப்படுபவர்களுமாகிய கொன்சவேடிவ் கட்சி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் போன்ற "சொந்தக்காலில் நிற்கமுடியாத பாராளுமன்றப் பிரதிநிதித்துவம்" பலரால் விமர்சிக்கப்படுகின்றது. "லா ரஸொன்" பத்திரிகை அதிபரான லுயிஸ் மரியா அன்சன் (Louis Mari'a Anson), "பெரும்பான்மை அரசினை எந்த ஒரு சிறுபான்மைத் தேசியவாதக் கட்சியும் மிரட்டாதபடி ஒரு சட்டம் கொண்டுவரவேண்டும்" என்கிறார். இக்கருத்துக் கொஞ்சம் மிகையாகவிருந்தாலும், கற்றலோ னியத் தேர்தல் தொகுதியில் 16 சத வீதம் மட்டுமே பெரும்பான்மையும், முழு ஸ்பானியர்களுடைய வாக்குக ளிலே 2.5வீதம் மட்டுமே பெரும்பான் மையும் கொண்ட (Esquerra Republicana de Catalunya-ERC) வின் அதிமேம்பட்ட அதிகாரம் தெரிகி றது. அன்ஸன் வலதுசாரியைச் சேர்ந்த ஒரு பிரச்சனைக்குரிய புள்ளி எனினும், அவரது "ல ரஸொன்" பத்திரிகை, ஸ்பெயினிலேயுள்ள ஆறு பிரதான பத்திரிகையிலே ஒன்று.

சட்டசபையின் தலைவரான புஜோலை விட, Esquerra Republicana de Catalunya-ERC யின் தலைவர் ஜோசப் ல்லுயிஸ் கரொட்-ரொவீரா (Joseph Lluis Carod-Rovira) மிகவும் கடினமான அரசியல் போக்கைக் கொண்டிருக்கிறார். அவர், ஈ.ரீ.ஏ (ETA) எனப்படும் ஸ்பானியத் தீவிரவாதக் குழுக்களு டன் இரகசியக் கூட்டங்களை மேற் கொள்வதாகத் தீவிர வலதுசாரிப் பத்திரிகையினர் குற்றஞ்சாட்டியுள்ள னர். (இந்த இவர்களின் தீவிரவாதத் தொடர்பு காரணமாகவும் வேறு பல காரணங்களுக்காகவும் கற்றலோனியாவின் பொருட்களை சில ஸ்பானியர் வாங்குவதில்லை). இப்பத்திரிகைகளுக்குப் பதில் தாக்குதலாக இவர், "புதிய Statute', பாவனைக்கு ஆகாத அளவிற்கு மண்ணோடு மண்ணாகிப் போய் விட்டது" என்கிறார். அதே நேரத்தில் இந்தப் 'புதிய Statute', கைமாறப்படுவதற்குரிய பேச்சுவார்த்தைகள் மட்றிட்(Madrid) இலே நடந்துகொண்டிருக்கையில், மார்ச் 18 அன்று ஜோசப் ல்லுயிஸ் கரொட்-ரொவீரா (Joseph Lluis

**கற்றலோனியாவின் சட்டசபை உறுப்பினர்கள் 89 சதவீதமானோர் 'புதிய Statute' தொடர்பான கருத்துக்கணிப்புக்கு வாக்களித்தபோது, அதில், 49.4 சதவீதமானோர் கற்றலோனியாவை ஒரு தனி நாடாகக் கருதவில்லை. 46.8 சதவீதமானோரே கற்றலோனியத் தேசியத்திற்கு ஆதரவாக வாக்களித்தனர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Carod-Rovira) தலைமையில் பெரும் சுதந்திரச் சார்பு ஊர்வலம் நடைபெற்றது. அவ்வூர்வலத்தினர், "நாம் ஒரு நாட்டினர். எம்மைப்பற்றி முடிவுசெய்ய எமக்கு அதிகாரம் இருக்கிறது" போன்ற சுலோகப் பதாகைகளைத் தாங்கியிருந்தனர். ஏறக்குறைய ஒரு மில்லியன் ஆதரவாளர்கள் சமூகமளித்ததாகக் கூட்டத் தினை ஒழுங்கு செய்தோர் கூறிய போதும், 70,000 பேரே வந்ததாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆனால், கற்றலோனியாவின் சட்டசபை உறுப்பினர்கள் 89 சதவீதமானோர் செப்டம்பர் 30 அன்று, 'புதிய Statute' தொடர்பாக வாக்குப்போட்ட போது, ஒரு கருத்துக்கணிப்பு எடுக்கப்பட்டது. அதில், 49.4 சதவீதமானோர் கற்றலோனியாவை ஒரு தனி நாடாகக் கருதவில்லை. 46.8 சத வீதமானோரே கற்றலோனியத் தேசியத்திற்கு ஆதரவாக வாக்களித்தனர்.


**தனிப்பட்டோர் மற்றும் ஒன்றிணைந்தோர் உரிமைகள்**

அரசியல் விமர்சகர் வில்செஸ் (Jorge Vilches) என்பவர், "கற்றலோனியாவின் இந்த சட்டவாக்க மறுஅமைப்பு (Statute reform), தனிப்பட்டோரின் உரிமைகளை இல்லாமல் செய்கிறது" என்கிறார். பல சட்ட வல்லுனர்கள் இதை ஆமோதிக்கிறார் கள்.

இந்தப் 'புதிய Statute' இன் பிரிவுகள் அதன் தெரிவுக்குழுவினால் அகற்றப்பட்டுக்கொண்டிருக்கும் அதே நேரம், இது தொடர்பான பரிசீலனையைப் பிற்போட சட்ட நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. இது சட்ட நீதிமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டால், பின்னர் கற்றலோனியாவின் பொதுஜன வாக்கெடுப்பிற்காக இது விடப்படும். இதே நேரத்தில் கொன்சவேடிவ் கட்சி, மற்றிட்டின் (Madrid)ல் இந்தப் 'புதிய Statute' ஐ அங்கீகரிக்கலாமா என்பதற்காக நாடளாவிய வாக்கெடுப்பு நடத்தக்கோரி பாரிய கையெழுத்துவேட்டை நடத்திவருகிறது. இது வரைக்கும் 4 மில்லியன் கையெழுத்துக்கள் சேகரிக்கப்பட்டிருக்கின்றன. இதுமாதிரியான முறைப்பாடுகள் வழக்கமாக ஒரு பொதுமக்கள் ஏற்பாடாகத்தான் இருக்கும். ஏனெனில் இவை வெற்றியளிக்கும் பட்சத்தில் அடிப்படைச் சட்டத்திலேயே மாற்றங்கள் ஏற்படுத்தவேண்டிவரும்.

இந்தப் 'புதிய Statute' இனால் கற்றலோனியாவின் பாஷை மீளமுலாக்கம் மற்றும் அதன் பாதுகாப்பு, வரி மீள்பங்களிப்பு, கற்றலோனியா உயர் நீதிமன்றத்தின் சட்ட அதிகாரம் போன்றன பிரச்சினைக்குரிய விடயங்களாகும். இவ்வதிகாரம் தத்தெடுக்கப்பட்டால், சில விசாரணைகள் ஸ்பானிய மேல் நீதிமன்றத்திற்குப் போகும் அவசியம் வராது.

. "மட்றிட் (Madrid)ன் அரசியல் நீதிமன்றத்துடன் சேர்ந்த மாநில உயர் நீதிமன்றத்தை விடுத்து, கற்றலோனியா தனக்கென ஒரு தனியான நீதி பரிபாலனசபை அமைக்குமென்று கருதுவது பிழையாகும்" என்று, 'புதிய Statute'ஐ ஆதரித்து கற்றலோ னியா



**"இது தனியான நீதித்துறையல்ல. கனடா, அமெரிக்கா, ஜேர்மனி போன்ற நாடுகளிலிருப்பது போன்ற சமஷ்டி அரச நீதித்துறை முறையுமல்ல"**

சட்டசபையின் நீதியமைச்சர் ஜோசப் மரியா வலெஸ் (Joseph Maria Valle's) தெரிவித்துள்ளார்.

"இந்தப் 'புதிய Statute' விற்கான ஆலோசனை நீதித்துறையில் சம்பந்தப்படாத வேலைக்குழுவினர் மீதான (non- judicial staff) முழு அதிகாரத்தினையும் நீதித்துறை நிகழ்வுகளில் கட்டுப்படுத்தப்பட்ட அதிகாரத்தை யும் எதிர்பார்க்கிறது. கற்றலோனியா வின் வழக்காடு மன்றங்களும் நீதிபதிகளும் ஸ்பானிய சட்டத்தையும் அதனோடு தொடர்பான நிர்வாகத்தினையும் இது நாள்வரையுமுள்ள வழக்கத்தையும் தொடர்ந்து பேணுவார்கள்" என அவர் மேலும் கூறுகிறார். "இது தனியான நீதித்துறையல்ல. கனடா, அமெரிக்கா, ஜேர்மனி போன்ற நாடுகளிலிருப்பது போன்ற சமஷ்டி அரச நீதித்துறை முறையு மல்ல" என்றும் அவர் வலியுறுத்துகி றார்.

**உலகத்தின் கண்ணோட்டம்**


கடந்த புத்தாண்டின்போது, அகில உலகத்தின் கவனமும் கற்றலோனியாவின் பக்கம் திரும்பியது. ஏனெனில், இராணுவத் தளபதியான ஜோஸே மேனா (Jos'e Mena) ஸ்பெயினின் அரசியல் சட்டப்பிரிவு 8ஆம் அதிகாரத்தின்படி, ஸ்பெயினின் எல்லைக்கும் பாதுகாப்புக்கும் ஏதும் குந்தகம் ஏற்படின், கற்றலோனியாவுக்கெதிராக பொருத்தமான இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்" என்றார். இது கற்றலோனியாமீது சிறிய அனுதாபம் வரக் காரணமாகவும், விமர்சனங்களை அதிகம் கேட்டறியாத உள்ளூர் அரசியல் வாதிகளுக்கு இது புதியதாகவுமிருந்தது.

'Ciutadans de Catalunua' என்ற, புத்திஜீவிகளைக்கொண்ட மத்திய-இடதுசாரிக் குழு ஒன்று, தம்மை ஒரு அரசியல் கட்சியாக மாற்றத் தீர்மானித்தது. அடுத்த தேர்தலில், தேசியவாதிகளல்லாத இவர்கள் நிலைமை என்ன என்றறிவது ருசிகரமாக இருக்கும். அவர்கள் தாம் குறைந்தது 12 ஆசனங்களையாவது எடுக்கவேண்டும் என எதிர்பார்க்கிறார்கள். அப்படி நடந்தால், அவர்களது கட்சிக்குச் சட்டசபையில் ஆரோக்கியமான அதிகாரம் ஏற்படுவதோடு, கற்றலோனியாவிலுள்ள கற்றலோனியர்களல்லாதவர்களின் உரிமைகள் பறிபோவது நிறுத்தப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"எதைப் பற்றிப் பயப்படுகிறேனா? எனக்கு எல்லாம் பயம்.
அந்தப் பயத்தைப் பற்றிய பயமே என்னைப் பயமுறுத்துகிறது.
எனது முடியாமையைக்கண்டு எனக்குப் பயம், எனக்குத் தெரியாத
-பெயரே தெரியாத- பொருள்களைப்பற்றி, ..... பயமென்ற
சொல்லே என்னைப் பெரிதாகப் பயப்படுத்துகிறது".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org